தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:221 | 25-02-2026 | புதன்கிழமை | Free E- Paper | • சென்னை • மதுரை • கோவை • திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

25.02.2026 மாசி 13
புதன் கிழமை

சூரிய உதயம் 6.30

திதி:
இன்று அதிகாலை 4.10 வரை அஷ்டமி பின்பு நவமி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 2.08 வரை ரோகிணி பின்பு மிருகசீரிடம்.

யோகம் :
இன்று அதிகாலை 3.03 வரை வைதிருதி பின்பு விஷ்கம்பம்.

கரணம் :
இன்று அதிகாலை 4.10 வரை பவம் பின்பு மாலை 3.38 வரை பாலவம் பின்பு கௌலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.29 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று பிற்பகல் 2.08 வரை சுவாதி பின்பு விசாகம்.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30.

எமகண்டம்
காலை 7.30 – 9.00.

குளிகை
காலை 10.30 12.00.

இன்று நவமி நாள்.
ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

### தேர்தல் ஏற்பாடுகளை ஆய்வு செய்ய

# தேர்தல் ஆணைய குழு இன்று சென்னை வருகை

**சென்னை, பிப்.25:**
இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் இன்று சென்னை வருகிறார். புதுச்சேரி உயரதிகாரிகளுடன் சட்டப்பேரவைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்துகிறார்.

தமிழகசட்டப்பேரவைக்கான பதவிக் காலம் முடிவடையும் நிலையில், தேர்தல் அறிவிப்பு மார்ச்சில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பேரவைத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளில் இந்திய தேர்தல் ஆணையம் முனைப்பாக ஈடுபட்டுள்ளது. வழக்கமாக தேர்தல் நடைபெறும் மாநிலங்களில், தலைமைத் தேர்தல் ஆணையர் தலைமையிலான குழுவினர் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்த பின் தேர்தல் தேதி அறிவிக்கப்படும்.

அந்த வகையில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தேர்தல் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்ய, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையில், தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி உள்ளிட்ட 7 பேர் கொண்ட குழு இன்று சென்னை வருகிறது. இன்று மதியம் 1 மணிக்கு சென்னை வரும் குழுவினர், தனி விமானம் மூலம் புதுச்சேரி செல்கின்றனர். அங்கு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பணிகளை ஆய்வு செய்துவிட்டு, அங்கேயே இரவு தங்குகின்றனர். தொடர்ந்து நாளை 26-ம் தேதி காலை அங்கிருந்து புறப்பட்டு 11 மணிக்கு சென்னை வருகின்றனர்.

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தங்கும் அவர்கள், முதல் கட்டமாக தலைமைச் செயலர், டிஜிபி, மாவட்ட தேர்தல் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகின்றனர். அடுத்ததாக, வருமான வரி, சுங்கத் துறை, அமலாக்கத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகின்றனர்.

அதைத் தொடர்ந்து, அங்கீகரிக்கப் பட்ட தேசிய, மாநில கட்சிகளின் பிரதிநிதி களின் கருத்துகளை கேட்ட பின், தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனாவுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கிவிட்டு 27-ம் தேதி மாலை டெல்லி செல்கின்றனர். முன்னதாக, எஸ்ஐஆர் பணிகள் நடைபெற்று வந்த நிலையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை ஆணையர்கள் கடந்த வாரத்தில் தமிழகம், புதுச்சேரியில், இறுதி வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் தேர்தல் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்து திரும்பினர்.


தலைமைத் தேர்தல் அதிகாரி வருகை, தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து நேற்று தலைமைச் செயலர் நா.முருகானந்தம் தலைமையில் உயரதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

8 ஐஏஎஸ் இடமாற்றம்: தலைமைச் செயலர் நா.முருகானந்தம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: பொருளியல் மற்றும் புள்ளியியல் ஆணையர் ஆர்.ஜெயா, சிறப்பு முயற்சிகள் துறை செயலராகவும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை இயக்குநராகவும், செங்கல்பட்டு ஆட்சியர் த.சிநேகா, காஞ்சிபுரம் ஆட்சியராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செங்கல்பட்டு சார் ஆட்சியராக இருந்த எஸ்.மாலதி ஹெலன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராகவும், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி சார் ஆட்சியர் கு.ரவிக்குமார், கரூர் மாவட்ட ஆட்சியராகவும், மத்திய அரசுப் பணியில் இருந்து திரும்பிய சந்திரசேகர் சாகமுரி, சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், டிஎன்பிஎஸ்சி முன்னாள் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் அ.சண்முகசுந்தரம், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலராகவும், நெ.பொன்மணி ஈரோடு வணிகவரி இணை ஆணையராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.




# இனி கேரளா அல்ல 'கேரளம்' பெயர் மாற்றத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்!




**புதுடில்லி, பிப்.25.**
கேரளா'வை 'கேரளம்' என்று பெயர் மாற்றும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. கடந்த 2024ஆம் ஆண்டு பினராயி விஜயன் தலைமையிலான கேரள சட்டப்பேரவையில் இந்த பெயர் மாற்றத்திற்கான தீர்மானம் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் இந்த மசோதாவிற்கு இன்று நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மலையாளத்தில் மாநிலத்தின் பெயர் 'கேரளம்' என்றுதான் உள்ளது. ஆனால், ஆங்கிலத்திலும் இந்திய அரசியலமைப்பிலும் 'கேரளா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை அனைத்து மொழிகளிலும் 'கேரளம்' என்றே அழைக்க வேண்டும் என அம்மாநில அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அமைச்சரவையின் ஒப்புதலை தொடர்ந்து, அரசியலமைப்பின் பிரிவு 3 இன் கீழ் இந்த மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். அதன் பின் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெறப்படும். குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்கும்பட்சத்தில் பெயர் நடைமுறைக்கு வரும்.

## கேரளாவுக்கு மட்டும் பெயர் மாற்றம்.. ஆனால் மேற்கு வங்கத்துக்கு ஓரவஞ்சனை – மம்தா ஆதங்கம்

"மாநிலத்தின் பெயர் 'West Bengal' என்று 'W' எழுத்தில் தொடங்குவதால், தேசிய அளவிலான கூட்டங்கள், தேர்வுகள் மற்றும் நேர்காணல்களில் மேற்கு வங்க மாணவர்கள் மற்றும் பிரதிநிதிகள் எப்போதும் கடைசியாகவே அழைக்கப்படுகின்றனர்.

நானும் கூட்டங்களில் கடைசியாகப் பேசும் வாய்ப்பையே பெறுகிறேன்.மேற்கு வங்க சட்டமன்றத்தில் மாநிலத்தின் பெயரை Bangla (வங்காளம்) என மாற்ற ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டது.

இருப்பினும், மத்திய அரசு அதனை நிலுவையில் வைத்துவிட்டு, கேரளாவின் கோரிக்கையை மட்டும் விரைவாக நிறைவேற்றியிருப்பது வஞ்சகமானது.

கேரளாவில் ஆளும் இடதுசாரி கட்சிக்கும் பாஜகவுக்கும் இடையே வளர்ந்து வரும் ரகசியக் கூட்டணியின் காரணமாகவே, அம்மாநிலத்தின் பெயர் மாற்றத்திற்கு மத்திய அரசு உடனே சம்மதித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## நல்லகண்ணுவுக்கு அதிதீவிர சிகிச்சை : மருத்துவமனை தகவல்



**சென்னை, பிப்.25:**
இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவா நல்லகண்ணுவுக்கு அதிதீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரத்த அழுத்தம், சிறுநீரக கோளாறு காரணமாக பிப்ரவரி 1 ஆம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவருக்கு, பல்துறை மருத்துவக் குழுவினா தொடா சிகிச்சை அளித்து வருகின்றனர்.

வென்டிலேட்டர் உதவியுடன் செயற்கை சுவாசம் வழங்கப்பட்டு வந்த நிலையில், கடந்த இரு நாள்களாக அவரின் உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டது.

இந்நிலையில், நல்லகண்ணு உடல்நிலை குறித்து மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளர் பாஸ்கரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நல்லகண்ணுவுக்கு பல்வேறு மருத்துவத் துறை நிபுணர்களால் அதிதீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த 23 ஆம் தேதி அவருடைய உடல்நிலையில் ஒரு மிகப்பெரிய பின்னடைவு ஏற்பட்டது. அவருக்கு அளிக்கப்பட்டு வந்த செயற்கை சுவாச கருவி சிகிச்சை மற்றும் மருந்துகள் பல்வேறு மருத்துவ நிபுணர்களின் பரிந்துரைப்படி அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது, அவரது உடல்நிலையை பல்வேறு சிகிச்சைகள் மூலம் சீராக்க அதிதீவிர முயற்சியுடன், 24 மணிநேர தொடர் அதிதீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய கட்சி தொடங்கினார் சசிகலா

### அண்ணா, எம்ஜிஆர், ஜெ. உருவம் பொறித்த கொடி அறிமுகம்

**ராமநாதபுரம், பிப்.25:**
தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், புதிய அரசியல் கட்சியை நிறுவியுள்ளார் சசிகலா. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு சசிகலா தலைமையில் ராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

"தமிழ்நாட்டு மக்கள் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. அதனால் அவர்கள் என்றென்றும் விடமாட்டார்கள். அந்த வகையில் இந்த மண்ணில்தான் அந்த முடிவை எடுக்க வேண்டும் என இருந்தேன். என் மனதில் இருந்த அனைத்தையும் உங்களிடம் சொல்லிவிட்டேன். இப்போது நான் என்ன நினைக்கிறேன் என்றால், நான் பேசாமல் இருந்தால் அது ஜெயலலிதாவின் தொண்டர்கள் மற்றும் தமிழ்நாட்டு மக்களுக்கும் செய்கிற மிகப்பெரிய துரோகம் ஆகிவிடும். அதனால் ஒரு தீர்க்கமான முடிவை நான் எடுத்துள்ளேன்.

தமிழகத்துக்காக, தமிழகத்தில் உள்ள மக்களுக்காக, நம் தொண்டர்களுக்காக புதிய களத்தை காணப்போகிறோம். ஒரு புதிய கட்சியை ஆரம்பிக்க போகிறோம். இது ஒரு திராவிட கட்சியாக அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா வழியில் ஏழை எளிய சாமானிய மக்களுக்கான கட்சியாக, எதிரிகளையும்,



துரோகிகளையும் வேரறுக்கும் கட்சியாக செயல்படும்.

நமது கட்சியின் கொடியை இங்கே அறிமுகம் செய்வதும் மகிழ்ச்சி அடைகிறேன். இது கருப்பு, வெள்ளை, சிவப்பு வண்ணத்தில் அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரின் உருவத்தை தாங்கி நிற்கின்ற கொடியாக பறக்கும். கட்சியின் பெயரை மட்டும் விரைவில் அறிவிக்கிறேன். இதில் எந்தவித மாற்று கருத்துக்கும் இடமில்லை என்பதை அனைவருக்கும் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன். களம் காண்போம்..." என்று சசிகலா பேசினார். அதன் பின்னர் கட்சி கொடியை அறிமுகம் செய்தார்.

முன்னதாக, ஜெயலலிதா மறைவுக்குப்பின் அதிமுகவின் பொதுச் செயலாளரான வி.கே. சசிகலா, 2017-ல் ஊழல் வழக்கில் சிறை சென்றதால், அந்த பதவியை எடப்பாடி பழனிசாமி கைப்பற்றினார். அதன்பின் டிடிவி தினகரன், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் போன்றோர் அதிமுகவிலிருந்து நீக்கப்பட்டனர்.

2021-ல் சிறையிலிருந்து விடுதலையாகி வந்த சசிகலாவை அதிமுகவில் சேர்க்கவில்லை. அதன் பின்னரும் தான் அதிமுகவின் பொதுச் செயலாளர், அதிமுகவில் இருந்து பிரிந்து சென்ற அனைவரையும் ஓரணியில் இணைத்து, ஜெயலலிதாவின் ஆட்சியை கொண்டு வருவேன் என கூறி அமைதியாக இருந்து வந்தார்.

இந்நிலையில், வரும் சட்டப்பேரவை தேர்தலுக்குள் அதிமுகவில் இருந்து பிரிந்து சென்ற தலைவர்கள் மீண்டும் இணைக்கப்படுவர் என எதிர்பார்த்தனர். ஆனால் சசிகலா, டிடிவி தினகரன், ஓபிஎஸ் ஆகியோரை அதிமுகவில் இணைக்க முடியாது என அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். இதன் தொடர்ச்சியாக, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி. தினகரன் மட்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்க்கப்பட்டார்.

அமைதியாக இருந்த சசிகலா, கடந்த சில மாதங்களாக அவ்வப்போது அறிவிப்புகளை வெளியிட்டு வந்தார். கடந்த அண்ணா பிறந்தநாளின்போது திமுகவை வீட்டுக்கு அனுப்பி மக்கள் விரும்பும் ஆட்சியை கொண்டு வருவேன் என்றார். சமீபத்தில் சென்னை போயஸ் கார்டனில் உள்ள வீட்டில் தனது ஆதரவாளர்களை சந்திப்பதை வழக்கமாக்கினார். அதிமுகவில் தனக்கு இடமில்லை எனத் தெரிந்துவிட்டதால் சசிகலா புதிய கட்சி தொடங்கப்போவதாக அவரது ஆதரவாளர்கள் கூறி வந்தது இப்போது நிஜமாகியிருக்கிறது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice ➤ Loss of Share
➤ Legal Notice ➤ Merger
➤ Tender Notice ➤ Acquisition
➤ Society Notice ➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

# திருக்குறள் குறள்-541

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை



யாரிடத்திலும் (குற்றம் இன்னதென்று) ஆராய்ந்து, கண்ணோட்டம் செய்யாமல் நடுவுநிலைமைப் பொருந்தி (செய்யத்தக்கதை) ஆராய்ந்து செய்வதே நீதிமுறையாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



உறவுகளிடம் பேச
வைப்பதும் பணம்தான்
உறவுகளிடம்
பேசவிடாமல் விலக்கி
வைப்பதும்
பணம் தான் உறவுகளை
தீர்மானிப்பதும் பணம்
தான்

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## கலைப் பண்பாட்டு துறை தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் நடத்திய சென்னை மாவட்ட கலைப்போட்டிகள்



**சென்னை, பிப்.25:**
கலைப் பண்பாட்டு துறை தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் நடத்திய சென்னை மாவட்ட கலைப்போட்டிகள் ஸ்ரீதர்ஷினி கலைக்கூட மாணவர்கள் ஓவிய கலை பிரிவில் முத்தழகு மீனாட்சி முதலிடம் முத்தழகு சேதுபதி இரண்டாம் இடம் மனோ மதன் இரண்டாம் இடம் சித்தார்த் முதலிடம் ஜித்தேஷ் இரண்டாம் பெற்றனர். கலை பண்பாட்டு துறையின் இயக்குனர் திருமதி சா வளர்மதி ஐஏஎஸ் மற்றும் இணை இயக்குனர் ஹேமநாதன் அவர்கள் கலை பண்பாட்டு துறை வளாகத்தில் பரிசினை வழங்கி கௌரவித்தார்.

## 100-வது கிருத்திகையை முன்னிட்டு வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானுக்கு திருக்கல்யாணம்



**பொள்ளாச்சி, பிப்.25:**
பொள்ளாச்சி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானுக்கு 100-வது கிருத்திகை விழாவை முன்னிட்டு திருக்கல்யாணம் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் பூக்களால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, கந்த சஷ்டி கவசம் பாராயணத்துடன், மாங்கல்ய தாரணமும், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் வெகு சிறப்பாக நடைபெற்றது. திரளான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு முருகப்பெருமானை வேண்டி அருள் பெற்றனர். இவ்விழாவினை மகிளா விபாக் மற்றும் மகாசபா இளைஞர் அணி இணைந்து வெகு சிறப்பாக நடத்தினார்கள். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. அனைவருக்கும் தாம்பூலம் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## உலக தாய்மொழி தின வில்லிசை நிகழ்ச்சி..!



**வந்தவாசி, பிப் 25:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம் மற்றும் தென்னாங்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து உலக தாய்மொழி தின வில்லிசை நிகழ்ச்சியை கல்லூரி அரங்கில் நடத்தினர்.

நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் சித. ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்க தலைவர் பீ.ரகமத்துல்லா, துணைத் தலைவர் பா.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஏ.எழில் வசந்தன் வரவேற்றார்.

'தமிழைக் கொண்டாடுவோம்' என்ற தலைப்பில் வில்லிசை நிகழ்ச்சி புலவர் மா.இரகுபதி குழுவினரால் நடைபெற்றது. இசை உதவியாளர் சத்யா, தபேலா கலைஞர் ஆராசூர் கோ.மூர்த்தி, கீபோர்டு ராஜ் குமார் ஆகியோர் உடன் பங்கேற்றனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் கல்லூரி கணினி அறிவியல் துறை தலைவர் முனைவர் நா.மனோகரன், வணிகவியல் துறை தலைவர் ர.மணிமுருகன், ஆங்கிலத் துறை தலைவர் ரா.சுமதி, கணினி துணைக் துறை தலைவர் வ.சந்திரசேகர், விலங்கியல் துறை தலைவர் ப.மோகனவள்ளி, இயற்பியல் துறை தலைவர் இரா.பெரியசாமி, தமிழ்த்துறைத் துறை உதவி பேராசிரியை தா.சுகந்தி, வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்க துணைத் தலைவர் வந்தை பிரேம், செயற்குழு உறுப்பினர்கள் ஆ.முரளி, ஸ்ரீமாந்த், எக்ஸ்னோரா கிளை தலைவர் சு. தனசேகரன், இயக்குநர் விஜய் ஆதிநாதன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். இந்த நிகழ்வில் அகநானூறு புறநானூறு, சீவக சிந்தாமணி உள்ளிட்ட தமிழ் இலக்கிய பாடல்கள் வில்லிசையாக பாடப்பட்டது. இந்த நிகழ்வில் சுமார் 400 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர். இறுதியில் கோட்டை தமிழ்ச் சங்க பொருளாளர் சீ.கேசவராஜ் நன்றி கூறினார்.

## அன்னதானம்



அரியலூர் பேருந்து நிலையம் அருகே எம்ஜிஆர், ஜெயலலிதா சிலைகளுக்கு அதிமுக மாவட்டச் செயலாளர் தாமரை எஸ்.ராஜேந்திரன் நேற்று மாலை அணிவித்து அன்னதானம் வழங்கினார்.

## ஜெயலலிதா பிறந்த நாள் விழாவையொட்டி அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு வாழ்த்து



**சீர்காழி, பிப் .25:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78 - ம் ஆண்டு பிறந்த நாள் விழா அ.தி.மு.க. சார்பில் கொண்டாடப்பட்டது. பிறந்த நாள் விழாவை சிறப்பாக நடத்திய அ.தி.மு.க. நிர்வாகிகளான மாநில அம்மா பேரவை துணை செயலாளர் மார்கோனி, சீர்காழி நகர கழக செயலாளர் சுரேஷ் ஆகியோருக்கு மயிலாடுதுறை மாவட்ட பா.ஜ.க. வர்த்தகர் பிரிவு மாவட்ட செயலாளர் ஜி.சுந்தரவடிவேல் பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் சண்முகம், லட்சுமிநாராயணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## 'பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்' விழிப்புணர்வு





**திருவண்ணாமலை, பிப்.25:**
திருவண்ணாமலை ஹோட்டல் விஜய் பார்க்கில் உள்ள கூட்டரங்கில் சமூக நலன் மற்றும் மகளில் உரிமைத் துறை சார்பில் நடைபெற்ற 'பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்' என்ற திட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுத்தல் மற்றும் விழிப்புணர்வு குறித்த பயிலரங்கத்தை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப அவர்கள் விழிப்புணர்வு பதாகைகளை வெளியிட்டார். துறையைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கல்லூரி மாணவிகளின் நாட்டு நலப்பணி திட்ட முகாம்



திண்டுக்கல் எம்விஎம் அரசு மகளிர் கல்லூரி மாணவிகளின் நாட்டு நலப்பணி திட்ட முகாம் மீனாட்சிநாயக்கன்பட்டியில் நேற்று தொடங்கியது. இதில் மாணவிகள் மரக்கன்று நட்டனர்.

## பெண் குழந்தைகளுக்கு அதிமுக சார்பில் தங்க மோதிரம்



சோளிங்கர் அரசு மருத்துவமனையில் நேற்று ஜெயலலிதா பிறந்தநாளில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு அதிமுக சார்பில் தங்க மோதிரம் வழங்கப்பட்டது.

## அகில இந்திய மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் கூட்டமைப்பின் இரண்டு நாள் தேசிய மாநாடு




**குருக்ஷேத்ரா, பிப்.25:**
அகில இந்திய மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் கூட்டமைப்பின் இரண்டு நாள் தேசிய மாநாடு உள்ளூர் சைனி சமாஜ் தர்மசாலாவில் நிறைவடைந்தது. 400 பிரதிநிதிகளும் 100 பார்வையாளர்களும் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டின் இரண்டாவது நாளில், பொதுச் செயலாளர் நிறுவன அறிக்கையை சமர்ப்பித்தார், பொருளாளர் நிதி அறிக்கையை சமர்ப்பித்தார்.

நிறுவன மற்றும் பொருளாளர் அறிக்கைகள் மீதான விவாதத்தில் இருபத்தி மூன்று பிரதிநிதிகள் பங்கேற்றனர். இரண்டு அறிக்கைகளும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஒரு நிறுவனக் குழுவை மாநாடு ஒருமனதாக அமைத்தது.

## ஜெயலலிதா சிலைக்கு அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை



ஜெயலலிதா பிறந்தநாளையொட்டி மதுரையில் அவரது சிலைக்கு அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## வெம்பாக்கம் அ.தி.மு.க..வின் மேற்கு ஒன்றியத்தில் ஜெ..வின் பிறந்தநாள் விழா: காலை முதல் - இரவு வரை இடைவிடாது அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி !



**செய்யாறு, பிப். 25 :**
செய்யாறு அடுத்த வெம்பாக்கம் அ.தி.மு.க.,வின் மேற்கு ஒன்றிய செயலாளர் வயலூர் ராமநாதன் ஏற்பாட்டில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்த நாளையொட்டி காலை முதல் - இரவு வரை பொது மக்களுக்கு அன்னதானம் வாழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் விழா நேற்று அ.தி.மு.க., சார்பில் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. செய்யாறு சட்டசபை தொகுதிக்குட்பட்ட வெம்பாக்கம் அ.தி.மு.க.,வின் மேற்கு ஒன்றிய செயலாளர் வயலூர் ராமநாதன் ஏற்பாட்டில், வயலூர் கிராம கூட்டு சாலையில் உள்ள அலுவலகத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஜெயலலிதாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது.

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் தூசி மோகன், முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி காலை முதல் - இரவு வரை தொடர்ந்து நடந்தது.

இந்நிகழ்ச்சியில் அ.தி.மு.க., பொறுப்பாளர்களான நமண்டி பாலன், பாராசூர் பெருமாள், அருண், தவமணி, வெற்றிச்செல்வன், கன்னியப்பன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அரசு கல்லூரியில் இணையக்குற்றங்கள் தடுப்பு விழிப்புணர்வு போட்டிகள்



**அறந்தாங்கி, பிப்.25:**
ஆவுடையார் கோயில் அருகே பெருநாவலூரில இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில், இணையக்குற்றங்கள் தடுப்பு விழிப்புணர்வு போட்டிகள் நடைபெற்றன.

கல்லூரி முதல்வர் முனைவர் ம.துரை அவர்களின் வழிகாட்டுதல்படி, சைபர் குற்றங்கள், குழந்தைகள் மற்றும் பெண்கள் குற்றத்தடுப்பு விழிப்புணர்வு ஆகிய தலைப்புகளில் ஓவியம், பேச்சு மற்றும் நாடகப்போட்டிகள் நடைபெற்றன.

கல்லூரி பல்துறை மாணவ,மாணவியர் பலரும் பங்கேற்றனர்.

போட்டி ஏற்பாடுகளைக் கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கா.காளிதாஸ், ஆங்கிலத்துறை விரிவுரையாளர்கள் தி.சிவராஜன், ரா.ப. நவீன்பாலாஜி ஆகியோர் ஒருங்கிணைப்பில் நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர்கள் செய்திருந்தனர்.



## ஜெயலலிதா பிறந்தநாள் விழா

திருவண்ணாமலை கிழக்கு மாவட்டத்தில் நேற்று எஸ்.ராமச்சந்திரன் முன்னிலையில் ஜெயலலிதா பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

## கல்லூரி மாணவர்களுக்கு இயற்கை விவசாயப் பயிற்சி

திருவாரூர், பிப்.25:

ஆர்.வி.எஸ் வேளாண்மை கல்லூரி மாணவர்கள், புல்லவராயன் குடிகாடு இயற்கை விவசாயி அருள் தலைமையில் நடைபெற்ற குழு கூட்டத்தில், விவசாயிகளுடன் இயற்கை விவசாயம் குறித்த பயிற்சியில், இயற்கை முறை விவசாயிகளுடன், ஆர்.வி.எஸ் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் பங்கேற்று பயிற்சி பெற்றனர். நிகழ்வில், இயற்கை வேளாண்மை முறையில் களைச் செடி மற்றும் களைத் தாவரங்களை அகற்றுதல், கண்டறிதல், இயற்கை முறையில் நோய் மற்றும் பூச்சி தாக்கம், அதன் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, பயிர் பாதுகாப்பு மற்றும் இயற்கை வேளாண்மையின் இடர்பாடுகள் குறித்தும் குழுவில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்தும் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தப் பயிற்சி, தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததுடன், இயற்கை விவசாயம் குறித்த விரிவான அறிவைப் பெற உதவியதாக மாணவர்கள் தெரிவித்தனர். பயிற்சி மாணவர்கள் அனைவருக்கும், இயற்கை விவசாயி அருள் நடத்தும் வளம் இயற்கை அங்காடி நிறுவனத்திலிருந்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## போக்கியத்திற்கு வீடு தருவதாகக்கூறி பலரிடம் மோசடி

உதகை, பிப்.25:

போக்கியத்திற்கு வீடு வாங்கி தருவதாகக்கூறி, கட்டி முடிக்கப்படாத ஒரே வீட்டைக் காட்டி பலரி டம் லட்சக்கணக்கில் பணம் மோசடி செய்த வழக்கில் தொடர்புடையவரை காவல் துறையினர் கைது செய் தனர். நீலகிரி மாவட்டம், உதகை அருகே உள்ள பிங்கர் போஸ்ட் பகுதியை சேர்ந்தவர் இக்பால் கான். இவர் தனது பெற்றோர் மற்றும் மனைவியுடன் வசித்து வரு கிறார். இவர் கடந்தாண்டு போக்கியத்திற்கு வீடு தேடி வந்தபோது, உதகை நொண்டிமேட்டை சேர்ந்த ஷாயின்ஷா என்பவர் புரோக்கர் மூலமாக அறிமுக மாகி, போக்கியத்திற்கு வீடு வாங்கி தருவதாக இக்பால் கானிடம் கூறினார். இதை நம்பிய இக்பால் கான், அவரிடம் கடந்தாண்டு ஜனவரி மாதம் ரூ.5 லட்சம் பணம் கொடுத்தார். ஆனால், பல மாதங்களாகியும் அவர் வீடு வாங்கித் தரவில்லை. இதனால் அதிர்ச்சிய டைந்த இக்பால் பலமுறை ஷாயின்ஷாவை பார்த்து பணத்தை தருமாறு திரும்பி கேட்டார். இதைத் தொடர்ந்து ஷாயின்ஷா ரூ.2¼ லட்சம் பணத்தை திரும்ப கொடுத்துள்ளார். மேலும், மீதம் ரூ.2¾ லட்சம் பணத்தை தருவதாக நீண்ட நாட்களாக இழுத்தடித்துள்ளார். இக்பால் உதகை மத்திய காவல் நிலையத்தில் புகார ளித்தார். அதன்பேரில், போலீசார் விசாரணை நடத்தி ஷாயின்ஷாவை கைது செய்து நீதிமன்றத்தில் நேர் நிறுத்தி உதகை கிளை சிறையில் அடைத்தனர்.

## போலி பணத்தாள்கள்: ஒருவர் கைது

தருமபுரி, பிப்.25:

தருமபுரியில் வங்கி ஒன்றில், தனது கணக்கில் போலி பணத்தாள்களை செலுத்த முயன்றவரை காவல் துறையினர் கைது செய்தனர். தருமபுரி நகரில் செயல்படும் தேசியமயமாக்கப் பட்ட வங்கிக்கிளைக்கு வியாழனன்று வந்த நபர், காசா ளரிடம் ரூ.23 ஆயிரத்தை கொடுத்து தனது வங்கிக் கணக்கில் வரவு வைக்கும்படி கூறியுள்ளார். காசாளர் மதிவாணன் பணத்தை கணக்கிடுவதற்காக இயந்திரத் தில் செலுத்தியபோது, சில தாள்கள் எண்ணிக்கைக்கு எடுத்துக்கொள்ளவில்லையாம். அந்த இயந்திரத்தில் திரும்பவந்த ரூ.200 மதிப்பிலான 24 தாள்களை சோதனை செய்ததில், அவை அனைத்தும் போலி பணத்தாள்கள் என தெரியவந்தது. இதுகுறித்து வங்கி கிளை மேலாளர் மலர்விழி தருமபுரி நகர காவல் நிலை யத்தில் புகாரளித்தார். அதன்பேரில், அந்த நபரிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டதில், அவர் தருமபுரி மாவட்டம், நாட்டாண்மைபுரம் பகுதியை சேர்ந்த வடிவேல் என தெரியவந்தது. அவரிடமிருந்து போலி பணத்தாள்களை பறிமுதல் செய்த போலீ சார், அவரை கைது செய்தனர்.

## புலம் பெயர் தொழிலாளர்களுக்கு ரீடு நிறுவனம் மருத்துவ முகாம்

திருப்பூர், பிப்.25:

அவிநாசி ஒன்றியம், பழங்கரை ஊராட்சி தேவம் பாளையத்தில் ரீடு நிறுவனம், ரேவதி மெடிக்கல் சென்டர் இணைந்து புலம் பெயர்ந்த தொழிலாளர் களுக்கான மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் திட்ட ஒருங்கிணைப்பாளர் பட்டம்மாள் வரவேற்புரை ஆற்றினார். ரேவதி மெடிக்கல் சென்டர் முகாம் மேலா ளர் சதீஷ்குமார் நோக்க உரையாற்றினார். டாக்டர் கனித்ரா வரதராஜன் பொது மருத்துவர் பரிசோதனை மற்றும் ஆலோசனை வழங்கினார்.

# கொளத்தூரில் ரூ.1.61 கோடியில் குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம் - மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்




சென்னை, பிப்.25:

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட கொளத்தூர் பேருந்து நிறுத்தத்தை முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்ப ட்டிருப்பதாவது:-

முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (23.02.2026) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளைச் சார்ந்த 2,007 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பாட்டாக்களை வழங்கினார். மேலும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1.61 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள "குளிரூட்டப்பட்ட கொளத்தூர் பேருந்து நிறுத்தம்" மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 40.59 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலையோரப் பூங்கா, 70 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 அமுதம் நியாய விலைக் கடைகள் மற்றும் 40 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், 25 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன பயணியர் நிழற்குடை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

### இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்


சென்னை, பெரம்பூர், டான் பாஸ்கோ மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் கண்ணகி நகர், அம்பேத்கர் நகர், கங்கை அம்மன் கோவில், இந்திரா நகர், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், காமராஜர் நகர், மக்காரம் தோட்டம், ஜி.கே.எம். காலனி ஆகிய திட்டங்களின் மூலம் 1,969 பயனாளிகளுக்கும், அரசாணை எண்.97ன் கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா திட்டத்தின் கீழ் 38 பயனாளிகளுக்கும், என மொத்தம் 2,007 பயனாளிகளுக்கு முதல்-அமைச்சர் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேப்பர் மில்ஸ் சாலை, ரெட்டேரி சந்திப்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1.61 கோடி ரூபாய் செலவில் 1,546 சதுரடி கட்டடப் பரப்பளவில் 54 இருக்கைகள் கொண்ட காத்திருப்புக் கூடம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கண்காணிப்பு கருவிகள் (CCTV Cameras), நவீன கழிப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட கொளத்தூர் பேருந்து நிறுத்தத்தை முதல்-அமைச்சர் பயணிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலையில், 40.59 லட்சம் ரூபாய் செலவில் நடைபாதை, இருக்கை வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், கண்காணிப்பு கேமராக்கள் (CCTV Cameras), வாகனம் நிறுத்துமிடம் என பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள "சாலையோரப் பூங்கா",

திரு.வி.க. நகர் மண்டலம், ரெட்டேரி சந்திப்பில் 25 லட்சம் ரூபாய் செலவில் 30 பயணிகள் அமரக்கூடிய வகையில் இருக்கைகள், ACP கூரை, மின்விசிறிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வுதளம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள நவீன பயணியர் நிழற்குடை என மொத்தம் 1 கோடியே 75 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் செலவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் முடிவுற்ற பணிகளை முதல்-அமைச்சர் திறந்து வைத்தார்.

# 12 வழித்தடங்களில் புதிய பேருந்து சேவை துவக்கி வைப்பு



தருமபுரி, பிப்.25:

தருமபுரி ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் நடைபெற்ற நலத்திட்ட உதவி கள் வழங்கும் விழாவில், 12 வழித் தடங்களில் புதிய பேருந்து சேவையை அமைச்சர் பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார். தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவ லக அதியன் கூட்டரங்கில், அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா சனி யன்று நடைபெற்றது. இந்நிகழ்வில், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல் வம் பங்கேற்று, தருமபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ரூ.103.80 கோடி மதிப்பிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத் தும், முடிவுற்ற ரூ.45.74 கோடி மதிப் பிலான 60 திட்டப் பணிகளை பயன் பாட்டிற்கும் கொண்டு வந்தார். தொடர்ந்து, ரூ.27.80 கோடி மதிப்பில் 4,115 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசுகையில், மகளிர் உரிமைத்தொகைதிட்டத்தின்கீழ் தரும புரி மாவட்டத்தில் இதுவரை ரூ.740.378 கோடியில் 3 லட்சத்து 16 ஆயிரத்து 810 குடும்பத் தலைவிகள் பயனடைந்துள்ள னர். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 23,626 பேரும், நலன் காக்கும் ஸ்டா லின் திட்டத்தின் கீழ் 21,615 பேரும் பய னடைந்துள்ளனர், என்றார். முன்னதாக, அரசு போக்குவரத்துக் கழக தருமபுரி மண்டலம் சார்பில், மகளிர் விடியல் பயண பேருந்து திட்டத்தில், 12 வழித் தடங்களில் புதிய பேருந்துகள் சேவை, ஒரு மாற்றியமைக்கப்பட்ட வழித்தட சேவை ஆகியவற்றை அமைச்சர் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக ளில், மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஷ், தரும புரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, நகர் மன்றத் தலைவர் லட்சுமி, முன்னாள் அமைச்சர் பழனியப்பன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் தடங்கம் சுப்பிரமணி, வேடம்மாள், இன்பசே கரன், மனோகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லையா? - 15 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம்

சென்னை, பிப்.25:

தமிழகத்தில் ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியலை மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டார்

அதன்படி, தமிழகத்தில் மொத்தம் 5 கோடியே 67 லட்சத்து 7 ஆயிரத்து 380 வாக்காளர்கள் உள்ளனர். இதில், 2 கோடியே 77 லட்சத்து 38 ஆயிரத்து 925 பேர் ஆண்கள், 2 கோடியே 89 லட்சத்து 60 ஆயிரத்து 838 பேர் பெண்கள், 7 ஆயிரத்து 617 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் இன்று வெளியான இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லையென்றாலும் 15 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்து வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்த்துக்கொள்ளலாம் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறியதாவது:-

வாக்காளர் பட்டியலினை, தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான https://elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் காணலாம். அதில், வாக்காளர்கள் தங்கள் பெயரை சரிபார்த்துக்கொள்ளலாம்.

வாக்காளர் பதிவு அலுவலரின் முடிவுக்கு எதிரான மேல்முறையீட்டை, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் 15 நாட்களுக்குள் மாவட்ட கலெக்டரிடம் மேல்முறையீடு செய்யலாம். முதல் மேல்முறையீட்டு தீர்ப்பில் அதிருப்தி அடைந்தால், மக்கள் பிரநிதித்துவச் சட்டப்படி மாவட்ட கலெக்டரின் உத்தரவு வழங்கப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் தலைமை தேர்தல் அதிகாரியிடம் 2-வது மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்.

வாக்காளர்கள் தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை சரிபார்த்து, தேவையானால் பெயர் சேர்க்க (படிவம் 6), திருத்தம் செய்ய (படிவம் 8) அல்லது நீக்கம் செய்ய (படிவம் 7) செய்வதற்கான விண்ணப்பங்களை இணையம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

18-19 வயதுக்குட்பட்ட முதல் முறையாக வாக்காளர்களாக பதிவு செய்தவர்களுக்கும், திருத்தங்களுக்கு விண்ணப்பித்த அல்லது தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்ந்த, ஏற்கனவே உள்ள வாக்காளர்களுக்கும், அவர்களின் பதிவு செய்யப்பட்ட குடியிருப்பு முகவரிக்கு விரைவு அஞ்சல் மூலம் வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படும்.

தொடர் திருத்தக் காலம், 23-2-2026 முதல் (அதாவது இன்று) நடைமுறையில் உள்ளது. 1-1-2026 அன்று 18 வயது பூர்த்தியடைந்த, ஆனால் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்கள் இல்லாத அனைத்து தகுதியுள்ள குடிமக்களும் விண்ணப்பிக்கலாம்.

அதாவது, வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் படிவம் 6-ஐ சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம். இணையம் மூலமாக https://voters.eci.gov.in/ என்ற வலைதளத்திலும் விண்ணப்பிக்கலாம். கூகுள் பிளே ஸ்டோரில் இருந்து Voter Helpline App செயலியைத் தரவிறக்கம் செய்து அதன்மூலம் விண்ணப்பிக்கலாம் அல்லது வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

பொதுமக்கள் மாவட்ட தொடர்பு மையங்களை 1950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தேர்தல் தொடர்பான தகவல்களை அறியலாம்


இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## தண்ணீர் குடித்தும் தாகம் அடங்கவில்லையா? அலட்சியம் வேண்டாம்... நோய்களின் அறிகுறி



தாகம் என்பது அனைவருக்கும் தோன்றக்கூடிய பொதுவான ஒரு உடல் செயல்பாடுதான். அதற்கு தண்ணீர் அதிகமாக குடித்தால் தாகம் அடங்கிவிடும். ஆனால், ஒரு சிலருக்கு மட்டும் எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் உடனடியாக தாகம் அடங்குவது இல்லை. இந்த பிரச்னையை சாதாரணமாக நாம் கருதி அலட்சியமாக இருக்கக் கூடாது. அதிக தாகம் நம் உடலில் ஏற்படும் சில நோய்களின் முன்னறிவிப்பாக இருக்க கூடும். அதனால், இது போன்ற சாதாரண அறிகுறிகளை புறக்கணிப்பது ஆரோக்கியத்திற்கு மோசமான தீங்கை விளைவிக்கலாம்.

பொதுவாக தண்ணீர் கொடுத்தாலே தாகம் தணிந்து விட வேண்டும். சில நேரங்களில் அதிகப்படியான உடல் உழைப்பு காரணமாகவும் அதிக தாகம் ஏற்படலாம். ஆனால், போதுமான அளவு தண்ணீர் குடித்த பின், குறிப்பிட்ட நேரம் கழித்து இந்த தாகம் அடங்கிவிடும்.

அதே நேரம் கடுமையான வெப்பம், காற்றில் ஈரப்பதம் குறைவாக இருத்தல், உடலின் அதிகப்படியான வியர்வை, சோர்வு போன்ற காலங்களில் இந்த தாகம் இருக்கலாம். மற்ற இயல்பான நேரங்களில் தண்ணீர் குடித்த பிறகும் கூட மீண்டும் மீண்டும் குடிக்க தாகம் தூண்டினால், நிச்சயமாக அது ஆரோக்கியத்தின் சமச்சீரற்ற நிலையை குறிக்கிறது.

அதீத தாகம் ஏற்பட்ட சூழ்நிலையில், வாய் வறட்சியாக இருப்பதும் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய சூழல் ஏற்படுவதும், சோர்வு மற்றும் பலவீனம் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். சரியான நேரத்தில் சிகிச்சை அளிப்பது, ஆரோக்கியத்தை முன்கூட்டியே மீட்டெடுக்க ஏதுவாக இருக்கும். இதில் புறக்கணித்தல் அல்லது தாமதப்படுத்துதல் என்பது ஆரோக்கியத்தில் நீண்ட கால எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். மருத்துவரின் ஆய்வின் படி இதற்கான காரணங்களை கண்டறிவது அவசியம்.

நீரிழிவு நோய்: அடிக்கடி தாகம் எடுப்பது நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறியாக இருக்கலாம். ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு தொடர்ச்சியாக அதிகரிக்கும் போது, சிறுநீர் மூலம் அதிகப்படியான சர்க்கரை வெளியேற்ற உடலின் செயல்பாடுகள் நடைபெறும். ஆனாலும், உடலின் செயல்பாடுகள் குறைந்த அளவு சர்க்கரையை தான் வெளியேற்ற முடியும். தொடர்ச்சியாக சிறுநீர் வெளியேற்றுவதன் மூலம் உடலில் உள்ள நீர் சத்து பெருமளவில் குறைந்து போய்விடும். இதன் காரணமாக அதீத தாகம், தலைவலி, சோர்வு, குமட்டல், வாய் வறண்டு போகுதல் போன்றவையும் துணை அறிகுறிகளாக ஏற்படும்.

ரத்தசோகை: நீரிழிவு நோய் மட்டுமல்ல ரத்த சோகை நோயும் அதிக தாகத்தை ஏற்படுத்தும். பலரும் தாகத்தை சர்க்கரை நோயோடு தொடர்புபடுத்தி பார்க்கின்றனர். ஆனால், ஒரு சில நிலைகளில் இதை முழுமையாக பரிசோதனை செய்ய வேண்டும். ரத்தசோகை நோய் காரணமாக, சிவப்பணுக்கள் உடலில் ஆக்சிஜனை சரிவர கடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும். இந்த சூழலில் ரத்தத்தினை உடல் முழுக்க கடத்த, நீர்சத்து தேவை அதிகரிப்பதால் அதிக தாகம் ஏற்படும். புகையிலை பொருட்கள் மற்றும் மருந்துகளின் பக்கவிளைவுகள்: சில நேரங்களில் புகை பிடிப்பவர்கள் மற்றும் புகையிலை சார்ந்த போதைப் பொருட்களை பயன்படுத்துவர்களுக்கும் இது போன்ற தாகம் ஏற்படும். இந்த மோசமான பழக்கங்களுக்கு ஆளாகுபவரின் உடல்நிலையில், உடலில் உள்ள சில உறுப்புகள் தற்காலிகமாக பாதிக்கப்படுவதால் அதிக தாகம் ஏற்படுகிறது. சில மாத்திரைகளின் பக்க விளைவாக, அந்த மாத்திரையின் செயல்திறன் உடலில் இருக்கும் வரையில் அதீத தாகம் இருக்கலாம். இது தற்காலிகமானது தான். ஆயினும், ஏதேனும் சந்தேகம் இருந்தால் மருத்துவரின் ஆலோசனையை பின்பற்றுங்கள்.

## கள்ளழகர் கோவிலில் மாசி தெப்பத் திருவிழா: 1-ந் தேதி தொடங்குகிறது

மதுரை, பிப்.25:

அழகர்கோவிலில் உள்ள பிரசித்தி பெற்ற கள்ளழகர் கோவிலில் ஆண்டு தோறும் மாசி பௌர்ணமி தினத்தில் தெப்பத்திருவிழா விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு தெப்பத்திருவிழா வருகிற 1-ந் தேதி தொடங்குகிறது. விழாவையொட்டி 2-ந் தேதி கஜேந்திர மோட்ச விழா மாலை 4 மணிக்கு மேல் 5 மணிக்குள் நடைபெறுகிறது.

திருவிழாவின் முக்கிய நிகழ்வாக 3-ந் தேதி தெப்ப உற்சவம் நடைபெறும். அன்று சந்திர கிரகணம் நிகழ்வதால் முன்னதாக காலை 6.30 மணிக்கு மேல் 7 மணிக்குள் கள்ளழகர் பெருமாள் சகல பரிவாரங்களுடன் அழகர் கோவிலில் இருந்து புறப்பட்டு செல்கிறார். சுவாமியை பொய்கைகரைப்பட்டி கிராம மக்கள் வரவேற்று வணங்குவார்கள். தொடர்ந்து அன்று காலை 8 மணி முதல் 8.30 மணிக்குள் தெப்ப உற்சவம், வழக்கம்போல் பூஜைகளுடன் நடைபெறும். மேலும் தெப்பக்குளம் திருப்பணிவேலைகள் நடைபெறுவதால் மீண்டும், அங்கிருந்து வந்த வழியாகவே கள்ளழகர் பெருமாள் புறப்பாடாகி பகல் 12 மணிக்குள் திரும்ப கோவிலுக்குள் சென்று இருப்பிடம் சேருகிறார்.

## பலமாகும் விஜய் கூட்டணி... த.வெ.க.வுக்கு எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. ஆதரவு!



சென்னை, பிப்.25:

தமிழ்நாடு அரசியலில் பல சதாப்தங்களாக இருந்துவரும் பண்ருட்டி ராமச்சந்திரன் புதிதாக தொடங்கியுள்ள கட்சி எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. முன்னாள் முதலமைச்சர்கள் கருணாநிதி, எம்.ஜி.ஆர் ஆகியோர் அமைச்சரவையில் இருந்த இவர், கடந்த சிலநாட்களாக ஓபிஎஸ் அணியில் இருந்துவந்தார். இந்நிலையில் அந்த அணியில் இருந்து பிரிந்து புதியக் கட்சித் தொடங்கினார்.

இக்கட்சியின் முதல் கூட்டம் இன்று காஞ்சிபுரம் அருகே வாலாஜாபாத் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் குமார், "விஜய்க்கு எம்ஜிஆர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவளிக்கும்" என அறிவித்துள்ளார்.ய

ஊழலற்ற ஆட்சியை தருவதாக கூறுவதால் விஜய்யை ஆதரிக்கிறோம். வரும் தேர்தலில் விஜய் ஆட்சிக்கு வரவேண்டும் என தெரிவித்துள்ளார்.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தெப்போற்சவ சோதனை ஓட்டம்



திருமலை, பிப்.25:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் தெப்போற்சவம் விமரிசையாக நடப்பது வழக்கம். அதன்படி இந்த ஆண்டுக்கான தெப்போற்சவம் வரும் 26-ம் தேதி தொடங்கி மார்ச் 2-ம் தேதி வரை 5 நாட்கள் நடக்கிறது. கோவில் அருகே உள்ள சுவாமி புஷ்கரணியில் தினமும் இரவு 7 மணியில் இருந்து இரவு 8 மணி வரை தெப்போற்சவம் நடக்கிறது.

இதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. சுவாமி புஷ்கரணியில் தெப்பம் அலங்காரம் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இதன் சோதனை ஓட்டம் இன்று நடைபெற்றது. நீராழி மண்டபத்தை சுற்றி தெப்பம் வலம் வந்தது. தேவஸ்தான துணை செயல் அதிகாரி லோகநாதன் மற்றும் அதிகாரிகள் தெப்பத்தில் சென்று ஆய்வு செய்தனர்.

தெப்போற்சவத்தின் முதல் நாளான 26-ம் தேதி உற்சவர்களான சீதா, ராமர், லட்சுமணர், ஆஞ்சநேயர் எழுந்தருளி 3 சுற்றுகள் தெப்பத்தில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

27-ம் தேதி ஸ்ரீகிருஷ்ணர், ருக்மினி தேவியுடன் தெப்பத்தில் எழுந்தருளி 3 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க உள்ளார்.

28-ம் தேதி உற்சவர்களான மலையப்ப சுவாமி, தாயாருடன் எழுந்தருளி 3 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

மார்ச் 1-ம் தேதி உற்சவர்களான மலையப்ப சுவாமி, ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் எழுந்தருளி 5 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். நிறைவு நாளில் (மார்ச் 2) உற்சவர்களான மலையப்ப சுவாமி ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் 7 சுற்றுகள் தெப்பத்தில் பவனி வருகிறார்.

தெப்போற்சவத்தை முன்னிட்டு பிப்ரவரி 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் சஹஸ்ர தீபாலங்கார சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. இதேபோல் பிப்ரவரி 28, மார்ச் 1 மற்றும் மார்ச் 2 ஆகிய தேதிகளில் ஆர்ஜித பிரம்மோத்ஸவம் மற்றும் சஹஸ்ர தீபாலங்கார சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

## மதுக்கூர் அருகே கைலாசநாதர் கோவில் கும்பாபிஷேகம்



மதுக்கூர், பிப்.25:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் அருகே உள்ள முசிறி கிராமத்தில் பெரியநாயகி அம்மன் உடனுறை கைலாசநாதர் சுவாமி திருக்கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற்று 24 ஆண்டுகள் ஆனதையடுத்து மீண்டும் கும்பாபிஷேகம் செய்ய தீர்மானிக்கப்பட்டு, அதற்கான திருப்பணிகள் நடைபெற்றன.

திருப்பணிகள் அனைத்தும் முடிவடைந்ததை தொடர்ந்து கும்பாபிஷேக விழா தொடங்கியது. கடந்த 18 ஆம் தேதி அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை உள்ளிட்ட கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமமும் உள்ளிட்ட பூஜைகள் மற்றும் ஆறு கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றன.

யாகசாலை பூஜைகள் நிறைவு பெற்று மஹா பூர்ணாஹுதி நடைபெற்றது. இதையடுத்து யாகசாலையில் வைத்து பூஜை செய்யப்பட்ட புனித நீர் குடங்களை சிவாச்சாரியார்கள் தலையில் சுமந்தபடி ஊர்வலமாக கோவிலை சுற்றி வலம்வந்தனர்.

பின்னர் அந்த புனித நீரை விமான கலசங்கள் மற்றும் ராஜகோபுர கலசத்தில் ஊற்றி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதையடுத்து மகா தீபாராதனை நடைபெற்றது. பக்தர்கள் மீது ட்ரோன் மூலம் புனித நீர் தெளிக்கப்பட்டது. விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

## ஆண்டிப்பட்டி மகா மாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



எடப்பாடி, பிப்.25:

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் அடுத்த ஆண்டிப்பட்டி பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற மகாமாரியம்மன் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தில் புனரமைப்பு பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி இக்கோவிலில் நடைபெற்று வந்த புனரமைப்பு பணிகள் அண்மையில் முழு அளவில் நிறைவடைந்த நிலையில், கும்பாபிஷேகத்திற்காக ஆலய வளாகத்தில் கால்கோல் விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கணபதி ஹோமம், தீர்த்த குடஊர்வலம், முளைபாரி சமர்ப்பணம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை தொடர்ந்து, யாகசாலை பூஜைகள் நடைபெற்றன.

யாகசாலை பூஜைகள் நிறைவடைந்ததை தொடர்ந்து இன்று (திங்கட்கிழமை) காலை வேத மந்திரங்கள் முழங்க கும்பாபிஷேகம் நடைபெற்றது. ரவிகண்ணா பட்டாச்சாரியார் தலைமையிலான சிவாச்சாரியார்கள் சக்தி விநாயகர் மற்றும் மகா மாரியம்மன் கருவறை கோபுர கலசங்களுக்கு புனித நீரூற்றி கும்பாபிஷேகம் செய்தனர். தொடர்ந்து பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

கும்பாபிஷேக விழாவை ஒட்டி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த மகாமாரியம்மனை திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.




## பட்டாசு வெடித்து 6 பேர் காயம்

தருமபுரி, பிப்.25:

தருமபுரியில் இறுதி ஊர்வலத்தின்போது, பட்டாசு வெடித் ததில் 6 பேர் காயமடைந்த சம்பவம் குறித்து காவல் துறை யினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தருமபுரி மாவட்டம், சின்னகுரும்பட்டி பகுதியை சேர்ந்த ராஜா என்பவர், கடந்த வியாழனன்று உயிரிழந்தார். இதைய டுத்து வெள்ளியன்று அவரது இறுதி ஊர்வலம் நடைபெற் றது. ஆட்டோவில் பட்டாசுகளை அடுக்கிகொண்டு வரிசை யாக வெடித்துச் சென்றனர். அப்போது எதிர்பாராத விதமாக மேலே வீசிய பட்டாசு, மின்கம்பியில் சிக்கி பட்டாசு வைத்தி ருந்த ஆட்டோ மீது விழுந்து வெடித்தது. இதில் ஆட்டோவில் இருந்த பட்டாசுகள் தீப்பிடித்து வெடித்துச் சிதறின. இந்த விபத்தில் ஆட்டோ அருகே சென்று கொண்டிருந்த பெரமன், தங்கம், பாஸ்கர், திருப்பதி, சதீஷ், மயில் தேவன் ஆகிய 6 பேர் காயமடைந்தனர். தொடர்ந்து, காயமடைந்தவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவம் குறித்து தருமபுரி நகர காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹைதராபாத் - கொல்லம் சிறப்பு ரயில் சேவை நீட்டிப்பு

கோவை, பிப்.25:

கோவை (போத்தனூர்) வழியாக இயக்கப்பட்டு வரும் ஹைதராபாத் கொல்லம் வாராந்திர சிறப்பு ரயில்களின் சேவைகாலம், பயணிகளின் கூடுதல் தேவையைக் கருத்தில் கொண்டு மார்ச் மாதம் இறுதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தெற்கு ரயில்வேயின் சேலம் கோட்ட மக்கள் தொடர்பு அலுவலர் ஜி. மரியா மைக்கேல் வெளியிட் டுள்ள செய்திக்குறிப்பில், ஹைதராபாத் மற்றும் கொல்லம் இடையே ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர் மற்றும் போத்தனூர் வழியாக இயக்கப்படும் இந்த சிறப்பு ரயில் களின் சேவை மேலும் ஐந்து வாரங்களுக்கு நீட்டிக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வண்டி எண் 07193 ஹைதராபாத் கொல்லம் வாராந்திர சிறப்பு ரயில் வரும் பிப்.28 முதல் மார்ச் 28 வரை சனிக்கிழமைகளில் இரவு 23.10 மணிக்கு ஹைதராபாத்தில் இருந்து புறப்பட்டு, திங்கட்கிழமை காலை 07.10 மணிக்கு கொல்லம் சென்றடையும். இந்த ரயில் ஞாயிற்றுக்கிழமை இரவு 22.12 மணிக்கு கோவை போத்தனூர் ரயில் நிலை யத்திற்கு வந்து சேரும். மறுமார்க்கமாக, வண்டி எண் 07194 கொல்லம் ஹைதராபாத் வாராந்திர சிறப்பு ரயில் மார்ச் 2 முதல் மார்ச் 30 வரை திங்கட்கிழமைகளில் காலை 10.45 மணிக்கு கொல்லத்தில் இருந்து புறப்பட்டு, செவ்வாய்க் கிழமை மாலை 17.30 மணிக்கு ஹைதராபாத் சென்றடை யும். இந்த ரயில் திங்கட்கிழமை மாலை 18.20 மணிக்கு கோவை போத்தனூர் ரயில் நிலையத்தை வந்தடையும். இந்த சிறப்பு ரயில்களில் ஏசி முதல் வகுப்பு, ஏசி 2 அடுக்கு, ஏசி 3 அடுக்கு, படுக்கை வசதி மற்றும் பொது இரண்டாம் வகுப்பு பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. போத்த னூர் தவிர திருப்பூர், ஈரோடு, சேலம் மற்றும் ஜோலார் பேட்டை ஆகிய முக்கிய நிலையங்களிலும் இந்த ரயில் நின்று செல்லும்.

# சூரிய குடும்பத்தின் 8 கோள்களின் வியக்க வைக்கும் உண்மைகள்!

சூரிய குடும்பத்தில் உள்ள சூரியனின் நீள் வட்ட பாதையில் சுற்றிவரும் முக்கிய கோள்களைப் பற்றி இந்த கட்டுரையில் காணலாம்.

புதன்வெள்ளிபூமிசெவ்வாய் வியாழன் சனி யுரேனஸ் நெப்டியூன் இவைபாறைகளால் ஆன உட்கோள்கள் மற்றும் வாய்வுகளால் ஆன வெளிகோள்கள் என இருவகைப்படும். வியாழன் மிகப்பெரிய கோள் புதன். மிகச்சிறியது வெள்ளி. வெப்பமானது சூரிய ஒளி மூலம் கோள்கள் பிரகாசிக்கின்றன.

புதன் வெள்ளி பூமி செவ்வாய் ஆகியவை திடமான மேற்பரப்பை கொண்டவை. வியாழன் சனி யுரேனஸ் ஆகியவை வாயு பந்துக்கள்.

புதன் சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகமாகும். பகலில் அதிக வெப்பமும் இரவில் அதிக குளிர் கொண்டது. வெள்ளி அதிக வெப்பமான கோள். காலை விண்மீன்கள் மாலை விண்மீன்கள் என அழைக்கப்படுகிறது. பூமி உயிர் வாழ தகுதியுடைய கிரகமாகும். இது நீல நிற கோள் எனவும் அழைக்கப்படுகிறது.

செவ்வாய் சிறப்பு நிறக்கோள் இதில் இரும்பு ஆக்சைடு அதிக அளவில் உள்ளது வியாழன் மிகப்பெரிய கிரகம் இதில் 67 துணைக்கோள்கள் உள்ளன. சனி அதிக வளைவுகளைக் கொண்டது. நெப்டியூன் சூரியனிலிருந்து அதிக தொலைவில் உள்ளது.

இனி கிரகங்களை பற்றி பார்க்கலாம்:

புதன்: சூரியனின் மிக அருகில் உள்ள கிரகம் சூரியனைவிட வேகமாக வளரும் கோள். இதற்கு துணைக்கோள்கள் இல்லை. தன்னைத்தானே சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலம் 59 நாட்கள். சூரியனை சுற்றிவர எடுத்துக் கொள்ளும் நாட்கள் 88 நாட்கள்.



வெள்ளி : பூமிக்கு அருகில் உள்ள கிரகம் புவியின் இரட்டைப் பிறவி என அழைக்கப்படுகிறது. மிகவும் வெப்பமானது. தன்னைத்தானே மெதுவாக சுற்றிக் கொள்ளும். தன்னைத்தானே சுற்றிவர 243 நாட்கள் எடுத்துக்கொள்கிறது சூரியனை சுற்றிவர 224 நாட்களாகும்.

பூமி : உயிர்கலம் என அழைக்கப்படுகிறது. ஒரே ஒரு துணைக்கோள் கொண்டது. 23 டிகிரி சாய்ந்த நிலையில் சூரியனை சுற்றுகிறது. தன்னைத்தானே சுற்றிவர 23 மணி 56 நிமிடம் எடுத்துக் கொள்கிறது. சூரியனைச் சுற்றிவர 365 நாட்கள் எடுத்துக்கொள்கிறது.

செவ்வாய் : சிவப்பு கோள் என அழைக்கப்படுகிறது. இரண்டு துணைக்கோள்கள் கொண்டது. தன்னைத்தானே சுற்றிவர 24 மணி நேரம் 37 நிமிடங்கள் ஆகிறது. சூரியனை சுற்றிவர 687 நாட்கள் ஆகும்.

வியாழன்: மிகப்பெரிய கோள் ஆகும். இதில் 67 துணை கோள்கள் உள்ளன. மிகப்பெரிய துணைக்கோள் கனிமட் எனப்படும் தன்னைத்தானே சுற்றிவர 9 மணி 55 நிமிடம் ஆகும். சூரியனை சுற்றிவர 11 ஆண்டுகள் 10 மாதங்கள் ஆகும்.

சனி: அதிக துணைக்கோள்கள் கொண்டது. கிட்டத்தட்ட 60 துணை கோள்கள் உள்ளது. இதனை கண்டுபிடித்தவர் கலீலியோ அழகிய வளையங்களைக்கொண்ட மஞ்சள் நிற கிரகம் தன்னைத்தானே சுற்றிவர பத்து மணி 40 நிமிடம் ஆகும். சூரியனைச் சுற்றிவர 29 ஆண்டுகள் 5 மாதம் ஆகிறது. ஒரு கற்பனையாக இந்த கிரகத்தை பறித்துக்கொண்டு வந்து கடலில் மிதக்கவிட்டால் தெப்பம் போன்று மிதக்கும் இந்த சனிக்கிரகம்.

யுரேனஸ்: இந்த கிரகத்தை கண்டுபிடித்தவர் வில்லியம் ஏர்செல். 27 துணை கோள்கள் உள்ளன. 98 டிகிரி சாய்ந்து சூரியனை சுற்றி வருகிறது இது ஒரு பச்சை நிறகோள். தன்னைத்தானே சுற்றிவர 17 மணிநேரம் ஆகும். சூரியனை சுற்றிவர 84 ஆண்டுகள் ஆகும

நெப்டியூன்: இதனை கண்டுபிடித்தவர் கேலி என்ற விஞ்ஞானி ஆவார். 13 துணை கோள்கள் உள்ளன. தன்னைத்தானே சுற்றிவர 16 மணிநேரம் ஆகும். சூரியனை சுற்றிவர 164 ஆண்டுகள் ஆகும்.

கிரகங்கள் பற்றிய முக்கிய தகவல்கள்: பிளானட் என்ற வார்த்தை கிரேக்க மொழியில் இருந்து வந்தது. பிளானட் என்றால் அலைந்து திரிபவன் என்று பொருள்.

சூரிய குடும்பத்தில் எட்டு கோள்கள் உள்ளன. புதன் வெள்ளி பூமி செவ்வாய் ஆகியவை உட்கோள்கள் எனப்படுகிறது. வியாழன் சனி யுரேனஸ் நெப்டியூன் ஆகியவை வெளி கோள்கள். இதற்கு வாயு கோள் என்றும் பெயர். மிகப்பெரிய கிரகம் வியாழன். மிகச்சிறிய கிரகம் புதன் சூரியனின் அருகில் புதன் உள்ளது. சூரியனின் தொலைவில் நெப்டியூன் உள்ளது. மிகவும் வெப்பமான கிரகம் வெள்ளி. மிகவும் குளிர்ச்சியான கிரகம் நெப்டியூன் துணைக்கோள்கள் இல்லாதது புதன் வெள்ளி கிரகம் ஆகும். வியாழன் தன்னைத்தானே வேகமாக சுற்றிக்கொள்ளும். வெள்ளி கிரகம் தன்னைத்தானே மெதுவாக சுற்றிக் கொள்ளும். ரெண்டு டிகிரி சாய்ந்து சுற்றுவது வியாழன் 23 டிகிரி சாய்ந்து சுற்றுவது பூமி 98 டிகிரி சாய்ந்து சுற்றுவது யுரேனஸ் வெள்ளி கிரகம் கிழக்கிலிருந்து மேற்காக சுற்றி வருகிறது.

கோள்கள் தன்னைத்தானே சுற்றிக்கொள்வது ரொட்டேஷன் எனப்படும் கிரகங்கள் சூரியனை சுற்றி வலம் வருவது ரெவல்யூஷன் எனப்படும். இந்த செயல்கள் பிரபஞ்சத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# "அவன் மறக்காத தவறு"

ஆதவனுக்கு வயது பதினைந்து. அவன் பெற்றிருந்த அதீத நினைவாற்றல் அவனுக்குக் கிடைத்த வரமல்ல, சாபமென்றே சொல்லலாம் ஒரேயொரு முறை, ஒரு விநாடி நேரம் மட்டுமே, பார்க்கும் விஷயம் அவன் மனதில் அச்சடித்தாற் போல் பதிந்து விடும்.
அவ்வகையில், மூன்று மாதங்களுக்கு முன் தொலைக்காட்சியில் வந்த ஒரு கடத்தல் செய்தியில் இடம்பெற்ற ஒரு சின்ன விவரம் மட்டும் அவன் மனதில் ஆழப் பதிந்தது. "குற்றவாளி, தன் வலது கை மணிக்கட்டில் கட்டியிருக்கும் கறுப்பு கடிகாரத்தின் உடைந்த கண்ணாடியை தன் இடது உள்ளங்கையால் அடிக்கடி துடைத்துக் கொள்வான்."
மழை இரவு.
மின்சாரம் போன தெருவில் ஒரு வெள்ளைக் காரிலிருந்து இறங்கிய மனிதன், காருக்குள்ளிருந்து ஒரு குழந்தையை வெளியில் இழுத்துப் போட்டான்.
வலது கை கடிகாரத்தின் உடைந்த கண்ணாடியை இடது உள்ளங்கையால் துடைத்தான்.
அடுத்த நொடி கையிலிருந்த கத்தியால் குழந்தையின் கழுத்தில் வெட்டினான்.
குழந்தை துவண்டு விழுந்தது.
இருளில் கரைந்தான்.
போலீஸ் விசாரணை.
முகம் தெரியவில்லை. வண்டி நம்பர் இல்லை.
சிறுவன் அடையாளம் சொன்னான்.
உடைந்த கடிகாரக் கண்ணாடியைத் துடைக்கும் பழக்கத்தை, இடது காலை இழுத்தபடி நடக்கும் நடையை.
அடுத்த நாளே ஒரு மனிதன் கைது செய்யப்பட்டான்.
ஆனால் அவன் கடிகார கண்ணாடி உடையாமல் புதிதாயிருந்தது.
வழக்கு நொண்டியடித்தது.
நள்ளிரவு.
சிறுவன் படுக்கையில் விழித்தபடி கிடந்தான். அவன் மனசு மீண்டும் மீண்டும் அந்தக் காட்சியை ஓட்டியது.
அப்போதுதான் உணர்ந்தான் குத்திய பிறகு அவன் கையைத் துடைக்கவில்லை, குத்துவதற்கு முன்பே துடைத்தான்.
அப்படியென்றால்... அந்த கையில் இருந்த இரத்தம் முந்தைய கொலையினது.
ஆக.. இரண்டு கொலைகள் நடந்திருக்கு.
அதை மறுநாள் போலீஸிடம் சொல்ல முடிவு செய்தான்.
அப்போது கதவு தட்டும் சத்தம். அம்மா கதவைத் திறக்கப் போனார்.
வெளியிலிருந்து சன்னக் குரல்"நாங்க போலீஸ்... கொஞ்சம் விசாரிக்கணும்."
ஆதவனின் இதயம் துடித்தது.
மெதுவாக ஹாலுக்கு வந்தான். வாசலில் நின்ற மனிதன் சீருடையில், கைக்கு கையுறை போட்டிருந்தான்.
மணிக்கட்டில் கறுப்பு கடிகாரத்தில் புதிய கண்ணாடி மிளிர்ந்தது. அவன் மெதுவாக சிரித்தான். "நீதானே எல்லாம் நினைவில் வைத்திருக்கிற பையன்?"
அம்மாவுக்கு எதுவும் புரியவில்லை. ஆதவன் மட்டும் புரிந்துகொண்டான்.
வெளியில் மழை சத்தம் அதிகரித்தது.
மறுநாள் காலை போலீஸ் வந்த போது ஒரு வீடு வெறிச்சோடியிருந்தது.
மேசையின் மீது டிவி ரிமோட் மட்டும். செய்தி சேனல் ஓடிக்கொண்டிருந்தது.
"இரண்டு கொலைகளை இணைக்கும் முக்கிய சாட்சி காணாமல் போனார்..."





**-முகில் தினகரன்**
கோயம்புத்தூர்.

# நெஞ்சம் மறப்பதில்லை!



அன்று கல்லூரியில் கடைசி நாள்.லதா அவனுக்கு பிடித்த பச்சை நிறப்புடவையில் வரவில்லை. ஏமாற்றத்தை உணர்ந்த அஷோக் அவள் முதல் நாள் அவனிடமிருந்து வாங்கிப் போன புத்தகத்தை கேண்டீன் போகும் வழியில் அவனுடைய கையில் திணித்தாள். ஓரவிழிப்பார்வையால் அவனைத் தாக்கிவிட்டு மறைந்து விட்டாள். அவள் கொடுத்த புத்தகத்தை பையில் வைத்துக்கொண்டான் அஷோக்.அவள் அவனை மணக்கத் தயாராக இல்லை எனபதை அவள் கட்டியிருந்த நீலநிறப் புடவை அவனுக்கு உணர்த்துவதாக புரிந்துக் கொண்டான்.

இன்று காலை...

அஷோக் அப்போதுதான் அந்த ஓட்டலின் உள்ளே நுழைந்தான். ஓட்டலின் உள்ளேயிருந்து ஒரு குழந்தை வெளியே ஓடி வந்துக் கொண்டு இருந்தது.'அஷோக், அஷோக். நில்லு. நில்லு. ஓடாதே' என்று சொல்லிக் கொண்டே அந்தக் குழந்தையின் பின்னால் ஒரு பெண்ணும் ஓடிவந்துக் கொண்டிருந்தாள். அவன் பெயர்தான் அந்தக் குழந்தைக்கு. ஆச்சரியத்தில் அவன் மனம்.

அவள் கொஞ்சம் குண்டாக இருந்ததால் அவளால் குழந்தையின் ஓட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை.அஷோக்தான் அந்தக் குழந்தையை தடுத்தி நிறுத்தி அவளிடம் ஒப்படைத்தான்.நன்றி சொன்ன அவள் கண்கள் அவனிடம் எதோ சொல்ல முயற்சித்தன.

அவள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தாள். கூர்மையான மூக்கும் விரிந்த கண்களும். அஷோக்குற்கு அவளை எங்கேயோ பார்த்தது போல் இருந்தது. எங்கு?எப்போது? மனதைக் குடைந்துக் கொண்டான்.ஆனால் நினைவுக்கு வரவில்லை.தொடர்ந்து யோசித்துக் கொண்டே அங்கு இருந்த ஒரு சேரில் உட்கார்ந்தான்.மேசையின் மேல் இருந்த மெனுக்கார்டை உற்றுப் பார்த்தான். அவன் மனம் அதில் ஒட்டவில்லை. ஆர்டர் பண்ணி வந்த இரண்டு இட்லியை சாப்பிடத் தொடங்கினான்.

அவனுடைய பார்வையில்தான் அந்த அந்தப் பெண்ணும் உட்கார்ந்து இருந்தாள். அஷோக்குக்கு அவளை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றியது.அடுத்தவன் மனைவியை அப்படிப் பார்ப்பது தவறு என்றும் அவன் மனம் சொன்னது. ஆனால் அவனது ஆசைக்கு வெட்கம்தான் இல்லையே?

அவளும் அடிக்கடி இவனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். அவளுக்கு எதிரே உட்கார்ந்திருந்த அவளுடைய கணவன் தன் கைப்பேசியை மும்முறமாக நோண்டிக் கொண்டிருந்தான்.

வந்த இட்லியை சாப்பிட்டுவிட்டு கைகளை கழுவ போனவன் பின்னாலையே அந்த பெண்ணும் வந்தாள்.' என்ன அஷோக் எப்படி இருக்கீங்க?' என்று கேட்டவளுக்கு இவன் பதில் சொல்வதற்குள் அவளுடைய கணவனும் கைக் கழுவ வந்தான். கைகளை அவசர அவசரமாக கழுவிக்கொண்டு பில்லுக்கு காசு கொடுத்துவிட்டு அவள் தன் கணவனுடனும்,குழந்தையுடனும் புறப்பட்டு விட்டாள்.

'யார் இந்தப் பெண்?' என்று யோசித்துக் கொண்டே வீட்டிற்கு வந்தான் அஷோக் வீட்டுக்கு வந்தவன் மனதில் மலரும் நினைவுகளாய் சுமார் 10 வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்வு...

அஷோக்கும், லதாவும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். மூன்று வருடப்பழக்கத்தால் ஒருவர் மீது ஒருவருக்கு ஈர்ப்பு .வெளியில் சொல்லாமல் அவர்களுக்கு இருந்த தவிப்பு. கைப்பேசி இல்லாத காலம். கடிதங்கள்தான் காதலுக்கு தூது போயின.

மறுநாள்தான் புத்தகத்தை எதேச்சையாக எடுத்தான்.திறந்துப் பார்த்தான்.உள்ளே லதாவின் கடிதம்.பரபரப்புடன் படித்ததில் அவளுடைய பச்சைப் புடவையை அவள் தங்கை அணிந்துக் கொண்டு சென்று விட்டாள்.அதனால் அவன் விரும்பிய பச்சைநிறப்புடவையில் வரமுடியவில்லை.வருத்தம் தெரிவித்திருந்தாள்.அவள் காட்டி விட்டுப் போன பச்சைநிற கைக்குட்டை கண் முன்னால் வந்து விட்டுப் போனது.அதற்குப் பிறகு அவளை இன்றுதான் பார்த்தான்.

அலமாரியில் டைரியிலிருந்த அந்த கடிதத்தை திரும்ப ஒரு முறை படித்தான்.மனதில் சோகமும் ஏக்கமும் திரும்பவும் ஒருமுறை வந்து ஒட்டிக் கொண்டது.

விரைவில் என்னை பெண் பார்க்க 'வா' என்று எழுதி முடித்திருந்தாள். இவனுடைய வரவை எதிர்பார்த்து எவ்வளவு நாள் ஏமாந்து போயிருப்பாள். இன்று பார்த்தும் அவளுடன் பேச முடியவில்லை.

அவன் அன்று தவறவிட்ட லதா தான் இன்று அவன் ஓட்டலில் பார்த்த அந்தப் பெண். காலம்தான் எவ்வளவு வேகமாக ஓடுகிறது. அவளுடைய குழந்தைக்கு இவனது பெயர்.தனக்கு அடுத்த மாதம் பிறக்க இருக்கும் குழந்தை ஆணோ,பெண்ணோ? அவளுடைய பெயர்தான்.முடிவு செய்து விட்டான். அவனுடைய மனைவி கீதா கதவை தட்டுகிறாள்.இவன் அவசர அவசரமாக கடிதத்தை ஒரு டைரியில் வைத்துவிட்டு கதவை திறக்கப் போனான். மனது கனமாக இருந்தது. ஆனால்,அதில் மகிழ்ச்சியும் இருந்தது.

'எங்கிருந்தாலும் வாழ்க'எனப்பாடத்தொடங்கினான். அவன் மனைவி கீதா அவனைப்பார்த்து 'ஐயா என்ன இன்று நல்ல மூடில்?என்றாள்.'ஒன்றுமில்லை' என்று சொல்லிய படி அவன் தூங்க முயற்சித்தான்.

கீதாவுக்கு அவள் கதை நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை. சில விருப்பமான நிகழ்வுகளை நம் நெஞ்சம் விரைவில் மறப்பதில்லை.




**முனைவர் என்.பத்ரி**
ஆதம்பாக்கம், சென்னை

# ஊர்மிளையின் ஊமைமனம்

மூன்றாம் பாகம்.. 1





**கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

கம்பராமாயணத்தின் அடிப்படையில் இதனை எழுதினாலும் ஊர்மிளையின் காட்சிகள் அனைத்தும் எனது புனைவு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனியும் அவளது உறக்கமும் கம்பராமாயணத்தை ஒட்டியே வந்த நிகழ்வுகளோடு வந்தாலும்,ஊர்மிளையின் அத்தனைக் காட்சிகளும் சொற்களும் எனது புனைவு என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறேன்.

எத்தனையோ தடைகளைத் தாண்டி எழுத ஆரம்பித்து இரண்டு வருடங்கள் ஆகின்றன.

முதலில் திருமாலும் திருப்பாவையும் புத்தகமாக வெளிவரும் பொழுது என்னுள் அவ்வளவு ஒரு சந்தோஷம். பேக்கி டெர்ம் டேல்ஸ் நிறுவனம் புத்தகா பதிப்பகம், பேக்கி டெர்ம் டேல்ஸ் சீஈஓ திருமதி உமா அபர்ணா, நிறுவனர் பிரியா இவர்களுக்கு நிச்சயமாக நன்றியைச் சொல்லிக் கொள்ள வேண்டும்.

கிட்டத்தட்ட குழுவோட சேர்ந்து நான் தனியாக என்று கிட்டத்தட்ட 20 புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. இன்னும் பத்து புத்தகங்கள் வெளிவர வேண்டும்.

புத்தகம் போடும் முன் என் எழுத்துக்கள் என் டைம் லைனிலும் மத்யமரிலும் கண்டிப்பாகப் பதிவாகப் போடுவேன்.

இப்போது ஊர்மிளையின் ஊமை மனம் என்ற புத்தகம் வெளிவரப் பதிவுகள் இங்கே பதிய விட்டேன்.

எனக்கு இன்ஸ்பிரேஷன் பத்மா கோபால் அவர்கள். அவர்கள் எப்பொழுதுமே தன் எழுத்துக்களை அனுமார் தான் எடுத்துக் கொடுப்பார் என்று சொல்லுவார்கள். இப்பதிவைத் தொடங்குவது எப்படி என்று தெரியாமல் இருக்கும் பொழுது அவரின் ஊர்மிளையின் உன்னதம் என்ற புத்தகம் என் கைக்குக் கிடைத்தது.

அவர் எழுதிய வாக்கியத்தையே வனவாசம், உறக்கம்,அரசு போகம் உண்டு அனுபவிக்க யோகம் இல்லை இத்தனையே என்னை வந்து மூன்று பாகங்களாக எழுத வைத்தது என்றால் மிகையல்ல. அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தப் பதிவையும் கஷ்டப்பட்டு தான் எழுதுகிறோம். என் பதிவைப் பின் தொடர்ந்த அத்தனை பேருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்பராமாயணத்தின் சில படலங்களின் விரிவுரையே இப்பதிவுகளில் நிறைய காணலாம். அதற்கு ழ தமிழ் அகாடமி மிகவும் உதவியாக இருந்தது. அதற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் ..

ஆதரவுக்கு நன்றி
என்றும் அன்புடன்

## 1.ராமன் அயோத்தி திரும்புதல்..

14 வருடத்திற்கு முன்னால் ஒரு பஞ்சமி திதியில் இதோ ராமன் தன் பத்தினி மற்றும் இலக்குவனுடன் கானகம் சென்ற நாள்..அன்று அயோத்தி அரண்மனை அல்லோகலப்பட்டது. எங்கு பார்த்தாலும் ஏக்கங்களும் பெருமூச்சுகளும் ..

ஆனால் இன்று அதே திதியில் பஞ்சவடியில் வைத்து ராமன் பரதனுக்கு அளித்த வாக்குறுதி "மறுக்கக்கூடாது இனி, என் ஆணையால் இவ்வுலகைக் காப்பாற்றுவாயாக!" என்று சொல்லித் துணை மலர்த் தடக்கை பற்றினான் ராமன் அல்லவா ?

அப்போது பரதன் சொன்ன வார்த்தைகள் ஞாபகம் வந்தன.

"ஆம்! எனில் ஐயா! ஏழ்இரண்டு ஆண்டுகளில் நாமநீர் நெடுநகர் அடைந்து, நாளில் அரசாட்சி செய்திடாயானால் சூர்எரி நெருப்பில் விழுந்து உயிர் துறப்பேன், அது உண்மை நின் ஆணை சூறினேன்!" என்ற இந்நிகழ்ச்சி ஒரே நேரத்தில் ராமனுக்கும், பரதனுக்கும் நினைவில் வந்தன.

ராவணன் வதம் முடிந்து சீதையை மீட்ட ராமன் சீதையை அலங்காரம் செய்து அழைத்து வருமாறுக் கூறுகிறான். தேவமகளிர் சீதையை அலங்கரித்து ராமனுடன் சேர்க்கின்றனர். ராமன் சீதையைப் பார்த்து சொல்லும் வார்த்தைகள் சீதைக்கு இதம் அளிக்கவில்லை. தான் பஞ்சவடியில் விட்டுச்சென்ற காதல் கணவன் இவன் அல்ல என்று தோன்றியது. ஊர்மிளையின் மனமோ அழத் தொடங்கியது. வனம் ஏகத் தொடங்கிய போது இருந்த சந்தோஷம் திரும்பவும் அயோத்தி வரும்பொழுது இல்லை என நினைத்தாள். அதேபோல் சீதையும் மௌனமாக வந்தாள்.

வானவர்கள் வாழ்த்துகள் கூறி வஞ்சகர்கள் இல்லை அண்டத்தில் எனும் படி அழித்தொழித்த அண்ணலே "கைகேயி அன்னை சொல் அஞ்சொடு அஞ்சு நான்கு என்று எணும் ஆண்டு பஞ்சமி பெயர் படைத்துள்ள திதி இன்று பயந்த!" என்றனர்.

குபேரனின் புட்பக விமானத்தில் விபீடணனுடன், ராமர் சீதை இலக்குவன் ஏற அயோத்தி நோக்கி வருகிறார்கள். வரும் வழி எல்லாம் சீதையைப் பிரிந்த பின் நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ராமன் சீதையிடம் சொல்லிக் கொண்டே வருகிறான். ஆனால் சீதை மௌனமாகக் கேட்டுக் கொண்டே வருகிறாள். கிஷ்கிந்தையில் புட்பக விமானம் இறங்கும் பொழுது சீதை மெதுவாக தாரையுடன் பல பெண் வானரங்களையும் தன்னுடன் அயோத்திக்கு வருமாறு அழைக்கிறாள். ராமனுக்கு இது வியப்பை அளிக்கிறது.

இடையில் குகனிடத்தில்
"புண்ணிய நதியாடிப்
புனிதரை வழிபாடு உற்று எண்ணிய சில நாளில் குறுகுதும் இனிது!" என்றானே, அதனால் குகனைப் பார்ப்பதற்கும் பரத்வாச முனிவரின் பர்ண சாலையில் தங்குவதற்கும் தான் கொடுத்த தன்வாக்கைக் காப்பாற்ற அங்கு இளைப்பாறுகிறார்கள்.

இது எதுவும் அறியாத பரதன் ஜோதிடர்களைக் கூப்பிட்டு, உயிரை விட்டு விட்டு வருத்தும் துன்பத்தை உடையவன் "ஈண்டு வந்து இவர் இருக்கும்!" என்று எண்ணினான். ஜோதிடர்களும் "ஆண்தகைக்கு இன்று அவதி!" என்றனர்.

சந்தோஷமடைந்த பரதன் ராமனின் திருப் பாதுகைகளைத் தன் தலையில் எடுத்து வைத்துக் கொண்டு நந்தியம்பதியில் இருந்து அயோத்திக்குள் நுழைந்தான்.

கோசலை எப்பொழுதும் சொல்லுவாள் நூறு ராமன்கள், ராமனை விட நீ நல்லவன் என்று!

குகனும் "ஆயிரம் ராமர் நின்கேழ் ஆவரோ தெரியன் அம்மா!" என்பான்.

ஆனால் ராமனின் மனதில் பரதன் 14 ஆண்டுகள் அரசு நெறிமுறையில் ஆட்சி செய்தவன். பரதனின் மனநிலை அறிய வேண்டும் என்று தோன்றியது. இதனால் தான் இவர்கள் பரதனை உயர்த்திப் பேசினார்களோ!



அயோத்தி, ராமனின் வருகைக்காகக் காத்திருந்தது. காத்திருத்தல் என்பதில் எத்தனை சுகம்! அதுவும் 14 வருடங்களாக முறைப்படி இதே நாளில் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்ட அயோத்தி இன்று மீண்டு எழுகிறது. அண்ணல் வராமல் அயோத்தி வரமாட்டேன் என்று நுழையாமல் இருந்த, நந்தியம்பதியில் தன் அரசை ஆண்ட பரதாழ்வார், இராமனின் திருவடிகளைச் சுமந்து அயோத்தி அரண்மனை நோக்கிச் சந்தோஷமாகத் தன் அரசு சுமையை, தன் தாயின் வரத்தால் பெற்ற தீமைச் சுமையை இறக்கி வைக்கும் நன்னாள்; அன்னாளில், அனைத்தையும் ராமனிடம் ஒப்படைத்துவிட்டு தீயவழியில் தன் தாய் தனக்கு வாங்கி கொடுத்த அரசுரிமை என்னும் பாவத்தை ராமனின் திருவடியில் சமர்ப்பித்துத் தன் கண்ணீரால் கழிவினால் கூட அப்பவும் தீருமா என்பது சந்தேகம் தான். ஆனால் இராமனின் வருகை தாமதப்பட்டது.

"எனக்கு இயம்பிய நாளும் என் துன்பமும் என்னைப் பயந்தவள் துன்பமும் தாங்கி வனம் சென்றவன் அடுத்துவோர் வினைக் கொடும்பகை உண்டு போலும்!" என விம்மினான்.

திரும்பவும் நந்தியம்பதிக்குச் சென்றான். கொடும்பகை அவனை ஒன்றும் செய்யாது எனவும் தெளிந்தான். என் மனத்துன்பத்தைப் போக்கும் ஒரே செயல்

"சூர் எரி நெருப்பில் விழுந்து உயிர் துறப்பது தான்!" என்று எண்ணியவன்,

"தம்பி சத்ருக்கனனை அழைத்துத் தீ வளர்க்க ஆணையிட்டான்!".

பலவாறாகத் தன்னை வருத்திக் கொண்டவன், உயிர் வாழ விருப்பமில்லை சித்திரகூடத்தில் செய்த சத்தியத்தை முடிப்பேன் என்றான்.

"மாசு அற்றேன் இது காட்டுவென் மாண்டு!" என்றான்.

இதனைக் கேள்விப்பட்ட கோசலை மாதா தன் தளர்வையும் பொருட்படுத்தாமல் அப்போது அங்கே வந்தவள், பரதனைப் பலவாறாகத் தேற்றியும் பயனில்லை

அவனோ என் மனத் துன்பத்தை நீக்கும் மருந்து "சூர்எரி நெருப்பில் மாண்டு காட்டுவென்!" என்று சொல்ல,

இதனைக் கேட்டபோது கோசலை மாதா
"எண்இல்கோடி ராமன்கள் என்னினும்
அண்ணல்நின் அருளுக்கு அருகு ஆவரோ
புண்ணியம் எனும்நின் உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?" என்று கூறி "இக்காரியத்தைச் செய்ய வேண்டாம்!" என்று தடுத்தாள்.

அப்போது அனுமன் தோன்றி எரியை அவித்தனன். "ஐயன் வந்தனன்; ஆரியன் வந்தனன்
மெய்யின்மை அண்ணனின் உயிர் வீடினால் உய்யுமோ அவன் உயிர்
என்று உரைத்து உள்புகுந்து கய்யினால் எரியைக் கரி ஆக்கினன்".

"உன்னை முன்னம் வந்து எய்த (உரைத்த) நாள் இன்னும் எண் ஐந்து நாழிகை உள்ளது!" என்று தன்னைப் பரதனின் அடியேன் என்றான் அன்பினால் ."அது சரி நல்ல வார்த்தை கூறிய நீ யார்? என்பதை அறியேன்! நீர் பெருந்தகையாக இருந்தாலும் என் தலைமையனுக்குப் பெருந்துணையாக இருந்தாலும், முதலில் என் வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்றான்.

"ஒன்றுதான் உளது உன் அடியேன் சொலால், பரத்துவன் ஆசிரமத்தில் அமுது உண்ண வேண்டலால் தங்கினன் ராமன். நல்லது ஒன்று இன்னமும் இங்கண் கேட்டி!" என்றான் அனுமன்.

"அண்டர் நாயகன் அருளி அளித்த ஓர் பேர் அடையாளம் உனக்கு அது கொண்டு வந்தனன்; கண்டுகொண்டு அருள்வாய்!" என ராமனது கணையாழியைக் காட்டினான். மோதிரத்தைப் பெற்ற பரதன் தன் முகத்தின் மேல் அணைத்து "ஆதரம் பெறுவதற்கு ஆக்கையோ எனா ஓதினர் நாண் உற உடல் பூரிக்கப் பெற்றேன்!" என்றான். அவன் செய்த செயல்களைக் கம்பன் இவ்வாறு கூறுவான்.

அழும், நகும், அனுமனை ஆழி கைகளால் தொழும், எழும், துள்ளும், வெங்களி துளக்களால் விழும், அழிந்து ஏங்கும், போய் வீங்கும், வேர்க்கும், அக்குழுவொடும் குனிக்கும் தன் தடக்கை கொட்டும் ..

எத்தனை விதமான உணர்ச்சிகள் ..

"நீ எத்திறத்தாய் எனக்கு இயம்பி ஈதி! மும்மூர்த்திகளுள் ஒருவனை ஒத்து இருக்கின்றாய்! வடிவம் மட்டும் வேராய் உள்ளாய்!" என்றான்.

மறையவர் வடிவு கொண்டு அணுக வந்தனை! ஆம்! முன்பும் ராமனைக் காணச் சென்ற அனுமன் இதே வடிவத்தைத் தான் கொண்டான்.

உடனே அனுமனும் "காற்றினுக்கு அரசன்பால் கவிக் குலத்தினுள் நோற்றினள் வயிற்றில் வந்து உதித்தவன்; உம்முடைய அண்ணனுக்குத் தொழில் ஏவலாளனேன்; யான் ஒரு குரங்கு! உரு மாற்றி வந்தனன்!" என்றான்.

"அன்பினால் (பொருக்கென) விரைவாக வனத்திடைப் புகுந்த தன்மையை என் உணர்வு உருக்கி உற உரைத்தி!" என்றான் பரதன்.

சித்திரக் கூடத்தைத் தீர்த்து.. பத்து தலை ராவணன் விளைத்த பண்பும்.. அந்தப் போரில் நடந்த நிகழ்வுகளையும் கூறத் தொடங்கினான்.. கடைசியாக "அன்பினால் என்னை நின்பால் ஆழியும் காட்டி துன்பு எல்லாம் துடைத்து என்று துரந்தனன்!" என்றான்.

சலசலப்பு அடங்கியது. ஒரு காரியம் தொடங்கும் பொழுது ஏற்படும் சலசலப்பு, தொடங்கப் போகிறது என்பதில் கொஞ்சம் அடங்கி, தொடங்கி விட்டால் அமைதி பெறுகிறது.

எல்லோரும் இராமன் வரவிற்காகக் காத்திருந்தார்கள். வருவது உறுதி என்றானபின் அவனது பட்டாபிஷேகத்திற்கு உண்டான நிகழ்ச்சிகளும் நடைபெற, தயாராகிக் கொண்டிருந்தது அயோத்தியில்.

ஆனால் அன்றும் இன்றும் ஏதோ ஒரு வித்தியாசம் அந்த அரண்மனைக்குள் தெரிந்தது. ஆம் ஊர்மிளையின் மனது அன்று, இவர்களோடு பகிர்ந்து கொள்ள முடியாமல் ..ஆனால் இன்று எந்தச் சலனமும் இல்லாமல் அவள் உடல் அசைவற்று உறக்க நிலையிலேயே மஞ்சத்தில் சயனத்திருந்தது.

இதோ இன்னும் கொஞ்ச நேரத்தில் அவளது அன்பரும் வருவார். சித்திர கூடத்தில் நடந்த சத்திய வாக்கின்படிப் பரதன், ராமனை எதிர்பார்த்தான் என்றால், ஊர்மிளையும் நித்ரா தேவியின் வரவிற்காகக் காத்திருந்தாள்..

உறக்கம் கலைந்ததா .. அன்பர் உறக்கத்தை வாங்கிக் கொண்டாரா...இனி இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பார்களா.. காலம் இதற்குப் பதில் சொல்லும் ..

- தொடரும்

# அயோத்தி நாகேஸ்வர நாதர் கோவில்


அயோத்தி என்றதும் நம் நினைவுக்கு வருவது ராமர் கோவில் தான் அங்கு நாகேஸ்வரநாத் என்ற பெயரில் சிவபெருமானும் அருள் பாலிக்கிறார்
நகரின் மையமான ராம்கி பைடியில் இந்த கோவில் உள்ளது
ஸ்ரீ ராமரின் மகனானகுஷன் சரயு நதிக்கரையில் நீராடினான் அப்போது கையில் கட்டி இருந்த தாயத்து நழுவி நீருக்குள் மூழ்கியது நீண்ட நேரம் தேடியும் கிடைக்காததால் கவலையுடன் அரண்மனைக்கு சென்றான் சிறிது நேரத்தில்





நாகக்குலத்தை சேர்ந்த நாககன்னி தாயத்துடன் வந்தாள் அதைப் பெற்றுக் கொண்ட குசன் ரொம்ப சந்தோசம் உங்களுக்கு என்ன வேண்டும் என கேட்டான் நான் வழிபட சிவன் கோயிலை கட்டிக் கொடுங்கள் என்றாள் அவரின் விருப்பப்படியே கோவில் கட்டப்பட்டது சுவாமிக்கு நாகேஸ்வரநாத் என பெயர் சூட்டினார்

ஒரு கட்டத்தில் அயோத்தியை சுற்றியுள்ள கோயில்கள் சேதப்படுத்தப்பட்டன ஆனால் இந்த கோவிலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை ஆச்சரியப்பட்ட சந்தரகுப்த விக்கிரமாதித்த மன்னர் கோயிலை சீரமைத்து கொடுத்தார் 1750 இல் சப்தர்ஜங் அவையில் அமைச்சர் நவாஸ்ராய் புதுப்பித்த கோவில்தான் தற்போது



உள்ளது பல வண்ணங்களால் ஜொலிக்கும் நுழைவு வாயில் பக்தர்களை வரவேற்கிறது அழகிய சுவர்களில் கண்கவரும் விதத்தில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன
வட இந்திய பாணியில் மூன்று கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன கருவறையின் மேல் பகுதி வெள்ளியால் ஆனது சுவாமி நாகேஸ்வரநாத் தீப ஒளியில் மின்னுகிறார் இவரை வேண்டினால் விஷ ஜந்துக்களால் பிரச்சனை ஏற்படாது சிவராத்திரி பல்லக்கு ஊர்வலத்தில் பங்கேற்றால் பாவம் தீரும்.
சன்னதியில் கணேஷ் அனுமனையும் தரிசிக்கலாம் அயோத்திக்கு செல்பவர்கள் அவசியம் பார்க்க வேண்டிய கோவில் இது ராம் மந்திர் பகுதியில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

தினம் ஒரு தலைவர்கள்

# அகமதுல்லா ஷா வரலாறு

பைசாபாத்தின் மௌல்வி என்று அழைக்கப்படும் அகமதுல்லா ஷா (1787 - 5 ஜூன் 1858) , ஒரு பிரபலமான சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் 1857 ஆம் ஆண்டு இந்தியக் கிளர்ச்சியின் தலைவராக இருந்தார். மௌலவி அகமதுல்லா ஷா அவத் பிராந்தியத்தில் கிளர்ச்சியின் கலங்கரை விளக்கமாக அறியப்பட்டார். ஜார்ஜ் புரூஸ் மல்லேசன் மற்றும் தாமஸ் சீடன் போன்ற பிரிட்டிஷ் அதிகாரிகள் அகமதுல்லாவின் தைரியம், வீரம், தனிப்பட்ட மற்றும் நிறுவனத் திறன்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளனர். ஜிபி மல்லேசன் 1857 ஆம் ஆண்டு இந்தியக் கிளர்ச்சியை உள்ளடக்கிய 6 தொகுதிகளில் எழுதப்பட்ட இந்தியக் கலகத்தின் வரலாறு என்ற புத்தகத்தில் அகமதுல்லாவை மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார். தாமஸ் சீடன் அகமதுல்லா ஷாவை இவ்வாறு விவரிக்கிறார்:

சிறந்த திறமைகள், அசாத்திய துணிச்சல், கடுமையான மன உறுதி, மற்றும் கிளர்ச்சியாளர்களில் மிகச் சிறந்த சிப்பாய்.

— தாமஸ் சீடன்,

ஒரு முஸ்லிம் மதத்தை பின்பற்றுபவராக இருந்த அவர், பைசாபாத்தின் மத ஒற்றுமை மற்றும் கங்கா-ஜமுனா கலாச்சாரத்தின் சுருக்கமாகவும் இருந்தார் . 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியில், நானா சாஹிப் மற்றும் கான் பகதூர் கான் போன்ற அரச குடும்பத்தினர் அகமதுல்லாவுடன் இணைந்து போராடினர்.

ஆங்கிலேயர்களால் மௌல்வியை உயிருடன் பிடிக்கவே முடியவில்லை. அவரைப் பிடிக்க 50,000 வெள்ளி நாணயங்கள் விலை அறிவிக்கப்பட்டது. இறுதியாக போவாயன் மன்னர் ராஜா ஜகன்னாத் சிங் மௌல்வியைக் கொன்று, அவரது தலையை துண்டித்து, அவரது தலையை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தார், இதற்காக ராஜா ஜகன்னாதிற்கு அறிவிக்கப்பட்ட பரிசு வழங்கப்பட்டது. அடுத்த நாள், மௌல்வியின் தலை கோத்வாலியில் தொங்கவிடப்பட்டது காணப்பட்டது.



## குடும்பம்

அஹ்மதுல்லாவின் குடும்பம் ஹர்தோய் மாவட்டத்தில் உள்ள கோபமாவ் கிராமத்தின் பூர்வீக குடியிருப்பாளர் . அவரது தந்தை குலாம் உசேன் கான் சுல்தான் ஹைதர் அலியின் மைசூர் படையில் ஒரு இராணுவத் தளபதியாக இருந்தார் . ஜிபி மல்லேசன் மௌல்வியின் ஆளுமையை பின்வருமாறு விவரிக்கிறார்:

அந்த மௌல்வி ஒரு குறிப்பிடத்தக்க மனிதர். அவரது பெயர் அஹ்மத்-உல்லா மற்றும் அவரது சொந்த ஊர் அவுத்தில் உள்ள பைசாபாத். நேரில் பார்த்தால், அவர் உயரமானவர், ஒல்லியானவர் மற்றும் தசைநார் கொண்டவர், பெரிய ஆழமான கண்கள், வண்டு புருவங்கள், உயர்ந்த நீர்வாழ் மூக்கு மற்றும் லாந்தர் தாடைகள் கொண்டவர்.
மௌல்வி ஒரு சுன்னி முஸ்லிம் மற்றும் ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருக்கு ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி இருந்தது. பாரம்பரிய இஸ்லாமியக் கல்வியைப் பெற்ற பிறகு , மௌல்விக்கு பொதுநலப் பயிற்சியும் வழங்கப்பட்டது. அவர் இங்கிலாந்து , ரஷ்யா , ஈரான் , ஈராக் , மெக்கா மற்றும் மதீனா ஆகிய நாடுகளுக்குச் சென்று ஹஜ்ஜையும் செய்தார்.
1857 கிளர்ச்சிக்கு முன்பு ஆயுதமேந்திய கிளர்ச்சியின் வெற்றிக்கு, மக்களின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது என்று மௌல்வி அகமதுல்லா ஷா நம்பினார். அவர் டெல்லி , மீரட் , பாட்னா , கல்கத்தா மற்றும் பல இடங்களுக்குச் சென்று சுதந்திர விதைகளை விதைத்தார். மௌல்வி மற்றும் ஃபஸ்ல்-இ-ஹக் கைராபாதி ஆகியோரும் பிரிட்டன்களுக்கு எதிராக ஜிஹாத் அறிவித்தனர் .
1857 ஆம் ஆண்டு கிளர்ச்சி வெடிப்பதற்கு முன்பே, ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஜிஹாத் தேவைக்காக திட்டமிடப்பட்ட முறையில் ஃபதே இஸ்லாம் என்ற துண்டுப்பிரசுரத்தையும் அவர் எழுதினார் .

ஜிபி மல்லேசன் கூற்றுப்படி, "1857 கிளர்ச்சியின் சதித்திட்டத்திற்குப் பின்னால், மௌலவியின் மூளையும் முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை என்பதில் சந்தேகமில்லை. பிரச்சாரங்களின் போது ரொட்டி விநியோகம், சப்பாத்தி இயக்கம் , உண்மையில் அவரது மூளையில் பிறந்தது."

பாட்னாவில் கைது ஜிபி மல்லேசன் கூற்றுப்படி, மௌல்வி பாட்னாவில் இருந்தபோது, திடீரென எந்த முன்னறிவிப்பும் அல்லது தகவலும் இல்லாமல், பஞ்சாபிலிருந்து ஒரு அதிகாரி பாட்னாவிற்கு வந்தார் . ரஷ்மி குமாரி எழுதிய அகமதுல்லா ஷா பற்றிய புத்தகத்தில் அவர் லெப்டினன்ட் தர்ஸ்பெர்ன் என்று குறிப்பிடப்படுகிறார். தனது சட்டைப் பையில் ஒரு வாரண்டுடன், பாட்னாவில் உள்ள சாதிக்பூருக்குள் நுழைந்தார் . அவர் அகமதுல்லா ஷாவின் வீட்டிற்குள் நுழைந்து, காவல்துறையின் உதவியுடன் அவரைக் கைது செய்தார்.
பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி மற்றும் சதித்திட்டக் குற்றச்சாட்டில் மௌல்விக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது . பின்னர் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.
1857 மே 10 அன்று கிளர்ச்சி வெடித்த பிறகு, அசாம்கர் , பனாரஸ் மற்றும் ஜான்பூரிலிருந்து கிளர்ச்சி சிப்பாய்கள் ஜூன் 7 அன்று பாட்னாவை அடைந்தனர். ஏற்கனவே தப்பி ஓடிய ஆங்கில அதிகாரிகளின் பங்களாக்களைத் தாக்கினர். நகரத்தை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியவுடன், அவர்கள் அரசாங்க கருவூலத்தைக் கைப்பற்றினர். அவர்கள் சிறைச்சாலையை நோக்கிச் சென்று மௌல்வியையும் மற்ற கைதிகளையும் விடுவித்தனர். மான் சிங்கை பாட்னாவின் ராஜாவாக அறிவித்த பிறகு , மௌல்வி அகமதுல்லா அவத் சென்றார் .
கிளர்ச்சியாளர்களின் ஒரு படைப்பிரிவுக்கும் ஜெனரல் பிரிகேடியர் ஜோன்ஸின் படைப்பிரிவுக்கும் இடையே 1858 மே 15 அன்று கடுமையான போர் நடந்தது. இரு தரப்பினரும் பெரும் இழப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது, ஆனால் கிளர்ச்சியாளர்கள் ஷாஜஹான்பூரைக் கைப்பற்ற முடிந்தது. காலின் மே 20 அன்று ஷாஜஹான்பூரை அடைந்து, அனைத்துப் பக்கங்களிலிருந்தும் தாக்கினார். இந்தப் போர் இரவு முழுவதும் தொடர்ந்தது. மௌலவியும் நானா சாஹிப்பும் ஷாஜஹான்பூரை விட்டு வெளியேறினர். காலின் தானே மௌலவியைப் பின்தொடர்ந்தார், ஆனால் அவரைப் பிடிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது. ஷாஜஹான்பூரின் வீழ்ச்சிக்குப் பிறகு, மௌலவி ஷாஜஹான்பூருக்கு வடக்கே 18 மைல் தொலைவில் உள்ள போவயனுக்குப் புறப்பட்டார்.

## இறப்பு

ஆங்கிலேயர்களால் மௌல்வியை உயிருடன் பிடிக்கவே முடியவில்லை. மௌல்வியைப் பிடிக்க 50,000 வெள்ளித் துண்டுகளை பரிசாக அறிவித்தனர். பவாயன் மன்னர் ராஜா ஜெகன்னாத் சிங்கை ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்ட மௌல்வி அகமதுல்லா ஷா விரும்பினார், ஆனால் மௌல்வியின் விருப்பத்திற்கு மௌல்வி அடிபணியவில்லை. மௌல்வி தனது போர் யானையின் மீது தனது அரண்மனையின் வாயிலை அடைந்தபோது , மன்னர் பீரங்கி குண்டு வீசி அவரைத் தாக்கினார் . இதனால் மௌல்வி தனது யானையிலிருந்து கீழே விழுந்து இறந்தார். ஜிபி மல்லேசன் அவரது மரணத்தை இவ்வாறு விவரிக்கிறார்:

இவ்வாறு பைசாபாத்தின் மௌல்வி அகமதுல்லா ஷா இறந்தார். ஒரு தேசபக்தர் தனது சொந்த நாட்டிற்காக சுதந்திரத்திற்காக சதி செய்து போராடி, தவறாக அழிக்கப்பட்ட ஒரு மனிதராக இருந்தால், நிச்சயமாக, மௌல்வி ஒரு உண்மையான தேசபக்தர் ஆவார்.

— ஜிபி மல்லேசன்

போவாயன் மன்னர் ராஜா ஜகன்னாத் சிங்கின் சகோதரர் குன்வர் பல்தியோ சிங், மௌல்வி அகமதுல்லா ஷாவைக் கொன்று, அவரது தலையை துண்டித்து, அதை நீதிபதியிடம் ஒப்படைத்ததாக அறியப்படுகிறது . அவருக்கு அறிவிக்கப்பட்ட பரிசு வழங்கப்பட்டது மற்றும் ஆங்கிலேயர்களின் ஆதரவைப் பெற்றார். மௌல்வியின் தலை மறுநாள் கோட்வாலியில் தூக்கிலிடப்பட்டது. 1857 ஆம் ஆண்டின் மற்றொரு புரட்சியாளரான ஃபஸ்ல்-இ-ஹக் கைராபாதி, மௌல்வியின் மரணத்தைக் கண்டார்.

# டிடி வாழ்க்கையில் விதி விளையாடிவிட்டது



நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் தமிழ் சினிமாவில் முக்கிய நடிகையாக இருந்து வருகிறார். அவருக்கு தற்போது 36 வயதாகிறது.

எப்போது திருமணம் என அவரிடம் பல பேட்டிகளில் கேள்வி கேட்டு வருகிறார்கள். தற்போது ஒரு கடை திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டபோது அதே கேள்வியை செய்தியாளர்கள் கேட்டிருக்கிறார்கள்.

மாப்ள இருந்தா சொல்லுங்க கேள்விக்கு பதில் அளித்த ஐஸ்வர்யா ராஜேஷ் "நல்ல மாப்ள இருந்த காட்டுங்க" என கூறினார். உடனே அங்கே கரண்ட் கட் ஆகி இடமே இருட்டாகிவிட்டது.

"போச்சுடா.. கரண்ட் போச்சு. நல்ல பசங்களே இல்லையா" என தலை மீது கை வைத்து விட்டார் ஐஸ்வர்யா ராஜேஷ்.



சன் தொலைக்காட்சியில் ரசிகர்கள் ஆர்வத்துடன் பார்க்கும் சீரியல்களில் ஒன்று தான் எதிர்நீச்சல். குணசேகரன் என்ற ஆணாதிக்க எண்ணம் கொண்ட நபரிடம் இருந்து சாதிக்க போராடும் அவரது வீட்டுப் பெண்களின் போராட்ட கதையாக தொடர் கதை உள்ளது. ஆனால் குணசேகரனுக்கு ஆதரவாகவே கதை இருப்பதாகவும் பெண்கள் மீண்டும் மீண்டும் தோற்றுப்போய் அடிமையாகவே உள்ளார்கள் என்ற வருத்தம் சீரியல் ரசிகர்களுக்கு அதிகம் உள்ளது.

# தவெக 18வது வார்டு செயலாளர்.. தாய் கிழவி டிரெய்லர் வெளியானது!




அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில், நடிகை ராதிகா முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ளப் படம் தாய் கிழவி. இப்படத்தை சிவகார்த்திகேயன் ப்ரொடக்ஷன்ஸ் மற்றும் பேஸன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ளது. நிவாஸ் கே.பிரசன்னா இசையமைத்துள்ள இப்படத்தில் ராதிகாவுடன் சிங்கம் புலி, அருள்தாஸ், பால சரவணன், முனிஷ்காந்த், இளவரசு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

உசிலம்பட்டி அருகே உள்ள ஒரு கிராமத்தில் வாழும் 75 வயது மூதாட்டி மற்றும் அவரது குடும்பத்தைச் சுற்றியுள்ள நகைச்சுவையான நிகழ்வுகளே படத்தின் கதை. இப்படம் வரும் 27ஆம் தேதி வெளியாக உள்ளது. இந்நிலையில் இதன் டிரெய்லர் வெளியாகி கவனம் ஈர்த்து வருகிறது. இப்படத்தை பார்த்து சமீபத்தில் கமல்ஹாசன் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

# காந்தாரா சர்ச்சை – தன்மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி கர்நாடக உயர் நீதிமன்றத்தில் ரன்வீர் சிங் மனுத்தாக்கல்

கடந்தாண்டு கோவாவில் நடைபெற்ற 55-வது சர்வதேசத் திரைப்பட விழாவில் காந்தாரா சாப்டர்-1 பட நாயகன் ரிஷப் ஷெட்டி, பாலிவுட் புகழ் ரன்வீர் சிங் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். அப்போது விழாவில் காந்தாரா படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண் தெய்வம் ரிஷப் ஷெட்டி உடலுக்குள் செல்லும்போது அவர் வெளிப்படுத்திய நடிப்பு அபாரமாக இருந்ததாக கூறிய ரன்வீர் சிங், அதுபோல நடித்தும் காட்டினார்.

இதுபெரும் சர்ச்சைக்கு வழிவகுத்தது. இது ரிஷப் ஷெட்டியின் நடிப்பை கிண்டல் செய்யும் விதமாக இருந்ததாகவும், பெண் தெய்வத்திற்கும், பேய்க்கும் வித்தியாசம் தெரியவில்லை எனவும், இந்த செயல் தங்கள் மத உணர்வுகளை புண்படுத்தியதாகவும் பல்வேறு தரப்பிலிருந்தும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இதில் உள்நோக்கம் எதுவும் இல்லை எனவும், தவறாக புரிந்துகொண்டிருந்தால் மன்னிப்புக் கோருவதாகவும் ரன்வீர் சிங் தெரிவித்தார்.

இதனிடையே இது கடலோர கர்நாடகாவின் புனிதமான 'பூத கோலா' கலாச்சாரத்தை அவமதிப்பதாகக் கூறி, பெங்களூரைச் சேர்ந்த வழக்கறிஞர் பிரசாந்த் மேத்தல் என்பவர் ரன்வீர் சிங்மீது புகார் அளித்தார். இந்தப் புகாரின் அடிப்படையில், பெங்களூரு ஹைகிரவுண்ட்ஸ் காவல் நிலையத்தில் ரன்வீர் சிங் மீது மத உணர்வுகளைப் புண்படுத்துதல் (பிரிவு 299) மற்றும் மத விரோதத்தைத் தூண்டுதல் (பிரிவு 196) உள்ளிட்ட பாரதிய நியாய சன்ஹிதா (BNS) பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.



இந்நிலையில் தன்மீது பதியப்பட்டுள்ள இந்த வழக்கை ரத்து செய்யுமாறு நடிகர் ரன்வீர் சிங் கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

# அடுத்தடுத்து வெளியாகும் டாக்சிக் பட அப்டேட்கள்...



மலையாள இயக்குநர் கீது மோகன்தாஸ் இயக்கத்தில், 'ராக்கிங் ஸ்டார்' யஷ் நடிப்பில் உருவாகி வரும் படம் டாக்சிக். 1940 முதல் 1970 வரையிலான காலகட்டத்தில், கோவாவில் நிலவிய போதைப்பொருள் கடத்தல் மற்றும் மாஃபியா கும்பல்களை மையமாகக் கொண்ட ஆக்ஷன் த்ரில்லர் கதையாக இந்தப் படம் உருவாகியுள்ளது.

இந்தப் படத்தில் நயன்தாரா, கியாரா அத்வானி, ஹூமா குரேஷி, தாரா சுதாரியா மற்றும் ருக்மிணி வசந்த் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். இதனை படக்குழு ஏற்கனவே தனித்தனி போஸ்டர்களை வெளியிட்டு அறிவித்து இருந்தது. இந்த வரிசையில், டாக்சிக் திரைப்படத்தில் சுதேவ் நாயர் "கர்மாடி" என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளதை படக்குழு சமீபத்தில் அறிவித்தது.

இந்த நிலையில், டாக்சிக் திரைப்படத்தில் அக்ஷய் ஒபராய் "டோனி" என்ற கதாபாத்திரத்தில் நடிப்பதை படக்குழு புதிய போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

ஒரே நாளில் டாக்சிக் படத்தின் அடுத்தடுத்த அப்டேட்கள் வெளியாகி இருப்பது ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மேலும், இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் விரைவில் வெளியாகும் என்று தகலவல் வெளியாகி உள்ளது. இந்தப் படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் மார்ச் 19 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

# டாக்சிக் படத்தில் 'கர்மாடி'யாக நடிக்கும் சுதேவ் நாயர்... வெளியான அசத்தல் அப்டேட்



மலையாள இயக்குநர் கீது மோகன்தாஸ் இயக்கத்தில், 'ராக்கிங் ஸ்டார்' யஷ் நடிப்பில் உருவாகி வரும் படம் டாக்சிக். 1940 முதல் 1970 வரையிலான காலகட்டத்தில், கோவாவில் நிலவிய போதைப்பொருள் கடத்தல் மற்றும் மாஃபியா கும்பல்களை மையமாகக் கொண்ட ஆக்ஷன் த்ரில்லர் கதையாக இந்தப் படம் உருவாகியுள்ளது.

இந்தப் படத்தில் நயன்தாரா, கியாரா அத்வானி, ஹூமா குரேஷி, தாரா சுதாரியா மற்றும் ருக்மிணி வசந்த் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். இதனை படக்குழு ஏற்கனவே தனித்தனி போஸ்டர்களை வெளியிட்டு அறிவித்து இருந்தது. இந்த வரிசையில், டாக்சிக் திரைப்படத்தில் சுதேவ் நாயர் "கர்மாடி" என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளதை படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்து இருக்கிறது.

மேலும், இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் விரைவில் வெளியாகும் என்று தகலவல் வெளியாகி உள்ளது. இந்தப் படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் மார்ச் 19 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

# 2 முறை தற்கொலை முயற்சி - KGF பட இசையமைப்பாளர் ரவி பஸ்ரூர் ஓபன் டாக்!

KGF படத்தில் இவரின் இசை இந்திய அளவில் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.

2 முறை தற்கொலை முயற்சி செய்துள்ளதாக ரவி பஸ்ரூர் தெரிவித்துள்ளார்.

இசையமைப்பாளர் ரவி பஸ்ரூர் KGF படத்தின் மூலம் இந்திய அளவில் பிரபலமானார். KGF படத்தில் இவரின் பாடல்கள் மற்றும் பின்னணி இசை இந்திய அளவில் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.

இந்நிலையில், தான் 2 முறை தற்கொலை முயற்சி செய்துள்ளதாக ரவி பஸ்ரூர் தெரிவித்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பேட்டி ஒன்றில் பேசிய ரவி பஸ்ரூர், "எனக்கு 18 வயது இருக்கும்போது 2 முறை உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்துள்ளேன். 2வது முறை ஒருவர் என்னை காப்பாற்றி கீபோர்ட் வாங்குவதற்காக எனக்கு ரூ.35,000 கொடுத்தார். அவர்தான் ரவி. அதையே என் பெயருக்கு முன் சேர்த்து ரவி பஸ்ரூர் என வைத்துக் கொண்டேன்" என்று தெரிவித்தார்.






FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots, Flats, House
Villa, Bungalows
Farm Land, Ware Houses
Factory Sites, Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்






## பறவை குஞ்சுகளின் நம்பிக்கை

வண்ணங்கள் பலவாக
இருக்கலாம்
எண்ணங்கள்
ஒன்றுதானே மாற்றங்கள்
இல்லையே
தாய் மனம் மாறாது தன்
குஞ்சுகளை பேணுவதில்
இயற்கையின் பொது விதி
இரு குஞ்சுகளும்
அன்னையின்
பாதுகாப்பில் பருந்து பயம்
இல்லாமல் தந்தை பறவையின்
கொடைடை நிழலில்
பெருமையாக எந்த துன்பமும்
நேராது எங்கள் அன்னை
தந்தை
இருக்கையில்
பயமென்ன
சொல் உலகமே
களிப்பே !!



**செல்லம் சேகர்**



திரும்பி வர மனசே இல்லை
தோற்றே போனாலும்
முதல் காதல் வலி தந்திடும்
தித்திப்பு தான்!

எல்லாம் தொலைந்த பின்பும்
பாழாய் போன
நெஞ்சத்தில் நிலைத்திருப்பது
அந்த காதல் தான்!

தனிமை கூட நரகம் தான்
உன் நினைவுகளால்!

கட்டிப்பிடிக்கவும் வேண்டாம்
கன்னத்தில் முத்தமிடவும்
வேண்டாம் காலம் முழுதும்
உன் கை பிடித்து
நடந்தாலே போதுமடி!!

தண்ணீர் தேங்கி இருக்கும்
குளத்தில் எண்ணற்ற
தாமரைகளும்,அல்லிகளும்
கண்ணீர் தேங்கி இருக்கும்
என் விழித்திரையில்
உன் நினைவுகளும்,
நீ தந்த ஏமாற்றங்களும்!!

முகமே இல்லாதவனிடம்
முகவரி கேட்பது நியாயமா?
உன் அகம் தான்
என் அடையாளமடி!
சந்தேகமிருந்தால்
கண்ணாடி பார்
உன்னில் நான்
தெரிவேன்!



**லி.நௌஷாத் கான்**



## மன்னித்து விடு.!

சிலுவைகள் இன்றும் சுமத்தப்
படுகின்றன.! மன்னித்து
விடுக.. பரம பிதாவே.!

குடித்துக் குடித்து மடிந்த
தந்தையின் காலடியில்
போதையில் அழுகின்ற
மகனை... பசிக்கிற
மகளுக்கு பால் வாங்க
பணமில்லை.. கடை விரித்து
காமக் கண்களுக்கு
விருந்தான பெண்ணை..

அழுக்குத் துணி
துவைத்தனுக்கு.. இரண்டு
ரூபாய் கூட்டிக் கொடுக்க
மனமில்லை. சட்டைப் பையில்
இருந்த நூறு ரூபாயைத்
திருப்பிக் கொடுக்க வந்த
சலவைக்காரன்.. சலவை
மனதுக்கா.. ஆடைக்கா..
தெரியாத முதலாளி.!

காகிதம் பொறுக்க கந்தல்
உடைச் சிறார்கள்..
குப்பைத் தொட்டிக்குள்..
தேடுவோம் இதயம்.!. காகித
நோட்டுக்கு பெட்டிக்கள்
செய்து..கருணை மனதைப்
பூட்டி வைத்தோம்.. நாம்
மனிதர்கள்.!

உழுத நிலம் கல்
நட்டு.. நெய்த நெசவை
கைவிட்டு.. பழுது
அடைந்த இயந்திரமாய்..
நின்று கொண்டிக்கின்ற..
பட்டிணத்து வீதியிலே.. கடன்
வாங்கிப் போட்ட சீருடையில்
செக்யூரிட்டிகள்..

மன்னித்து விடு.. இறைவா
இதற்கெல்லாம் காரண
கர்த்தா நீதானென்றால்..
இன்றும் சிலுவையில்
தொங்குகின்றாய் என்றுதான்
அர்த்தம்.! பர
மண்டலத்
திலிருக்கின்ற
பரம பிதாவே..
இவர்களை
மன்னித்து
விடு.!



**வே.கல்யாண்குமார்.**

## நானொருக் கவிஞனென்று..!

நானொருக் கவிஞனென்று..
தலைநிமிர்ந்து சொல்க
நின்று.!

திறமை உனக்கு உண்டு!
தேன்தமிழ் உன்னுளுண்டு..
இறைவனைப் போல இன்று..
எழுத்தினைப் படைப்பாய்
நின்று.!

நானொரு கவிஞனென்று..
தலை நிமிர்ந்து சொல்க
நின்று.!

கற்பனை மேகம் உண்டு
கவிதையில் மழையுமுண்டு..!
சொற்களில் வீரம் உண்டு..
சுயமரியாதை உண்டு..!

நானொரு கவிஞனென்று..
தலை நிமிர்ந்து சொல்க
நின்று.!

நெருப்பலை நெஞ்சில்
உண்டு.! நீடுதுயில்
நீக்கக் கண்டு.. மறுப்பிலா
கொள்கையாலே.. மாந்தனை
நினைத்ததுண்டு.!

நானொரு கவிஞனென்று..
தலை நிமிர்ந்து சொல்க
நின்று..!

கொடுமையை எதிர்த்து
நின்று.. கவிதைகள் வழங்கு
இன்று. மடமைகள் வீழக்
கண்டு மாக்கவி எழுது
நின்று.!

நானொரு கவிஞனென்று..
தலை நிமிர்ந்து சொல்க
நின்று.!

மரணத்தை வார்த்தைக்
கொண்டு.. வென்றிடப்
போராடு நின்று.. இரவெனில்
விடியல் உண்டு.. எழுதுக
கவிதை நின்று..!

நானொரு கவிஞனென்று..
தலை நிமிர்ந்து சொல்க
நின்று.!

**வே.கல்யாண்குமார்**

## அரும்வாழ்வு அமைய வாழ்வோம்

துள்ளுகின்ற இளம்பருவ ஆணவத்தால்
துச்சமென யாரையுமே மதிக்க வில்லை
எள்ளலுடன் ஏகடியம் பேசிப் பேசி
எதிர்வருவோர் யாரையுமே மதிக்கவில்லை !
உள்ளத்துத் துணிவாலே வீணாய்ச்சண்டை
ஊருக்குள் யாரையுமே மதிக்க வில்லை
கள்ளமுடன் தீச்செயல்கள் நாளும் செய்து
காண்பவர்கள் யாரையுமே மதிக்கவில்லை !

அதிவலிமை உள்ளதெனும் மூர்க்கத்தாலே
அன்பாக யாருடனும் பேசவில்லை
மதிசொல்லும் அறிவுரைகள் கேட்டிடாமல்
மரியாதை யாருக்கும் கொடுக்க வில்லை !
எதிலுமொரு வேகமுடன் சுற்றத்தார்கள்
எவருடனும் இணக்கமான உறவு இல்லை
குதித்திட்ட இளமையாலே குறிக்கோளில்லை
குறுக்குவழி நேர்மையில்லை ஒழுக்கமில்லை !



குருதிசுண்டித் தோல்சுருங்கி முதுமை எய்த
கூன்முதுகில் எனைமதிப்போர் யாருமில்லை
வருந்திஈனக் குரலெழுப்பி அழைத்தபோதும்
வந்தருகில் ஏனென்று கேட்போரில்லை !
செருக்குடனே இளமைதனில் செய்ததெல்லாம்
செருப்படியாய் விழுந்ததின்று தடுப்போரில்லை
அரும்பாசம் அன்புகாட்டி அணைத்திருந்தால்
அருகினிலே இருந்திருப்பர் பலரும் அன்றோ !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## திருமணம் !

காதலித்து திருமணம்
செய்தவர்களெல்லாம்
நிம்மதியோடு வாழ்கிறார்கள்
என்று வீட்டில் நிச்சயத்து
திருமணம் செய்தவர்களும் !

வீட்டில் நிச்சயித்து
திருமணம் செய்தவர்கள்
எல்லாம் மிகவும்
சந்தோஷமாகவாழ்வதாக
காதலித்து திருமணம்
செய்தவர்களும்.... !
நினைத்துக் கொள்ளும்
அதே நேரத்தில்....

திருமணம் செய்தவர்கள்
எல்லாம் மிக, மிக
சந்தோஷமாக இருக்கிறார்கள்
என்று ' சிங்கிளாக '
வாழ்பவன் தவறாக
எடை போட்டுகொள்கிற
நிலையைஅவன்
தலைவிதியன்று
வேறென்ன
சொல்வது!



**எம்.பி.தினேஷ்.**
கோவை

## எங்கும் எதிலும்!

எங்கும் எதிலும் நேர்மை
வேண்டும் எவரும் ஊழல்
செய்யாதிருக்க வேண்டும்!

சக மனிதர்களை மதித்திட
வேண்டும்

சகலமும் சகலருக்கும்
கிடைத்திட வேண்டும்!

உயர்ந்தவன் தாழ்ந்தவன்
நிலை வேண்டாம் உலகில்
யாவரும் சமநிலை வேண்டும்!

ஏழை பணக்காரன் இருநிலை
வேண்டாம் எல்லோரும்
சம்மான ஒருநிலை வேண்டும்!

பசியால் ஒருவரும்
வாடாதிருக்க வேண்டும்
பசித்த வயிற்றுக்குச் சோறிட
வேண்டும்!

ஏற்றத்தாழ்வு இல்லாதிருக்க
வேண்டும் எங்கும் எதிலும்
சமநிலை வேண்டும்!

மாட மாளிகைகள்
இல்லாதிருக்க வேண்டும்
மழைக்கு ஒழுகும்
குடிசையும்
வேண்டாம்!

நடுத்தர வீடுகள்
அனைவருக்கும்
வேண்டும்

நாடே சமநிலை அடைந்திட
வேண்டும்!

வேலைவாய்ப்பு
அனைவருக்கும் வேண்டும்
வேலையின்றி தவிக்கும் நிலை
வேண்டாம்!

கோடிகள் பதுக்குவோரை
சிறையிலிட வேண்டும்
கோவில்களில் தமிழ்ப்பாடல்
ஒலித்திட வேண்டும்!

மூடநம்பிக்கைகள் முற்றாக
ஒழித்திட வேண்டும்
மூளையைப் பகுத்தறிவிற்குப்
பயன்படுத்திட வேண்டும்!

சாதிமத வேறுபாடுகள்
தகர்த்திட வேண்டும்
சகோதரர்களாக அனைவரும்
வாழ்ந்திட வேண்டும்!

பெண்களை ஆண்கள்
மதித்திட வேண்டும்
பெண்கள் ஆண்களை
மதித்திட வேண்டும்!

குழந்தைகளை யாவரும்
போற்றிட வேண்டும்
குழந்தைகளின் கருத்திற்கு
மதிப்பளிக்க வேண்டும்!

எங்கும் எதிலும் நியாயம்
வேண்டும் எங்கும்
எதிலும் நாணயம்
வேண்டும்!



**கவிஞர் இரா. இரவி**




# நூல் விமர்சனம்

நூலின் பெயர் : இறையன்பு ஓராண்டு உரைகள்
விலை : 4 தொகுதிகள் சேர்த்து ₹1500
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
தொடர்புக்கு : 044– 2625 1968/2625 8

*இறையன்பு IAS அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு (101 உரைகள்)*

### தொகுதி 3:

*57.பசித்திருதனித்திருவிழித்திரு*

முல்லா நசுருதீன் எல்லாவற்றிலும் இருந்து கற்றுக் கொள்ளலாம் என எல்லோரிடமும் சொல்வார்.

ஒருநாள் உயரமான கட்டடம் ஒன்றிலிருந்து ஒருவன் தற்கொலை செய்வதற்காக கீழே குதித்தான். அந்த சமயத்தில் பார்த்து முல்லா கீழே வர, அவன் அவருடைய தோளில் விழுந்து விட்டான். பிழைத்துக் கொண்டான்.

முல்லாவுக்கு கழுத்திலே எலும்புமுறிவு.மருத்துவமனையிலே சேர்த்திருந்தார்கள். இளைஞர் களெல்லாம் வந்தார்கள். அப்போது அவர்கள், " எல்லாவற்றிலிருந்தும் கற்றுக்கொள்ளலாம் என்று சொல்வீர்களே, இதிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?" என்று கேட்டார்கள். அவர் சொன்னார், 'எப்போதுமே மேலே இருந்து கீழே விழுகிறவனுக்குத்தான் அடிபடும் என்று நினைத்தேன். கீழே சாவகாசமாகப் போகின்றவனுக்குக்கூட எலும்பு முறிவு அடையும் என்பதை இப்போது தான் கற்றுக் கொண்டேன்' என்று சொன்னாராம்.

### தொகுதி 4:

*98. பேரறிஞர் அண்ணா*


முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் ராமநாதபுரம் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, விழாவில் அவரைப் பேச வைக்க வேண்டும் என தொடர் வண்டியில் சென்னை சென்று அழைக்க , முதலில் வர முடியாது என மறுத்த அண்ணா, விடாப்பிடியாக பிடிவாதம் பிடித்த கலாமிடம் உறுதிமொழி அளித்து அனுப்பி வைத்தாராம்.

எந்தத் தேதியில் பள்ளிக்கு வரப் போகிறார் என்ற விவரம் பள்ளிக்கு அனுப்பி வைத்ததும் ராமநாதபுர மாவட்டமே விழாக் கோலம் பூண்டதாம்.

மேடையேறிய அண்ணா மாணவர்களைப் பார்த்து,' எந்தத் தலைப்பில் பேச வேண்டும்?' என்று கேட்கிறார். 'நதிகள்' என்று தலைப்பு தரப்படுகிறது. அப்துல் கலாம் வார்த்தைகளில் சொல்வதென்றால்' மடைதிறந்த வெள்ளம் போல் அந்தத் தலைப்பில் பேச ஆரம்பித்தாராம் அண்ணா.

மனித வரலாற்றில் 5000 ஆண்டுகளுக்கு மேலாக நதிகள் எப்படி மனித நாகரிகத்தை மேம்படுத்தின என்பதில் ஆரம்பித்து, இந்திய நாகரிக வளர்ச்சியில் நதிகளின் பங்கு, மேற்கு நாடுகளான சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகியவற்றில் நதிநீர் எப்படி அற்புதமாகப் பயன்படுத்துகிறது என ஒன்றரை மணி நேரம் தேனருவி போல உரை நிகழ்த்தினாராம். வாசிப்பை நேசிக்க வைக்கும் தொகுப்பு இது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**



## ஹைக்கூ ! சென்ரியு !

வியர்ப்பதே இல்லை
எவ்வளவு ஓடினாலும்எலி !

தொழில்நுட்பம் கற்பிக்கும்
குருவாகின்றான்மகன் !

நேரமில்லை
பொய் மனமில்லை
உண்மைணசாதிக்க !

அழுக்காடை சுமக்க
வருத்தமில்லை சுத்தாடை
சுமக்க கர்வமில்லை கழுதை!

உலகில் ஒருவருமில்லை
கவலையற்றோர் !

சிரிக்கின்றன பிணத்தின்
மீதிருந்தும் மலர்கள் !

களவாடுகின்றான் கதிரவன்
மலர்களில் பனித்துளிகள் !

எரிச்சலூட்டியபோதும் நன்றி
உணவு கிடைக்கின்றது
விளம்பர இடைவெளி !


வன்மம் கற்பிக்கும்
பாடசாலை தொலைக்காட்சித்
தொடர்கள் !

பூவே பூ சூடியது என்னவள் !
வேண்டவே வேண்டாம்
மிகக் கொடியது கோபம் !

உடற்பயிற்சியின் இராசா
உடல்நலம் காக்கும்
நடைப்பயிற்சி !

வேண்டா வெறுப்பாக
வேண்டாம் விரும்பி
செய்வோம் விவசாயம் !
கல் சிலையானது
சிற்பியின் சிந்தையால் !

**கவிஞர் இரா .இரவி !**



## காதலென்பது கணக்கு

நேசிப்பதை நேசிப்பவரை
வெறுத்துவிடுங்கள்.

அவன் நேசித்தால் அவளும்
அவள் நேசித்தால் அவனும்
நேசிப்பார்கள். இதிலென்ன
காதல் மயிரு உயிரு என்று
அவர்களுக்குள்.

இவை கடன்
கணக்குத்தானே
50 பைசா வட்டியாக
மன அழுத்தம் மனச்சோர்வு
மனக்கசப்பு சோகம் ஏக்கம்
அழுகை இவையும்.
கூட்டு வட்டியாக
இரவைத் தொலைத்தல்
பகலை மறுத்தல்
உறவுகளை வெறுத்தல்
உணவைத் துறத்தல்
அன்றும் இன்றும்
கூட்டுவட்டிகள்
பெருகிக்கொண்டே தானே
இருக்கிறது.

ஆனால், உண்மையில் காதல்
என்பது கணக்குதான்
விட்டுக்கொடுத்தலை
பெருக்கி வீண்
சண்டைகளை கழித்து
புரிந்துக்கொள்வதை கூட்டி
இவள்தான் என்றும்
இவன்தான் என்றுமென
வகுத்து வாழ்ந்தால்
காதல் என்பது
கணக்குதான்.

கணக்கு
வரவில்லையா
கவலை
வேண்டாம்
நேசிப்பதை
நிறுத்திவிடுங்கள்
நேசிப்பவரை
வெறுத்துவிடுங்கள்
பாகுபாடில்லாமல்.



**துங்கன்**



## மேனாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா!

நேரிசை வெண்பா!

தமிழ்நாட்டின் முன்னாள்
தகவாய் முதல்வர்

கமழ்ந்திடும் திட்டம்
கனிவாய்... அமைந்திடச்

செய்தாரே ஜெயலலிதா
சீர்மையுடன் ஆட்சியை
நெய்திட்டார் அன்னாரை நேர்!

தொட்டில் குழந்தைதிட்டம்
நன்றே தொடங்கினார்

மட்டில்லா ஆட்சியை
மாண்புடன்... திட்டமாய்க்

கண்டார் ஜெயலலிதா
காணும் திரைத்துறையில்
கொண்டார் பலவிருது கூறு!

## கொல்லாமை நன்று கொலை தீது!

அறுசீர் மண்டிலம்.

ஒருயிரைக் கொன்று புசித்தே
உன்னுடலை வளர்க்காதே
ஆருயிரைக் கொன்று புசித்தே
அன்புடலை வளர்க்காதே!
சீருயிரைக் கொன்று
புசித்தே
சீரழிந்து போகாதே
தேருயிரைக்
கொன்று புசித்தே
தெளிவின்றி
வாழ்ந்திடாதே!

கொலைசெய்து உடலை
வளர்த்துக்கும்மாளம்
அடிக்காதே நலமில்லாக்
கொலையே செய்து
நயன்மைதன்னை
இழக்காதே!
பலவான்கள் செல்வம்
கொண்டேதான் நடப்பாரே
கலைகளையே எந்த
நாளும் சார்ந்துநீயும்
அழிக்காதே!

## முற்று முணர்ந்தவர் இல்லை!

எண்சீர் மண்டிலம்.

முழுவதையும் கற்றவரே
எவரு மில்லை முழுவதையும்
கற்றிட்ட செருக்கு வேண்டா!
சுழல்கின்ற உலகன்றோ
பெரிது தானே சுற்றிவந்து
நின்றாலும் பெரிது கல்வி!
முழக்கமிட்டுச்சொன்னாலும்
உலகந் தன்னில் முழுவதையும்
கற்றவரே உண்டோ சொல்வீர்!
எழிலான கல்வியைத்தான்
ஏற்ற மாக ஈங்கேதான்
கற்றதையே காட்ட லாகா!

கற்றதெல்லாம்
கைம்மண்ணின் அளவு தானே
கற்பதற்கு இன்னும்தான்
நிறைய உண்டே! உற்றதுயர்
நீங்கிடவே படிக்க வேண்டும்
உண்மைதனை மட்டும்தான்
பேச வேண்டும்!
பற்றெல்லாம் படிப்பதிலே
வைத்திட்டாலே
பட்டறிவும் நூலறிவும்
தானாய்க் கிட்டும்!

சற்றுந்தான் சோம்பலின்றிக்
கல்வி கற்றால் சந்தனமாய்
மணந்திடலாம்
கல்வி யாலே!



**முனைவர் இராம.வேதநாயகம்**

# புதுக் கவிதை பகுதிகள்



## துளிப்பா

ஆளுக்கொரு வாகனம் என்ற நிலை மாற்றிடு
குடும்பத்திற்கொரு வாகனம் என்ற நிலையாக்கிடு
நாளுக்கு நாள் வாகன மாசு பெருகுவதைத் தடு
வான மண்டலத்தில் ஓசோன் ஊட்டை மூடு
தோள் கொடுப்போம்,வெப்பமயமாதலை உடன் தடு

கண்ணே மணியே மானே தேனே
கண்டபடி புகழ்வான் மயங்காதே பெண்ணே
கண் சிமிட்டி அழைப்பான் உன்னை
கன்னியே சபலப்பட்டு விடாதே நீ
கண்ணி வைத்து பிடித்திடப் பார்ப்பானே.

ஆற்று நீரில் நடக்குது அரசியல்
தேற்றுவார் இன்றி சோகத்தில் விவசாயிகள்
ஒற்றை போகத்திற்கு தண்ணீர் விவசாயிகள்
ஒற்றை போகத்திற்கு தண்ணீர் திண்டாட்டங்கள்
மூன்று போகம் கண்ட நிலங்கள்
நாற்று நடும் நிலங்கள் வறட்சியில்

ஜான் பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளை என்று
ஆண் என்ற ஆணவம் வளர்த்தனர் அன்று
பெண் என்றால் மட்டம் என்பது மடத்தனம்
நான் ஆண் என்ற அகந்தை வந்தது இன்று
ஏன்? இந்த வேறுபாடு சமமாக மதித்திடு நன்று.

ஓடி ஓடி உழைத்துத் தேய்ந்த போதும்
தேடித் தேடி நாளும் அலைந்திட்ட போதும்
நாடி உள்ள குடும்பத்தை என்றும் பஞ்சம்
வாடி வதங்குகின்றான் உழைப்பாளி நாளும்
விடியல் விளையோதோ? ஏன்ற ஏக்கம்



கோடீஸ்வரன் மேலும் கோடீஸ்வரன் ஆகிறான்
ஏழை மேலும் ஏழை ஆகின்றான்
கேடி எல்லாம் அரசியல்வாதி ஆகின்றான்
நாட்டு நடப்பு நெஞ்சு பொறுக்கவில்லை
பாடிப் பயனில்லை மறுமலர்ச்சி வேண்டும் என்கிறேன்.

**கவிஞர் இரா.ரவி**

என்னைப் பதில்
சொல்லத் தூண்டாதே.
எனக்கு நேசித்துத்தான்
பழக்கம். வார்த்தைகளற்ற
வார்த்தை தேவைப்படாத
பார்வையோ ஸ்பரிசமோ
சொல்லி விடுகிற நேசம்.
பேசத் தூண்டுகிற
வினைகளுக்கு என் எதிர்
வினைகளால் காயம் தான்
மிச்சமாகும். பேசாமலிரு.
முடிந்தால் என்னைப் பார்.
என் பிரியம் அப்போதும்
உனக்குப் புரியவில்லை
என்றால்
இன்னொரு
முறை
உன் கையைப்
பற்ற
அனுமதி தா.



**ரிஷபன்**

## மின்சாரம்

மின்சாரம் நாட்டுக்கு
இன்றியமையாதது.
மின்சாரம் இல்லையேல் உலக
இயக்கமே ஸ்தம்பித்தது
விடும். மின்சாரத்தைப்
பட்டி தொட்டியெல்லாம்
கொண்டு செல்வது
அசாதாரணமானது.
ஏராளமான நிதியை
விழுங்கும் மின்சார
உற்பத்திக்கு ஈடுகட்ட
பயனாளிகளிடம் இருந்து
கட்டணம் பெறுவது
கட்டாயம். இருளை ஓட்டும்
ஒளியின் தோழன் மின்சாரம்.
இல்லங்கள் முழுதும் உயிர்
ஊட்டும். சுழலும் விசிறி
சுவாசம் பெறும்.
சுடரும் விளக்கு மகிழ்ச்சி
அளிக்கும். இயந்திரங்கள்
எல்லாம் எழுச்சி பெறும்
இன்றைய உலகம் இதனால்
இயங்கும். கண்ணுக்குத்
தெரியாத
மின்சாரம்
காலத்தின்
முன்னேற்றத்
திற்குத் தேவை
அவசியம்.



## பறவை குஞ்சுகளின் நம்பிக்கை

வண்ணங்கள் பலவாக
இருக்கலாம்
எண்ணங்கள் ஒன்றுதானே
மாற்றங்கள் இல்லையே
தாய் மனம் மாறாது தன்
குஞ்சுகளை பேணுவதில்
இயற்கையின் பொது விதி
இரு குஞ்சுகளும்
அன்னையின் பாதுகாப்பில்
பருந்து பயம் இல்லாமல்
தந்தை பறவையின்
கொண்டை நிழலில்
பெருமையாக எந்த துன்பமும்
நேராது எங்கள் அன்னை
தந்தை இருக்கையில்
பயமென்ன சொல் உலகமே
களிப்பே !!

**Chellam sekar**

## அழிவை நேசிக்கும் மனிதன்

தோகை விரித்தாடும் மயில்...
சொல்லி கொடுக்காமல்
பாடும் குயில்..

மின்னல் வேகத்தில் நீந்தும்
மீன்கள்... பயிற்சி எடுக்காமல்
பறக்கும் பறவைகள்...

பிறந்தவுடன் எழுந்து
நடக்கும் ஆடுகள்...
பிறந்தவுடன் தாயை அடக்கம்
பண்ணும் பூரான்கள்...

பிறந்த முதல் தானா
கற்றுக்கொள்ளும்
இவைகளுக்கு முன்னால்....

பிறந்த முதல் அடுத்தவர்
துணையோடு
கற்றுக்கொள்ளும் மனிதா...

அழிக்கும் கருவியை
முதன்மையாய்
முன்னிருத்தும் மனிதா...

அழிவது மனித குலம்
என்பதை
உணர மறுப்பது
ஏன்....ஏன்...
என்....?



**பொன். கருணா**
நவி மும்பை

## அவள் இல்லா வீடு

சமையலறை வாசனைகள்
எல்லாம் சாதாரணமாய்
இருக்குது, சந்தன பொட்டு
குங்குமம் எல்லாம்
சேராமல் தவிக்குது,
உன் அங்கம் தொட்ட
ஆடைகள் எல்லாம்
அலமாரியில் அப்படியே
கிடக்குது, சாவிக்
கொத்தெல்லாம்
சலங்கை அத்துப்போச்சு
சாம்பிராணி தியேலாம்
புகையில்லாமல் ஆச்சு,
நாட்கள் எல்லாம் நகர்ந்து
போனது என்
இதயமோ
தகர்ந்து
போனது,



**மை எழுத்து கனகராஜ்**
கோயம்புத்தூர்

## மனிதா திருந்திவிடு

உன்னையும், என்னையும்
பிரிப்பது சாதி என்றால்
அந்த சாதிக்கு இன்றே
சமாதி கட்டு

உன்னையும், என்னையும்
பிரிப்பது மதம் என்றால்
அந்த மதத்தை இன்றே
மயானத்திற்கு அனுப்பு

உன்னையும், என்னையும்
பிரிப்பது பேதம் என்றால்
அந்த பித்தலாட்டத்தை
இன்றே புதைத்துவிடு

உன்னையும், என்னையும்
பிரிப்பது இனம் குலம்
என்றால் அந்த ஈனத்தே
இன்றே தூக்கிலிடு

உன்னையும்
என்னையும்
உரித்தாலே
வெங்காயம்.



**கவிஞர் இரா.இரவி**

## மனச்சாட்சி

உன் செயல்களை எடை
போடும் உன்னத தராசு !

பிறர் காணாத போதும்
உன்னை நல்வழிப்படுத்தும்
உள் மனக்குரல் !

மௌனமாய் பேசும்
மகா சக்தி !

சாட்சிகள் தேவையில்லாத
தனி நீதிமன்றம் !

உன் செயலின் உண்மை
கண்ணாடி !

நீயே உனக்கு
சொல்லும் தீர்ப்பு !

நிழலாய் தொடரும்
நீதியின் குரல் !

தவறு செய்கையில்
தடுத்திடும் அரண்!

யாரும் பார்க்காத போது
உன்னை உற்றுப் பார்க்கும்
ஓர் அகக்கண்!

சத்தம் இல்லாமல் நீதி
வழங்கும் ஓர் உள்
நீதிமன்றம்!

தூக்கத்தில் கலைக்க
முடியாத கனவு !

துன்பத்தில் பிரிக்க முடியாத
துணை !

உன் தவறுகளைச்
சுட்டிக்காட்டும் ஓர் உண்மை
தோழன் !

இருட்டில் செய்யும்
பிழையையும் வெளிச்சம்
போட்டு காட்டும் !

வெளியே நீ சூடும்
முகமூடிகள் உன் உள்ளே
செல்லாது !

பொய்களை அடுக்கி
வைத்தாலும் உண்மை
அங்கே உறங்காது !

நீதிமன்றம் கேட்கும்
சாட்சியை விட நெஞ்சம்
சொல்லும் சாட்சியே பெரிது!

உள் மனதிற்கு பயந்து
வாழ்ந்தால் இவ்வுலகில்
குற்றங்களே இருக்காது !

உலகம் உறங்கும்
வேளையிலும் உனக்குள்
விழித்திருக்கும் ஒற்றை
விளக்கு !

தவறு செய்யயில்
முள்ளாய் குத்தும் !

நல்லது
செய்யயில்தென்றலாய்
வருடும் !

நீ உன்னைத்
தொலைத்தாலும் உன்னை
உனக்கு காட்டும் நிஜமான
நிழல்!

மனசாட்சிக்கு
பயந்து
வாழ்வோம்
மனிதநேயத்தை
வளர்ப்போம் !



**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## அன்னமாச்சாரியார் (கருநாடக இசைப் பாடகர்)

நேரிசை வெண்பா!

வடமொழியில் சங்கீர்த்த
வண்ணலட்ச ணத்தைத்
திடமாகக் கண்டவர்
தேர்ந்த.. கடப்பாவில்
தோற்றமே கண்டவர்
தூய அன்னமாச்சாரி
போற்றிடுவோம்
என்றும் பொலிந்து!

திருமலை வேங்கடத்
தேர்பெருமாள் மேலே
திருவான கீர்த்தனைகள்
தேர்ந்தே.. அருமையாய்ப்
பாடியவர்
அன்னமாச் சாரியாரே
அன்றேதான் சூடினார்
பாமாலை சொல்!

**முனைவர் இராம.வேதநாயகம்.**

## செய்வது துணிந்துசெய்!

நேரிசை ஆசிரியப்பா!

நெஞ்சில் துணிவுடன்
நேர்ந்தே செயலை
வஞ்சனை யின்றி
வளமுடன் செய்வோம்!

மனத்தின் வலிமையே
மாண்புத் துணிவு
கனிவு கொண்டே
காண்போம் செயலை!

அச்ச மின்றி
அழகாய்ச் செயலை
இச்சை யோடே
இனிதாய்ச் செய்வோம்!

துன்பங் கண்டு
துவளா மல்தான்
இன்பமாய்க் கண்டு
இன்புற செய்யலாம்!

அன்பை அருளை
அதனுடன் ............
பண்பாய்ச் சேர்த்தே
படைப்போம் துணிவையே!

**முனைவர் இராம.வேதநாயகம்.**

## நிம்மதி

நித்திய ஜீவன் நித்திரையில்
கேட்கும் மெல்லிசை!
சுகங்களின் சுகந்தங்களைச்
சுமந்து கொண்டு வரும்
தென்றலைப்போல
மனநிறைவு தந்திடும்
ஒத்தடம்!

பிரச்சனைகள்
வெறி நாயைப்போலத்
துரத்தி வரும் போது
களைப்படைந்த மனிதன்
இளைப்பாறும் நிழல்!

நெருக்கடிகள்
எல்லையைத் தாண்டும்
போது நிதானம் இழந்த
மனிதனுக்கு மரணதேவதை
மடியில் அமர்த்தித்
பாடும் தாலாட்டு!

மனிதன் உறங்கும்
போது ஆயிரம்
வண்ணக்கனவுகள்
விழித்திருக்கும் போது
ஆயிரம் கலகங்கள்!

இங்கே பகைமை
நெருப்பு கொழுந்து
விட்டு எரிய பூசல்கள்
புயலெனச்சீற
மௌனக்கொலுவிருக்கும்
நிம்மதி ஆலயம்
போர்க்களமாகிறது!

இதயவானில் புறாக்களைப்
பறக்க விடாததால்
பிணந்தின்னும்
கழுகுகள் பறக்கின்றன!

திரிலோக சஞ்சாரியாம்
நாரதன் கலகம் கூட
நன்மையில் முடிகிறது
சாதிமத கலகங்களோ
நரகத்தில் முடிகின்றன!

சமாதானத்தை இழந்துவிட்ட
மனிதர்கள்
தங்கத்தைத்
தொலைத்து
விட்டுத்
தேடுவதைப்போல
நிம்மதியை
தேடிக்
கொண்டிருக்கிறார்கள்!



**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

## நானும் தூக்கமும்

இன்றைய பணிகளின்
தற்காலிக முற்றுப்புள்ளி

நாளைய உழைப்பின்
நல்ல தொடக்கம்

உழைப்பின் களைப்பில்
விழிகள் உறங்கும்

உறுப்புகள் ஓய்வெடுக்க
உணர்வுகள் விழிக்கும்

புதைந்து கிடந்தசிந்தனைகள்
கனவுகளில் உலா வரும்

அன்றைய நாளின் பாடங்கள்
அனுபவமாய் மனதில் பதியும்

கொசுக்களின் ரீங்காரம்
தாலாட்டாகும் சில நேரம்

சாலையின் வாகனங்கள்
சலசலக்கும் சிலநேரம்


அண்டை வீட்டின்
சண்டைச் சத்தம்
வண்டுகள் இசைக்கும்
சங்கீதம் ஓயாது குரைக்கும்
தெருநாய்கள் அவரை
ஊர்தியின் மணிச்சத்தம்
விழிகளின் உறக்கத்தில்
செவிகளில் நுழையும்

அலுப்பின் மிகுதியில்
உறக்கம் தழுவ அலார
மணியோ அலுவலகப்
பணியை நினைவூட்டும்

மீண்டும் தொடங்கும்
புதிய விடியல் கொண்ட
பணிகள் மனக்கண்ணில்
விரிய நானும்
தூக்கமும்
தற்காலிகப்
பிரிதலில்
மீண்டும்
இணையும்
மகிழ்வோடு......



**தமிழ்நிலா**




## சிலுவைப் பாதை

நாமறிந்த நன்மைகளும்,
பிறர் மகிழ்ச் செய்த உயரிய
செயல்களும் சேரும்போது–
நம் பெரும் துன்பங்கள்
எல்லாம் பனித்துளி போல்
கதிரவன் முன்னால்
மறைந்து போகும்! கடவுளின்
பேரொளியை அங்கேதான்
காண முடியும்; முடியாது என
நினைத்தது இனிதே முடியும்!
கிடைக்காது எனத் தவித்தது
கைகூடும்! முடிந்துவிட்டது
என நாம் சோர்ந்து
அமர்கையில், அங்கிருந்தே
புதியதொரு உயிர்ப்புத்
தொடக்கம் ஆரம்பமாகும்.
இங்குதான் தொடங்குகிறது
என நாம் நினைக்கையிலே,
பழைய காயங்களின்
முற்றுப்புள்ளியும்
நிகழ்ந்தேறும்!
இன்பமும் துன்பமும் இங்கே
அப்படித்தான்... நிழலும்
ஒளியும் போல வந்து வந்து
போகும். ஆனாலும்...
சில வருத்தங்களுக்கும்,
சொல்லொணா
இழப்புகளுக்கும்
நிச்சயமானதொரு சமரசம்
இறைவனிடம் உண்டு!
இழந்தவை யாவும் ஒருநாள்
மீண்டும் வசப்படும்;
இழப்புகள் இல்லாத வாழ்வு
இங்கு ஏதுமில்லை!
ஆண்டவன் காட்டும்
சிலுவைப் பாதை கடினமாக
இருக்கலாம், ஆனால்...
அவரது மென்மையான
பூப்போன்ற கரங்கள் – நம்
கைகோர்த்துத் துணையாய்
நடப்பதினால்,
எத்தகைய
தியாகப்
பயணமும்
ஆனந்த
மகிழ்வாய்
மாறும்!



**ஜனனி அந்தோணி ராஜ்,**
திருச்சிராப்பள்ளி.



## நந்தவனம்

ஒரு பூவின் அழகே
மனதை மகிழ வைக்கும்•இந்த
மலர(வும்) வைக்கும்!
நீயோ எனக்குக்கிடைத்த
நந்தவனம்!
இப்பொழுதெல்லாம்
நான் காலை
எழுந்தவுடன் நினைக்க
உனக்குப்போட்டியாக
தமிழ் நாடு இ செய்தித்தாளும்
வந்து விட்டது!
எது எப்படியிருப்பினும் என்
ஒவ்வொரு கவிதையிலும்
நீ அவசியம் வந்து
விடும்
தொடர் பழக்கத்தை
உனக்கு
யார் கற்றுத் தந்தது?!
என் விழிகளைப்
பறித்து விளையாடும்
உன்
பேரழகு தான் பூமியில் கூட
மின்னல் தோன்றும் என்ற
உண்மையை உணர்த்தியது!
உன் பார்வை
என்னைத்தொட்ட
அன்றிலிருந்தே என்
வீட்டு நாட்காட்டியில்
ஒவ்வொரு தினமும்
எனக்குக்காதலர் தினமாகவே
தெரிகிறது!
நீ பேசும் வார்த்தைக(ள்)ளோ
மிகவும் குறைவு!
உன் பார்வைத் திறனோ
அதீத அதிகம்!
எனக்குப்புரிந்து விட்டது
உனக்குப்பிடித்த வரிகள்
பேச்சைக் குறைப்பீர்
பெருக்குவீர் உழைப்பை
என்பது!



**முத்து ஆனந்த்**
வேலூர்



## பொம்மை

அந்தக் குழந்தை அந்த
பொம்மையை எந்நேரமும்
கையில் வைத்திருக்கும்
அழகே அழகு

சில சமயம் தோளில்,
சில சமயம் தலையில்,
சில சமயம் ஒக்கத்தில்,

தூங்கும் போதும் பக்கத்தில்
விழிக்கும் பொழுதில்
அதன் கைதேடும் முன்
மனம் தேடியதால்
பொம்மையின்றி
அந்தக்
குழந்தையை
பார்க்க இயலாது!
குழந்தை தன்
பொம்மையுடன்
சண்டையிடுவது;
கவிதை!

சண்டையில் ஒரு நாளும்
வெற்றி கண்டதில்லை!


தானே விரும்பித் தோற்று;
பொம்மையை
ஆற்றுப்படுத்துவது
இன்னுமொரு காவியம்!

ஒருநாள்: அத்தனை
கொஞ்சலுக்கும்,
விஞ்சலுக்கும், மிஞ்சலுக்கும்;
ஈடு கொடுக்க முடியாமல்;
பொம்மை, ஒரு கண்ணையும்,
ஒரு கரத்தையும், தன் ஒரே
வாலையும் இழக்க:
குழந்தையின் அழுகையில்
வீடு மொத்தமும் அலமலந்து
போக

புது பொம்மை ஒன்று
இன்று குழந்தையின் கையில்;
வீசிட்டு அலறி, குழந்தை
புது பொம்மையை
நிராகரித்து; தன் படுக்கையில்
'உறக்கத்தில்' ஆழ்ந்திருந்த
பழைய பொம்மையை
ஆற்றுப்படுத்தி;அதன்
வாலையும் கையையும்
தனியே எடுத்து வந்து
'டாக்டர் தாத்தாவிடம்
ஆபரேஷன் பண்ணி
கொண்டு வாங்க' என்று
சொன்னது. இவர்களுக்கு
குழந்தை சொன்ன விஷயம்;
அப்போது புரிந்தது
அதன் கனமும் கருத்தும்
கூட



**சசிகலா விஸ்வநாதன்**



## புரட்சித் தலைவி.. புகழ் பாமாலை!

குடகுமலை காவிரியாய்ப் பிறந்து வந்து..
கொஞ்சுதமிழ் நாடெங்கும் கலை வளர்த்து..
தடந்தோள் உயர்த்தி வீர நடைபயின்று..
தலைவி எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்தாள் அம்மா.!

தலைவர் வழி பாதையிலே.. தனித்திருந்து கொடி உயர்த்தி..
கலையுலகத் தாரகையாய் ஒளியை ஏற்றி.. தாய் வடிவாகவே
தமிழர் உரிமை.. போர்களத்தில் பூத்துவந்தாய் புரட்சித்தலைவி!

இரட்டை இலை மீட்டு.. இனமான உணர்வூட்டி..
காவிரியை அணையுடைத்துப் பாயவைத்து..
காலத்தை வென்றவளே எங்கள் அம்மா..!

அடக்குமுறை.. அவமானம்.. அராஜகம் தாக்குதலை எதிர்த்து
நின்று.. ஆர்த்தெழுந்து தமிழ் உரிமைக் குரல் கொடுத்து..
அடித்தட்டு மக்களது இதயமெல்லாம் அம்மா என்று பிறந்து
வந்தாய் உயிர் எழுத்தே!

போர்களத்தில் பூத்த பூவே.. புரட்சிமிகு பாரதியின் புதுமைப்
பெண்ணே.. கார்கால மாமழையே.. கலைத்தாய் தந்த
கற்பகமே கழகத்தின் உயிர்மூச்சே.. காலமெல்லாம் எங்கள்
மனக்குடிசையிலே இன்று புதிதாய்ப் பிறந்தாய்..
அம்மா உன் புகழ் வாழ்க!

**வே.கல்யாணகுமார்.** பெங்களூரு.








**WANTED**
**MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED**

**Managers**: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756










**WANTED**
**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
**ALP AEROFLEX INDIA PVT. LTD.**
Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com







தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE




**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971





முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.


RG
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real
Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000
per month
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367



WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள்
தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
● சென்னை ● புதன்கிழமை 25-02-2026



# பல்சுவை களஞ்சியம்




## தர்மயாத்திரை

மகாபாரதம் முடிந்துவிட்டதாக நீங்கள் நினைக்கிறீர்களா ? இல்லை உண்மையான முடிவு இப்போதுதான் தொடங்குகிறது கலியுகத்தில் மனிதன் பின்பற்ற வேண்டிய ஒழுக்க முறைகள் தனிமனித வாழ்க்கைக்கு தேவைப்படும் தர்ம நெறிகள் இவை அனைத்திற்கும் இந்த பயணம் மிகப்பெரிய பாடமாக அமைகிறது. தர்மம் மட்டுமே மனிதனை உயர்த்தும் ஆனால் தர்மத்தின் பாதையில் செல்லும் சோதனைகள் எவ்வளவு கடுமையானவை என்பதை இந்த கதையின் மூலம் உணரலாம்.



பாண்டவர்கள் தர்மயுத்தத்திற்கு பிறகு அவர்களின் கடைசி பயணம் எப்படி அமைந்தது? ஏன் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக உயிரிழந்தார்கள் ? இறுதியில் யார் சொர்க்கத்தை அடைந்தார் ? எந்த காரணத்திற்காக பாண்டவர்கள் உயிரிழந்தார்கள்? இந்த பயணத்தின் உண்மைகளை நீங்கள் அறிந்த பிறகு உங்கள் வாழ்க்கையைப் பற்றிய பார்வையே மாறிவிடும். இந்த கட்டுரையின் இறுதியில் உங்கள் மனதை நெகிழ வைக்கும் ஓர் ஆழமான உண்மை வெளிப்படும், அது தர்மத்தை பற்றியே உங்கள் எண்ணங்களை முற்றிலும் மாற்றக்கூடும். அதனால் ஒரு வரிகூட தவறவிடாமல் இந்தக் கட்டுரையை கடைசிவரை கவனமாக வாசிக்கவும்.

கிருஷ்ணர் மறைந்த பிறகு அர்ஜுனன, வியாச முனிவரின் வார்த்தைகளால் வாழ்க்கையின் உண்மையான நோக்கை உணர்கிறான்.

"அர்ஜுனா நீங்களும் உங்கள் சகோதரர்களும் தர்மத்தை நிலை நிறுத்த கிருஷ்ணருக்கு உதவினீர்கள். இப்போது தர்மம் நிலைத்திருப்பதால் உங்கள் கடமையும் முடிந்தது. அடுத்த தலைமுறையினருக்காக நீங்கள் மீதம் உள்ளதை விட்டுச் செல்லுங்கள்" என்று கூறுகிறார் வியாச முனிவர்.

தர்மர் இதனை ஏற்றுக்கொண்டு, "கிருஷ்ணரின் பணி முடிந்தது. இப்போது நாங்கள் உலகத்தை துறந்து அமைதியாக வாழ நேரம் வந்துவிட்டது" என்று கூறினார். இது ஒரு தீர்க்கமான முடிவு.

பாண்டவர்கள் திரவுபதியுடன் அஸ்தினாபூரிலிருந்து புறப்பட்டு துவாரகாவை அடைந்தனர். அழிந்த துவாரகா நகரத்தைக் கண்டு மனம் உடைந்தனர். பின்னர் ரிஷிகேஷ் வழியாக இமயமலையை நோக்கி பயணித்தனர். ஆனால் அவர்கள் எதிர்கொள்ள இருந்த சோதனைகள் எந்த அளவிற்கு கடுமையானவை என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை. மேரு மலையை கடந்து சொர்க்கத்தை அடைய அவர்கள் திட்டமிட்டனர். அப்போது ஒரு நாயும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. பாண்டவர்களும் திரவுபதியும் அந்த நாயுடன் இமயமலையில் ஏறும் போது மேரு மலையை அடைவதற்கு முன் திரவுபதி கீழே விழுந்து உயிரிழந்தாள்.

அதிர்ச்சியடைந்த பீமன், "தர்மா..... திரவுபதி ஏன் சொர்க்க பயணத்தை முடிக்க முடியவில்லை ?" என்று கேட்டான்.

தர்மர் அமைதியாக கூறினார் "அவள் அனைவரையும் சமமாக நேசிப்பேன் என்று உறுதி அளித்திருந்தாள். ஆனால் அவள் அர்ஜுனனை மட்டுமே அதிகமாக நேசித்தாள். அதனால் தான் அவள் முதலில் உயிரிழந்தாள்"

தர்மர் நாயுடன் நீண்ட பயணத்தை தொடர்ந்தார். அவர்கள் மேரு மலையின் உச்சியை அடைய இருந்தபோது இந்திர பகவான் தனது தேரில் வந்தார். "தர்மத்தை பின்பற்றுவதில் உங்கள் நடைமுறைகள் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் மனைவியும் சகோதரர்களும் பாவம் செய்ததால் நரகத்தில் உள்ளனர். அவர்கள் தங்கள் பாவங்களுக்காக நரகத்தில் தங்கள் நேரத்தை கழித்த பிறகு சொர்க்கத்தை வந்தடைவார்கள். இனி நடக்க வேண்டிய அவசியமில்லை. நான் தேறில் எற்றி சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வேன். தேரில் அமருங்கள்" என்று இந்திர பகவான் தர்மரை அழைத்தார்.

"நான் ஆசிர்வதிக்கப்பட்டவன். ஆனால் தயவு செய்து எனது மன்னிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் காரணமாகவே நான் தர்மாவை பின்பற்றினேன். அவர்கள் ஒருபோதும் என்னை மாற்ற முயற்சிக்கவில்லை. அவர்கள் என் வார்த்தைகளை நம்புவதை ஒருபோதும் நிறுத்தவில்லை. அது சொர்க்கமாக இருந்தாலும், எனது மனைவிக்கும் சகோதரர்களுக்கும் இடம் இல்லாத இடத்தில் நான் இருக்க விரும்பவில்லை" என்று தாழ்மையுடன் தர்மர் கூறினார்.

இந்திரன் புன்னகைத்து "நீங்கள் அவர்களைப் பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை. அவர்கள் தங்கள் நேரத்தை நரகத்தில் கழித்த பிறகு இப்போது அவர்கள் அனைவரும் சொர்க்கத்தில் உள்ளனர். எனவே நீங்கள் தேரில் ஏறுங்கள். நான் உங்களை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறேன்" என்று கூறினார்.
ஆனாரல் தர்மர் ஒரு கேள்வி கேட்டார். அவர் ராஜ்யத்தை துறந்த நாளில் இருந்து தன்னை பின்தொடர்ந்த நாயை பார்த்தார். இந்த நாயும் தன்னுடன் தேரில் வரமுடியுமா என்று இந்திரனிடம் கேட்டார்.

இந்திரன் மறுத்துவிட்டார். "நாய்கள் ரதத்திற்குள் நுழைய முடியாது. உங்கள் சொந்த நிலை மற்றும் ஆரோக்கியத்தை கருத்தில் கொள்ளுங்கள். நீங்கள் நீண்ட காலமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள், தேரில் ஏறுங்கள், நாயைக் கை விடுங்கள்" என்று இந்திரன் வலியுறுத்தினார்.

"தயவு செய்து என்னை மன்னியுங்கள். நான் நாயை விட்டு போகமுடியாது. நான் ராஜ்ஜியத்தை விட்டு வெளியேறிய தருணத்தில் இருந்து இந்த நாய் என்னை பின்தொடர்ந்து வருகிறது. என் சகோதரர்கள் மற்றும் திரவுபதியின் மரணத்திற்குப் பிறகும் என்னுடன் உள்ளது. நான் தனியாக இருந்தபோது அது எனக்கு ஒரு நிலையான தோழனைப் போல இருந்தது. நான் ஒரு நண்பரை கைவிட முடியாது, ஏனென்றால் ஒரு நண்பனை விட்டுக் கொடுப்பது ஒரு பெரிய பாவமாகும். நான் எவ்வளவு நேரம் எடுத்தாலும் நாயுடன் நடந்து செல்வேன் என்று தாழ்மையுடன் தர்மர் கூறினார்.

இந்த வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருந்த அந்த நாய் திடீரென்று எமதர்மராஜனாக மாறியது. "அன்புள்ள மகனே, நான் உன்னை பற்றி பெருமிதம் கொள்கிறேன். நீ மிகவும் தாழ்மையான, எளிமையான மற்றும் நேர்மையான வாழ்க்கையை வாழ்ந்தாய். வாழ்நாள் முழுவதும் எல்லா சூழ்நிலைகளிலும் தர்மத்தை பின்பற்றினாய். ஒரு மனிதன் எந்த குடும்பத்தை சேர்ந்தவர், அவருக்கு எத்தனை அன்புக்குரியவர்கள் மற்றும் உறவினர்கள் இருந்தாலும், வாழ்வதற்காக அவர் என்ன செய்தாலும் இறுதியில் அவரது தர்மம் மட்டுமே அவரை பின்பற்றி சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும். உன் மகிழ்ச்சியையும் வளமான வாழ்க்கையையும் இழந்தாலும் நீ அத்தகைய வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறாய். தேரில் ஏறிச் செல், இந்திரன் சொர்க்கத்திற்கு உன்னை அழைத்துச் செல்வார்" என்று எமதர்மர் பெருமையுடன் கூறினார்.

இறுதியில் தர்மர் இந்திரனுடன் தேறில் ஏறி சொர்க்கத்திற்குச் சென்றார். அங்கு அவரது சகோதரர்களும், திரவுபதியும், கர்ணனும் இருந்தனர். இறுதியாக அவர் சொர்க்கத்தில் நித்திய அமைதியை கண்டார்.

தருமத்தின் பாதையை பின்பற்றுவது எவ்வளவு முக்கியம் என்பதை மானிடர்களாகிய நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து நமது வாழ்க்கையை செம்மைப் படுத்த உறுதி கொளவோம்.

# மீம்ஸ்










தமிழ் நாடகத் தந்தையார் பம்மல் சம்மந்த முதலியார் 1873ம் ஆண்டில் பிறந்தார். தமிழ் நாடகங்களை முதன் முதலாக உரைநடையில் எழுதியவர். வழக்கறிஞர், நீதியரசர்,. நாடகாசிரியர், மேடை நாடக நடிகர், எழுத்தாளர், இயக்குனர் என்று பல பரிணாமங்களை கொண்டவர். முதன் முதலாக 1883ம் ஆண்டில் புஷ்பவல்லி எனும் சமூக நாடகத்தை எழுதி நடித்தார். 1959ம் ஆண்டில் பத்மபூஷன் என்ற தேசிய விருதைப் பெற்றார்....

## சிறுகீரையின் மருத்துவப் பயன்கள்

**சிறுகீரையின் மருத்துவப் பயன்கள்**

இந்தக் கீரையை தினமும் சமைத்துச் சாப்பிட இரும்புச் சத்து உடலில் பரவும்.

இந்த கீரையை சாப்பிட்டால் காச நோய் குணமாகும். நீர்க்கடுப்பு, வீக்கம், பித்தநோய் சரியாகும்.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் இக்கீரையை தினமும் சாப்பிட்டால் இன்சுலின் இயல்பாக சுரக்கும்.

இதில் கால்சியம் அடங்கியிருப்பதால் எலும்பைப் பலப்படுத்துகிற ஆற்றல் இதற்கு உண்டு.

இந்தக்கீரை நினைவாற்றலுக்கு மிகவும் உதவும். நல்ல உடற்கட்டுடன் திகழ, சிறுகீரையோடு துவரம்பருப்பு, சிறிய வெங்காயம் போட்டு நெய்யை வேண்டிய அளவு சேர்த்து சாப்பிட்டு வர வேண்டும்.



நீர் எரிச்சல் தணியும். காசநோயைக் கட்டுப்படுத்தும். மூலநோயைக் கட்டுப்படுத்தும். வாயுவை அகற்றும். வாதநோயை அகற்றும். மாலைக்கண், வெள்ளெழுத்து போன்ற நோய்களை நீக்கும்.



## விடுகதை


| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |



# ஜோக்ஸ்

காவலர் 1: நமது அரசியார் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறாங்களே ! ஏன்?
காவலர் 2: போர்களத்திலிருந்து நமது அரசர் ஓடி வரும் அந்த கண்கொள்ளா காட்சியை கண்டு ரசிக்கத்தான்.
நாஞ்சில் சு. நாகராஜன்

ஒருவர் : டி. வி. யில் பேட்டி கொடுக்கும் அந்த டாக்டரை போலி என்கிறாயே ! ஏன்?



அடுத்தவர்: கொசு கடிச்சாலும் தொப்பிளை சுற்றி மூணு ஊசி போடச் சொல்றாரே !

ஜோக்ஸ் பகுதிக்கு
இளைஞன் : டாக்டர், உங்க கிளினிக்கை அண்ணாந்து பார்த்தா எனக்கு தலை சுத்துகிறது.
டாக்டர் : எதற்கு அண்ணாந்து பார்க்கிறீங்க?
இளைஞன் : உங்க கிளினிக்கின் மூன்றாவது மாடியில்தான் என் லவ்வர் வீடு இருக்குது டாக்டர்.




# குழந்தைகளின் கை வண்ணம்




**ருத்ரேஷ்**
3 ம்வகுப்பு




**மிந்ரேஷ்**
7 ம்வகுப்பு



**ஹ.ஷேசாத்ரி.**
6ம் வகுப்பு. அ. உ. நி. பள்ளி.
பைரமங்கலம்.
கிருஷ்ணகிரி மாவட்டம்.

## வாழை மரம்



இலை தருவேன் இலை
தருவேன்
உட்கார்ந்து
ருசித்து சாப்பிட
தண்டெல்லாம் தான் தருவேன்
சமையல் செய்து மருந்தாய்
சாப்பிட
கனி தருவேன் கனி தருவேன்
இனிப்பாகச் சுவைத்துச்
சாப்பிட

நார் தருவேன் நார் தருவேன்
பூ கோர்த்திட, புடவையும்
நெய்திட
என்னை முழுமையாக
நான் தருவேன் மனிதன்
உனக்குத்தான்
என்னை நீரூற்றி வளர்த்துப்
பார்
எத்துனை நன்மை என்று
தெரிந்திட


**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

## பொது அறிவுப் பூங்கா

(1). கணிதத்தில் பூஜ்ஜியத்தை அறிமுகப் படுத்தியவர் ஆர்யப்பட்டர்.

(2).செல் போனின் தந்தை என்று அழைக்கப் படுபவர் மார்ட்டின் கூப்பர்.

(3). உலக வர்த்தக மையத்தின் தலைமையகம் சுவிற்சலாந்தின் 'ஜெனிவா' நகரில் உள்ளது.




(3).இந்தியாவில், முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, 1881ஆம் ஆண்டு, பிரிட்டிஷ் கவனர்ஜெனரலாக இருந்த ரிப்பன் பிரபுவால் தொடங்கப்பட்ட பட்டது.

(4).15.8.1914 ல் சூயஸ் கால்வாய் கப்பல் போக்கு வரத்துக்காக திறக்கப்பட்ட பட்டது.

(5)சூயஸ் கால்வாய் 102 கி. மீ.நீளம் உள்ளது.

(6). இங்கிலாந்தின் "ஹரிபாட்டர்" நாவலாசிரியர் J. K.ரௌலிங்.

(6). இமய மலையின் அதி உயரமான "மவுண்ட் எவரெஸ்ட்" சிகரத்தை "டேன்சிங் ஹிலரி" என்பார்,1953ஆம் ஆண்டு ஏறி சாதனை புரிந்தார்.

(7). காகிதம் என்பது உருது சொல்.தாள் என்பது தான் சரியான தமிழ்ச் சொல்.

# வாய்மையே வெல்லும்

"குட் மார்னிங்க கட்டப்பா" என்ற சிட்டம்மாவை வியப்புடன் நோக்கிய கட்டப்பாவை
"என்ன கட்டப்பா அப்படி பாக்குறே" என்றாள்
சிட்டம்மா, கட்டப்பாவுக்கும், சிட்டம்மாவுக்கும் வெவ்வேற பெயர்கள் உண்டு, இந்த பாகுபலி படம் பார்த்த நாள் முதல் அப்பாவை பெண் கட்டப்பா என்றும் ஒரு எதுகை மோனையா இருக்கட்டுமேயென்று இவரும் மகளை சிட்டம்மா எனவும் அழைக்கலானார்,
"இல்ல சிட்டம்மா நீயா இது புதுசா குட் மார்னிங் எல்லாம் சொல்றேன்னு பார்த்தேன்"
"ஏன் புதுசா எதுவும் கத்துக்கக்கூடாதா,,, ? எங்க மிஸ்தான் நேத்து சொல்லிக்கொடுத்தாங்க பெரியவங்கள பாத்தா வணக்கம் சொல்லணுமுன்னு அதான் சொன்னேன்"
"வெரிகுட் வெரிகுட் நல்ல பழக்கம்தான்,,, நீ காபி குடிச்சிட்டு வீட்டுப்பாடம் எழுது நான் தோட்டத்துல போயி ரெண்டு வாழக்கண்ணு வைக்கணும் குழித்தோண்டி வச்சிட்டு வரேன் "
"கட்டப்பா இன்னைக்கு சண்டே தானே நானும் தோட்டத்துக்கு உன்கூட வரேன், ஈவெனிங் ஹோம் ஒர்க் பன்றேன் சரியா,,,"
"சரி,,,சரி,,,வா சிட்டம்மா சொன்னா கேட்கவாப் போறே,,,"
கட்டப்பாவும், சிட்டம்மாவும் தோட்டத்தை நோக்கிச் சென்றார்கள், அங்குள்ள நல்ல இடமாக தேர்வு செய்து குழித்தோண்ட ஆரமித்தார், ஒரு இரண்டு அடி தோண்டியதும் டங்,,,டங்குண்ணு சத்தம் கேட்டதும் என்ன சத்தம் என்ற யோசனையோடு தோண்டினார், அவசர அவசரமாக மண்ணை வாரி போட்டுவிட்டு பார்த்தால் ஒரு பச்சயம் பூத்த பாழடைந்த. செம்பு சொம்பு இருந்தது, கட்டப்பாவுக்கு கைக்கால் ஓடவில்லை, சுதாரித்துக்கொண்டு திறந்து பார்த்தால் தங்க நாணயங்கள் இருந்தது,
"என்ன இது கட்டப்பா என்றால் சிட்டம்மா "
"இது புதையல் சிட்டம்மா"
"அப்படின்னா என்ன கட்டப்பா"
"இது அந்தக்காலத்தில் யாராவது புதைத்து வைத்திருப்பார்கள், பிறகு எடுக்க மறந்து இருக்கலாம் அல்லது இறந்துப் போய் இருக்கலாம், இப்போ நம்ம கையில் சிக்கியிருக்கு, ஆண்டவனா பாத்து நமக்கு கொடுத்து இருக்காரு



இதை யாருக்கிட்டேயும் சொல்லிடாதே" என்றார்,
"அப்படின்னா அடுத்தவங்க நாணயமா,,,,? இது அவங்களுக்குதானே சொந்தம் நமக்கு எப்படி சொந்தமாகும் இதை அவங்கக்கிட்ட கொடுத்திடு கட்டப்பா" என்றால் சிட்டம்மா,

"உனக்கு ஒன்னும் தெரியாது சிட்டம்மா இது நமக்கு சேர வேண்டியதுதான் ஆண்டவன் நமக்கு கொடுத்திருக்கார், இது நம்ம நிலம்தானே அதுல கிடைப்பது நமக்குதானே சொந்தம் இதை யாரிடமும் சொல்லாதே"
" அப்படி இல்ல கட்டப்பா இரண்டு நாளைக்கு முன்னாடி டிவில நியூஸ் பார்த்தியா அதுல சென்னையில் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்தபத்மாஎன்ற பெண் தூய்மைப் பணியாளர், குப்பையில் கண்டெடுத்த சுமார் 45 சவரன் தங்க நகைகளைசுமார் ரூ. 45 லட்சம் மதிப்புள்ள பொருளை போலீசில் ஒப்படைத்து நேர்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தாங்க இல்லியா அவரை பாராட்டி, தமிழக முதல்வர் ஒரு லட்சம் காசோலை வழங்கிப் பாராட்டினாரே,,, அதுப்போல நீயும் போலிசில் இதை ஒப்படைத்தால் முதல்வர் பணம் தருவாரு நீ இதை உடனே போலிசில் கொடு கட்டப்பா இல்லன்னா நான் எங்க மிஸ்க்கிட்ட சொல்லி போலிஸ்ல சொல்லச் சொல்லிடுவேன் "
"அய்யோ இதென்னடா வம்பா போச்சு இவ சொன்னாலும் சொல்லிடுவா இந்த பூமியில கிடைக்கிறது எல்லாம் அரசுக்குதானே சொந்தம் மரியாதையா போலிஸில ஒப்படைத்து விடலாம்" என புறப்பட்டார் ,
மறுநாள் காலையில் டிவியில் செய்தி ஓடியது பலக்கோடி மதிப்புள்ள பழங்கால தங்க நாணயங்களை காவல்துறையிடம் ஒப்படைத்த விவசாயிக்கு அரசு பத்து லட்சத்துக்கான காசோலை வழங்கி பாராட்டியதுயென, டிவில எங்க அப்பா கட்டப்பா நியூஸ், முதல்வர் பாராட்டினாரென சிட்டம்மா துள்ளிக்குதித்தாள், நல்லதை யாரு சொன்னாலும் எடுத்துக்க வேண்டும்தானே.

**நாகை ஆசைத்தம்பி**

# பொது அறிவுப் பூங்கா.

(1) .இடிதாங்கியைக் கண்டுபிடித்தவர் பெஞ்சமின் பிராங்ளின்

(2). பிரபல நாடக ஆசிரியரான "பெர்னாட்ஷா" ஐரிஸ் நாட்டைச் சேர்ந்தவர்.

(3)பெய்ஜிங்கில் நடைபெற்ற ஆசிய போட்டிகளில் கபடிப்போட்டி யும் 1990. ஆம். ஆண்டு சேர்த்துக் கொள்ளப் பட்டது.

(4). மிக இளவயதில் அமெரிக்க அதிபராகப் பதவி ஏற்றவர் தியோடர் ரூஸ்வெல்ட்.(42வது வயதில்)

(5). தேசிய வணிகவியல் ஆய்வகம் லக்னோவில் இருக்கிறது.

(6). டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் 1952ஆம்ஆண்டு முதல் குடியரசு தலைவராகப் பதவியேற்றார்.



(7). "பாரத ரத்னா" விருது பெற்ற முதல் பெண்மணி இந்திராகாந்தி அம்மையார்.

(8) "நவீன இந்தியாவின் சிற்பி" என்று அழைக்கப்பட்டவர் ஜவகர்லால் நேரு அவர்கள்

(9). சீவக சிந்தாமணியை இயற்றிய "திருத்தக்க தேவர்", "நரிவிருத்தம்" என்னும் நூலினையும் இயற்றியுள்ளார்.

(10). அரிச்சந்திரபுராணத்தை இயற்றியவர் வீரகவிராயர் என்பவர்.



குடந்தை **பரிபூரணன்**

## ஔவை சொல் கேள்..

அன்னை சோறு
ஊட்டுவது போல்
ஔவை அமுதம்
வாங்கிக் கொள்....

விரும்பச் சொல்வாள்
நல்லதையே
விலக்கச் சொல்வாள்
கெட்டதையே...

நன்றாய்ப் படிக்கச்
சொல்லிடுவாள்
நாலு பேருக்கு
உதவு
என்பாள்..

நெஞ்சில்
உரம்
வேண்டும்
என்பாள்
நேர்மை திறம்
கொள்
என்பாள்..



அன்பே உலகில்
பெரிது என்பாள்
அடக்கம் உலகில்
பெருமை என்பாள்..
நல்ல ஒழுக்கம்
நன்மையாகும்
தீயப் பண்போ
தீயாய் எரிக்கும்
அன்னையும்
ஔவையும்
ஒன்றே
நல்லமுதம் ஊட்டிடும்
தாய்மையே..

**ஹரணி,**
தஞ்சாவூர்-2

# மாற்றியோசி


முதலையும் குரங்கும்
ஓர் அழகிய கிராமத்தில் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அந்த, ஆற்றங்கரையைச் சுற்றி பல நாவல் மரங்கள் இருந்தன. மரங்களில் குரங்குகள் பல தன் குட்டிகளுடன் வாழ்ந்து வந்தன. ஆற்றில் முதலைகள் வாழ்ந்து வந்தன .ஆற்றங்கரையைச் சுற்றி இருக்கும் நாவல் மரங்களில் பழங்கள் மிகவும் சுவையாக இருந்தன. இந்த ஆற்றங்கரையைச் சுற்றி இருந்த நாவல் மரங்களில் நாவல் பழங்கள் காய்த்து உதிர்ந்தன. இதை உண்டு முதலைகள் வாழ்ந்து வந்தன.
முதலைகளுக்குப் பசிக்கும் பொழுது குரங்குகளிடம் கேட்கும்.
குரங்கே!குரங்கே! கொஞ்சம் நாவல் பழங்களைப் பறித்து போட்டேன்.
குரங்குகளும் மரத்தில் ஏறி கிளைகளை உலுக்கும். முதலைகளுக்கும் தேவையான பழங்கள் கிடைக்கும் . அப்படியே, முதலைகளும்



குரங்குகளும் நண்பர்களாக வாழ்ந்து வந்தனர்.
அந்த ஆற்றில் இருந்த இளைய முதலை ,வயதான முதலையிடம் கேட்டது, எத்தனை நாட்கள் தான் நாம் இப்படி நாவல் பழங்களை உண்டு வாழ்வது . நாவல் பழங்களை உண்ணும் குரங்குகளை உண்டால் என்ன ? என்று கேட்டது .
இதனைக் கேட்ட வயதான முதலை, நமக்கு உதவியவர்களையே உண்ண நினைப்பது எவ்வளவு பெரிய தவறு . நமக்கு, உதவியவர்களுக்கு ஒரு போதும் நாம் தீங்கு நினைக்க கூடாது என்று அறிவுரை கூறியது.
இதனைக் கேட்ட இளைய முதலைக்கு கோபம் வந்து நீருக்குள் சென்று விட்டது.
ஒரு நாள் ,திடீரென்று குரங்கு குட்டி ஒன்று, மரத்திலிருந்து ஆற்றில் விழுந்தது. வேகமாக வேகமாக வந்த முதலை, தன் தலையால் அந்த குட்டியைக் காப்பாற்றி ஆற்றங்கரையில் இருந்த தாய் குரங்கிடம் விட்டது.
சிறிது நேரத்தில் பதறிப் போன தாய் குரங்கு, தன் குட்டியைக் கண்டதும் குட்டியை அணைத்துக் கொண்டு முதலைக்கு நன்றி கூறியது.
அப்போதுதான் இளைய முதலை தன் தவறை உணர்ந்தது . உதவுவதில் உள்ள மகிழ்ச்சியும் அறிந்து கொண்டது .

அறநெறி : 1.பெரியோரின் அறிவுரை நன்மை பயக்கும் .
2.நமக்கு உதவியவர்களுக்கு ஒருபோதும் துரோகம் நினைக்கக் கூடாது .

## யானை.!



ஓடிவந்து பாருங்கோ
யானை வருகுது!
ஒய்யாரமாய் வீதியிலே
யானை வருகுது.!
கூடிநின்று பாருங்கோ
யானை வருகுது!
ஆடிஅசைந்து குளித்துவிட்டு
யானை வருகுது.!

யானைமேலே முத்து அமர்ந்து
சுத்திப் பாக்குறான்!
யானைக்கொரு வாழைப்பழம்
பூமா கொடுக்கிறாள்.!
ஆசிவாங்க ரெண்டுரூபா
கிட்டு கொடுக்கிறான்!
ஆனையம்மா ஆனையென்று
பாட்டுப் படிக்குறான்!

பாரம் சுமக்க வித்தைக்காட்ட
யானையைப் பிடிச்சு
சங்கிலியால் காலில்கட்டி
பாடுபடுத்துவார்!
கோவில் வாசல் வீதியிலே பிச்சை
எடுக்க வைக்கிறார்
குட்டியானை தாய் யானை
பிரித்து வைக்கிறார்!

காட்டில் யானை வாழும் இடத்தில்
வீடுகட்டுவார்!
நாட்டுக்குள்ளே யானைவந்தா
வெடி வெடித்து ஓட்டுவார்!
யானையதனின் மனக்குறையை
யார்தான் அறிவார்?
யானைகளை வாழவிட்டால்
மனிதர் வாழுவார்!

## அலங்காரம்



கொல்ஹாபூர் மஹாலட்சுமி நேற்று மாலை அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

## மாசி தெப்ப உற்சவம்



அருள்மிகு ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோயில். நம்பெருமாள் மாசி தெப்ப உற்சவம் திருப்பள்ளியோடம் 2026 ஆறாம் திருநாள் பகல் வாணிப ஆஸ்தான மண்டபம்.

## சிறப்பு அலங்காரத்தில் அம்மன்



காரைக்குடி மீனாட்சிபுரம் முத்துமாரியம்மன் கோயில் பூச்சொரிதல் விழாவில் சிறப்பு அலங்காரத்தில் அம்மன்.

ரவுசு மணி

வாழ்க்கை பலமுறை நம்மை உடைக்கும் ஆனால் ... ஒவ்வொரு முறையும் நம்மை மனிதனாக செதுக்கும் சிற்பி...



V. முத்து ராமகிருஷ்ணன்

## பால்குட ஊர்வலம்



சேலம் நெத்திமேடு தண்ணீர் பந்தல் காளியம்மன் கோயில் மாசி திருவிழாவையொட்டி நேற்று பால்குட ஊர்வலம் நடந்தது.

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்மாசி மண்டலத்திருவிழா



*மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்மாசி மண்டலத்திருவிழா-2026-24.02.2026-மாலை-சுவாமி,அம்பாள் வெள்ளி சிம்மாசனம் மணியும், தரளமும், வெண்நகையோ? வழி மூவர் செயத் துணியும், தொழிலும் உன் செய்தொழிலோ? பத்தித் துத்தி முடிப் பணியும், சுடரும், கடல் ஏழும் நின் கழல் பங்கயத்தில் அணியும் திரு உருவே! மதுராபுரி அம்பிகையே! -குலசேகர பாண்டியன் அருளிய மதுராபுரி அம்பிகை மாலை சொக்கே நின் தாளே துணை*

## சனி பெயர்ச்சி விழா



ஸ்ரீவைகுண்டம் கைலாசநாதர் கோயிலில் சனி பெயர்ச்சி விழா யாகசாலை பூஜையுடன் தொடங்கியது.

## மனித சங்கிலி போராட்டம்




பணி மேம்பாட்டு ஊதியம் வழங்கக் கோரி, அரசு உதவி பெறும் கல்லூரி பேராசிரியர்கள் நேற்று தூத்துக்குடி வஉசி கல்லூரி முன் மனித சங்கிலி போராட்டம் நடத்தினர்.

## முடிதிருத்தும் தொழிலாளர்கள் போராட்டம்



இலவச வீட்டுமனை பட்டா வழங்கக் கோரி தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகம் முன் முடிதிருத்தும் தொழிலாளர்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.

## தேர்தல் பிரசாரம்



பெரம்பலூர் மாவட்டம் பசும்பலூரில் திமுக மகளிரணியினர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

## ஜெயலலிதா சிலைக்கு மாலை



கரூரில் ஜெயலலிதா சிலைக்கு நேற்று முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மாலை அணிவித்து பேசினார்.

## முதல்வர் ஸ்டாலினுக்கு வரவேற்பு



தூத்துக்குடி விமான நிலையத்தில் முதல்வர் ஸ்டாலினை, அமைச்சர் கீதாஜீவன் வரவேற்றார்.

## மருத்துவமனையில் நல்லக்கண்ணு



சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணுவை விசிக தலைவர் தொல் திருமாவளவன் நேரில் சந்தித்து மருத்துவர்களிடம் அவரது உடல் நிலை குறித்து கேட்டறிந்தார்.

## வகுப்பறை கட்டடம் திறப்பு



ஆற்காடு ஊராட்சி ஒன்றியம் ஆயிலம் ஊராட்சி உயர்நிலைப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டடத்தை அமைச்சர் காந்தி நேற்று திறந்து வைத்து குத்து விளக்கேற்றினார்.

## ஜெயலலிதா சிலைக்கு மாலை



சென்னை அதிமுக தலைமை அலுவலகத்தில் ஜெயலலிதா சிலைக்கு பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிமற்றும் நிர்வாகிகள் மாலை அணிவித்துமரியாதை செய்தனர்.

## அரசு பள்ளி மாணவர்கள் கல்விப் பயணம்




ஆவடி மாநகராட்சி அரசு பள்ளி மாணவர்கள் கல்விப் பயணத்தை அமைச்சர் நாசர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## ஜெயலலிதா 78-ஆவது பிறந்தநாள்



மறைந்த முன்னாள்முதல்வர் ஜெயலலிதா 78-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருஉருவப் படத்திற்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



சிங்காநல்லூர் தொகுதி ஒண்டிப்புதூரில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 22 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பொது விநியோக கடையை ஜெயராம் எம்எல்ஏ திறந்து வைத்தார்.

## மோடி முகாம் நிகழ்ச்சி



கோவை தெற்கு எம்எல்ஏ வானதி சீனிவாசன் ஏற்பாட்டில் ரத்தினகிரி பகுதியில் நேற்று நடந்த மோடி முகாம் நிகழ்ச்சியில் பொதுமக்கள் மத்திய அரசு நலத்திட்டங்களில் பலன் பெறும் வகையில் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து பாஜக மாநில செயலாளர் வினோஜ் செல்வம் வழங்கினார்.

## "விடியா ஆட்சி உங்கள் வீட்டு bill-லே சாட்சி "என்ற விழிப்புணர்வு பிரச்சாரம்





திருவண்ணாமலை, பிப்.25: திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கல்பட்டு ஊராட்சியில் போளூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. அக்ரி எஸ்.எஸ் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வீடு வீடாகச் சென்று துண்டு பிரசுரங்களை வழங்கினார். "விடியா ஆட்சி உங்கள் வீட்டு bill-லே சாட்சி" என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் அடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினார். மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திமுக சார்பில் நலத்திட்ட உதவி



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி கண்டோன்மெண்ட் நகரத்தில் திமுக சார்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார்.

## பாப்பாத்தி கன்னி அம்மன் ஆலய குடமுழுக்கு விழா



ராணிப்பேட்டை மாவட்டம் பாகவிளையில் பாப்பாத்தி கன்னி அம்மன் ஆலய குடமுழுக்கு விழா நேற்று நடந்தது.

## மகளிர் மின்னொளி கபாடி போட்டி



சிங்கம்புணரியில், முதல்வரின் 73 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அகில இந்திய அளவிலான ஐந்தாம் ஆண்டு மாபெரும் மகளிர் மின்னொளி கபாடி போட்டியினை அமைச்சர் பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்.



சென்னை தியாகராய நகர்பகுதியில் மோடி அரசின் சேவை முகாமில் நலத்திட்ட உதவிகளை மத்திய மந்திரி முருகன், பாஜக மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் வழங்கினர். உடன் தமிழிசை.

## இறகுப்பந்து விளையாட்டு அரங்கம் திறப்பு



சென்னை திருவல்லிக்கேணி, பேகம் 5 -ஆவது தெருவில் ரூ.1.10 கோடி மதிப்பில் கட்டப்பட்ட இறகுப்பந்து விளையாட்டு அரங்கை துணை முதல்வர் உதயநிதி நேற்று திறந்து வைத்தார். உடன் மேயர் பிரியா, தயாநிதி எம்.பி.உள்ளனர்

## புதிய வழித்தட பேருந்து இயக்கம்



ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் புதிய வழித்தட பேருந்துகளை அமைச்சர் சிவசங்கர் துவக்கி வைத்தார்.

## கலெக்டர்கள் பதவி ஏற்பு



காஞ்சிபுரம் புதிய கலெக்டராக சினேகா நேற்று பதவி ஏற்றார்.



செங்கல்பட்டு கலெக்டராக மாலதி ஹெலன் நேற்று பதவி ஏற்றார்.

## ஜெயலலிதா சிலைக்கு மாலை



கவுண்டம்பாளையம் தொகுதி கூடலூர் பகுதியில் ஜெயலலிதா சிலைக்கு அருண்குமார் எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை செய்தார்.



முதல்வர் ஸ்டாலின் ஆலந்தூர் தொகுதியிலும், துணை முதல்வர் உதயநிதி சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியிலும் போட்டியிட வேண்டி அண்ணா அறிவாலயத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ. அன்பரசன், நிர்வாகிகளுடன் இணைந்து மனுக்களை வழங்கினார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் திருமண மண்டபம்



சென்னை சிந்தாதரிப்பேட்டை, சிங்கண்ண தெருவில் ரூ...10.59 கோடி மதிப்பில் கட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் திருமண மண்டபத்தை துணை முதல்வர் உதயநிதி நேற்று திறந்துவைத்தார். உடன் அமைச்சர் சேகர்பாபு, எம்.பி.க்கள் தயாநிதி, வில்சன், ,மேயர் பிரியா உள்ளனர்.



தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் சார்பில் இணையதள புகார் மேலாண்மை அமைப்பைத் தலைமைச் செயலகத்தில் துணை முதல்வர் உதயநிதி துவக்கி வைத்தார்.

# சுற்றுலா: வெயிலுக்கு முன் ஒரு ஜாலி ட்ரிப்- மார்ச் மாதத்தை அழகாக்கும் இடங்கள்!

கோடை வெயில் சுட்டெரிக்க தொடங்கும் மார்ச் மாதத்தில் சுற்றுலா செல்வது மனதிற்கு இதமான நிகழ்வாகும். அந்த வகையில் மார்ச் மாத மன நிறைவுக்கு சுற்றுலா செல்லவேண்டிய சிறந்த இடங்கள் குறித்து இப்பதிவில் காண்போம்.



1. ஸ்ரீநகர்: மார்ச் முதல் ஜூன் வரை சீசன் நிலவும் ஸ்ரீ நகரில் முகல் கார்டன்ஸ், முகலாய மன்னர் கால கோட்டை, ஊலர் ஏரி, டால் ஏரி, நிஜீன் ஏரி போன்ற சுற்றுலாத்தலங்கள் வெகு சிறப்பானதாக இருக்கின்றன. வெப்பநிலையும் அதிகபட்ச 30 டிகிரி குறைந்தபட்சம் 10 டிகிரி ஆக உள்ளதால் பனிபடர்ந்த மலை பிரதேசங்களை சுற்றிப் பார்க்க ஹனிமூன் செல்பவர்களுக்கு ஏற்ற சிறந்த இடமாக ஜம்முவின் தலைநகர் ஸ்ரீ நகர் உள்ளது.

2. சிக்மங்களூர்: கர்நாடக மாநில மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள முல்லையனகிரி சிகரத்தின் அடியில் அமைந்திருக்கும் மலை பிரதேசமான சிக்மங்களூரில் அதிக அளவு காபி தோட்டங்கள், ஆறு, அருவிகள், கோவில்கள், மலையேற்றத்திற்கான இடங்கள் என அனைத்தும் ஒருங்கேஅமையப்பெற்றுள்ளதால் மார்ச் மாத சுற்றுலாவிற்கு ஏற்ற இடமாக உள்ளது. மேலும் மார்ச் மாதத்துடன் சீசன் நிறைவடைவதால் பகலிலும் இரவிலும் குளிர்ந்த வானிலையே நிலவும் என்பது குறிப்பிடத்தக்கது.

3. பிருந்தாவனம்: உத்தரப்பிரதேச மாநிலத்தின் மதுராமாவட்டத்தில் அமைந்துள்ள பிருந்தாவனத்தில் கிருஷ்ண பகவான் தன்னுடைய வாழ்வின் பெரும் பகுதியை வாழ்ந்ததால் இங்கு வரலாற்று சுவடுகளை அதிக அளவில் காணலாம். மார்ச் மாதத்துடன் இங்கு சீசன் முடிவடைவதால் இங்குள்ள 5500 க்கும்மேற்பட்ட கிருஷ்ணர் ராதா கோவில்களை கண்டு தரிசிப்பது சிறப்பு வாய்ந்ததாகும்.



4. குலு: ஆறு, அருமையான வானிலை, பனிபடர்ந்த மலைகள் பசுமையான பள்ளத்தாக்குகள் நிறைந்த இமாச்சல் பிரதேசம் மாநிலத்தின் குலு நகரில் ஏப்ரல் மாதத்தில்தான் சீசன் தொடங்கும் என்றாலும் அந்த தாக்கம் மார்ச் மாதத்திலேயே தெரியவரும். ஆகையால் பவுத்த மடங்கள், பூங்காவை சுற்றி பார்ப்பதற்கும் மலையேற்றத்திற்கும் கோவில்களை கண்டு களிக்கவும் மார்ச்சில் பயணம் மேற்கொள்ளலாம்.

5. தேக்கடி: இயற்கையை கொண்டாட நினைப்பவர்கள் பெரியார்வனவிலங்குசரணாலயம், புல்மேடு, பாண்டிக்குழி, யானை சவாரி ,போட்டிங் ,பறவைகளை பார்க்கவும், மன நிறைவாக பொழுதை போக்கவும் கேரளாவில் உள்ள தேக்கடிக்கு மார்ச் மாதத்தில் சுற்றுலா செல்லலாம். பிப்ரவரி மாதம் சீசன் முடியும் என்றாலும் மார்ச் மாதமும் இதமான காலநிலை நிலவும்.

6. சக்ரதா: பாறை ஏறுதல், செங்குத்தான பாறைகள் ,மலைகளில் கயிறுகள் மூலம் ஏறும் RAPELLING போன்ற சாகச விரும்பிகளுக்கு ஏற்ற இடமாக உள்ள உத்தரகாண்ட் மாநிலத்தின் டேராடுன் மாவட்டத்தில் உள்ள அழகான மலை பிரதேசமான சக்ரதா மார்ச் மாதம் சுற்றுலா செல்ல ஏற்ற இடமாகும். ஏப்ரல் முதல் ஜூன் வரை சீசன் என்றாலும் மார்ச் மாதத்திலேயே சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படும் அற்புதமான இடம் ஆகும்.

7. அஜெந்தா & எல்லோரா:

பழமையான ஓவியங்களும், சிற்பங்களும் நிறைந்துள்ளதோடு பவுத்த, சமண ,இந்து மத நினைவு சின்னங்கள் அதிகம் உள்ள மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அஜந்தா மற்றும் எல்லோராவில் மார்ச் மாதத்தில் இதமான காலநிலை நிலவும் என்பதால் சுற்றுலா செல்ல ஏற்ற இடமாக உள்ளது. யுனெஸ்கோ பாரம்பரிய இடங்களில் ஒன்றான இங்கு மலை ஏற்றமும் செய்யலாம். மார்ச் மாதத்தில் மேலே குறிப்பிட்ட இடங்களுக்கு பயணம் செய்தால் சிறப்பான அனுபவங்களை இனிமையாக பெறலாம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ஹோட்டல் மேனேஜ்மென்ட் படிப்புக்கு மார்ச் 25-க்குள் விண்ணப்பிக்கலாம்

பிளஸ்-2 படித்து முடித்த ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்கள், 3 ஆண்டு இளங்கலை ஹோட்டல் மேனேஜ் மென்ட் படிப்புக்கு விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சி யர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப் பில் கூறியிருப்பதாவது:தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலம் பிளஸ்-2 முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர் கள், தேசிய தேர்வு முகமை சார்பில் நடத்தப்படும் தேசிய ஹோட்டல் மேலாண்மை கவுன்சில் இணை நுழைவுத் தேர்வு மூலமாக, தரமணியில் இயங்கி வரும் இன்ஸ் டிடியூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மென்ட் கேட்டரிங் டெக்னாலஜி அண்ட் அப்ளைடு நியூட்ரிஷன் நிறுவனத் தில் 3 ஆண்டு முழு நேர இளங்கலை அறிவியல் பட் டப் படிப்பில் சேர்ந்து பயில விண்ணப்பங்கள் பெறப் பட்டு வருகின்றன.


தேசிய ஹோட்டல் மேலாண்மை கவுன்சில் இணை நுழைவுத் தேர்வு வரும் ஏப்.25-ம் தேதி ஆன்லைன் வாயி லாக நடைபெறவுள்ளது. இத்தேர்வை எழுத மாணவர் கள் மார்ச் 25-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். தேர்வு தொடர்பான கூடுதல் விவரங்களை அறியவும், முன்பதிவு செய்யவும் http://exams.nta.nic.in/nchm-jee/ என்ற இணையதளத்தை அணுகலாம்.

ஹோட்டல் மேனேஜ்மென்ட் கேட்டரிங் டெக்னாலஜி யில் பயில, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர் கள் பிளஸ்-2 வகுப்பில் 45 சதவீதம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 லட்சத்துக்குள் இருக்க வேண்டும். தாட்கோ மூலமாக படிப்பில் சேர www.tahdco.com என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

படிப்புக்கான செலவை தாட்கோ ஏற்கும். படிப்பு களை வெற்றிகரமாக முடிக்கும் பட்சத்தில் மாணவர் களுக்கு நட்சத்திர விடுதிகள், உயர்தர உணவகங்கள், விமானத் துறை, கப்பல் துறை மற்றும் சேவைத் துறை சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிய வழிவகை செய்யப் படும். ஆரம்ப கால மாத ஊதியமாக ரூ.25 ஆயிரம் முதல் ரூ.35 ஆயிரம் வரை பெறலாம்.

## மாமல்லபுரம் கலங்கரை விளக்கம் திடீர் மூடல்



**மாமல்லபுரம், பிப்.25:**

செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள மாமல்லபுரமானது சிறந்த சுற்றுலா தலமாக திகழ்கிறது. இங்குள்ள புராதன சின்னங்களை பார்வையிட தினந்தோறும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள்.

மாமல்லபுரம் வரும் உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகளின் கண்களில் முதலில் படுவது, அங்குள்ள 100-ஆண்டிற்கு மேல் பழமையான பாரம்பரிய கலங்கரை விளக்கம்தான். இதன் மேல் ஏறி உச்சியில் நின்று, கடற்கரை நகரமான மாமல்லபுரத்தின் புராதன சின்னங்களான கடற்கரை கோவில், ஐந்துரதம், அர்ச்சுனன் தபசு, வெண்ணை உருண்டைக்கல் பாறை மற்றும் குடவரை கோவில்களின் அழகை வான்வழி பார்வையில் பார்த்து ரசிப்பார்கள்.

இந்த நிலையில் கலங்கரை விளக்கத்தின் பழங்காலத்து கட்டுமானத்தை பலப்படுத்த சீரமைப்பு பணிகள் இன்று முதல் தொடங்குகிறது. இதற்கான சாரம் கட்டும் பணிகள் முன்அறிவிப்பு இல்லாமல் திடீரென நேற்று நடந்தது. இதனால், கலங்கரை விளக்கத்தை பார்வையிட வந்த சுற்றுலா பயணிகளை மத்திய கப்பல் போக்குவரத்து துறை அலுவலர்கள் அனுமதிக்கவில்லை. இந்த பராமரிப்பு பணிகள் 2-வாரத்திற்கு நடைபெறுவதாக கூறப்படுகிறது.

முன் அறிவிப்பு இல்லாமல் திடீரென கலங்கரை விளக்கம் மூடப்பட்டதால் விடுமுறை நாளான நேற்று மாமல்லபுரம் வந்த சுற்றுலா பயணிகள் ஏராளமானோர் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

## நாமக்கல்லில் முட்டை கொள்முதல் விலை மேலும் சரிவு

**நாமக்கல், பிப்.25:**

நாமக்கல் மண்டலத்தில் 1,100-க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு சுமார் 4 கோடி முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 3 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 505 காசுகளாக இருந்து வந்தது. இதற்கிடையே இன்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் அதன் விலையை 5 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். இதன் மூலம் முட்டை கொள்முதல் விலை 500 காசுகளாக குறைந்து உள்ளது.

## நல்ல தகவலை சொல்கிறேன் - தனிக்கட்சி தொடங்குவதாக கூறப்படும் நிலையில் சசிகலா பரபரப்பு பேட்டி

**சென்னை, பிப்.25:**




மறைந்த அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்-அமைச்சருமான ஜெயலலிதாவின் உயிர் தோழியாக வலம் வந்தவர் சசிகலா. 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஜெயலலிதாவின் நிழலாக தொடர்ந்த அவர், அ.தி.மு.க. உள்கட்சி விவகாரங்களையும் திரை மறைவில் இருந்து கவனித்து வந்தார். 2016-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந்தேதி ஜெயலலிதா மரணம் அடைந்த நிலையில், அவரது நிழலாக வலம் வந்த சசிகலா, நிஜ அரசியலுக்குள் நுழைந்தார்.

2017-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அ.தி.மு.க. பொதுச்செயலாளராக பதவி ஏற்ற சசிகலா, அதன் பிறகு நடந்த கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் முதல்-அமைச்சராக தேர்வு செய்யப்பட்டார். பிப்ரவரி மாதம் 7-ந் தேதி முதல்-அமைச்சராக அவர் பதவி ஏற்க இருந்த நிலையில், சொத்து குவிப்பு வழக்கின் தீர்ப்பும் வந்தது. அதில், 4 ஆண்டுகள் தண்டனை பெற்ற சசிகலா உடனடியாக பெங்களூரு பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறை செல்லும் முன் எடப்பாடி பழனிசாமியை முதல்-அமைச்சராக அறிவித்து விட்டு சென்றார். அவர் 4 ஆண்டு சிறை வாசத்தை முடித்துவிட்டு வெளியே வரும்போது, அரசியல் நிலைமை எல்லாம் மாறிப்போய் இருந்தது. அ.தி.மு.க.வில் மீண்டும் அவரால் கோலோச்ச முடியவில்லை. அதன்பிறகு, அரசியலை விட்டு ஒதுங்கிய அவர், தனது ஆதரவாளர்களை மட்டும் அவ்வப்போது சந்தித்து பேசிவந்தார். இந்த நிலையில், வரும் சட்டசபை தேர்தலுக்கு முன்பு அ.தி.மு.க. ஒன்றிணைய வேண்டும் என்று சசிகலா கூறிவந்தாலும் எதிர்பார்த்தஎதுவும்நடக்கவில்லை. சமீபத்தில், அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற சசிகலா, "தேர்தல் களத்தில் இறங்குவேன்" என்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டார்.

அதற்கான வியூகத்தையும் தனது ஆதரவாளர்களுடன் சசிகலா வகுத்து வருகிறார். இந்த நிலையில் நாளை (பிப்ரவரி 24) ஜெயலலிதாவின் பிறந்தநாளில் புதிய கட்சி தொடங்க சசிகலா திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியானது. நடிகர் விஜய்யின் த.வெ.க.வுடன் கூட்டணி அமைத்து, தென்மாவட்டத்தில் தனக்கு செல்வாக்குள்ள 25 தொகுதிகளில், ஆதரவாளர்களை களம் இறக்க சசிகலா திட்டமிட்டு இருப்பதாக தெரிகிறது.

தனிக்கட்சி தொடங்குவதாக கூறப்படும் நிலையில், சசிகலா சென்னை மெரினாவில் உள்ள அண்ணா, எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் நினைவிடங்களுக்கு சென்று மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

## 'தி.மு.க. ஆட்சியில் எதிர்க்கட்சிகளின் குரல்வளை நெரிக்கப்படுகிறது' - நயினார் நாகேந்திரன்

**நெல்லை, பிப்.25:**



பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நெல்லையில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;-

"தி.மு.க. ஆட்சியில் பா.ஜ.க. மற்றும் எதிர்க்கட்சிகளின் குரல்வளை நெரிக்கப்படுகிறது. சட்டமன்றத்தில் நாங்கள் பேசும்போதும், எங்கள் பேச்சில் பாதியை வெட்டிவிட்டு வீடியோ பதிவை வெளியிடுகிறார்கள். சமூக வலைதளங்களில் தி.மு.க.வுக்கு எதிராக யாராவது கருத்து பதிவிட்டால் அவர்களை கைது செய்கிறார்கள்.

தென்காசியை சேர்ந்த மூத்த தி.மு.க. நிர்வாகி ஒருவர் பிரதமருக்கு கொலை மிரட்டல் விடுப்பது போல் பேசுகிறார். ஆனால் அவர் தற்போது வரை கைது செய்யப்படவில்லை. தி.மு.க. அரசு பாரபட்சத்துடன் நடந்து கொள்கிறது.

தி.மு.க.வின் கூட்டணி பேச்சுவார்த்த மின்னல் வேகத்தில் நடைபெறவில்லை. மாறாக சினிமாவில் வரும் 'வாமா மின்னல்..' என்ற வசனத்தைப் போல் மின்னல் வேகத்தில் தோன்றி மறைந்துவிடும்.

தி.மு.க. உடனான தே.மு.தி.க.வின் கூட்டணி என்பது சினிமா காட்சி போன்றதுதான். தேசிய ஜனநாயக கூட்டணியில் அனைத்து கட்சிகளும் ஒற்றுமையாக இருக்கின்றன."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## எழும்பூர் ரெயில் நிலையத்தில் இருந்து கூடுதல் பஸ்கள் இயக்கம்



**சென்னை, பிப்.25:**

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் மறுசீரமைப்பு பணிகள் பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகிறது. தற்போது மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டு வந்த 10வது, 11வது நடைமேடையில் பணிகள் தொடங்கி இருப்பதால் கடந்த 20-ந்தேதியில் இருந்து 5 மற்றும் 6-வது நடைமேடையில் இருந்து மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது. இதன் காரணமாக சேவைகளும் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக தெற்கு ரெயில்வே பல்வேறு மாற்று ஏற்பாடுகளை செய்துள்ளது. 45 நாட்களுக்கு தற்காலிகமாக மின்சார ரெயில் சேவை மாற்றம் செய்யப்பட்டிருப்பதால் பொதுமக்கள் சிரமங்களுக்கு ஆளாகி உள்ளனர். ஆனாலும் அதனை பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று ரெயில்வே துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. புறநகர் மின்சார ரெயில் பயணிகள் வசதிக்காக மாநகரப் போக்குவரத்து கழகம் கூடுதலாக பஸ் சேவை அளிக்கிறது.

குறிப்பாக எழும்பூர் ரெயில் நிலையத்தில் இருந்து முக்கிய பகுதிகளுக்கு கூடுதலாக பஸ்கள் இயக்கப்படுகிறது. தலைமைச் செயலகம் வழியாக 8 பஸ்கள், நுங்கம்பாக்கம் வழியாக 5 பஸ்கள், ராயபுரம் தற்காலிக பஸ் நிலையத்தில் இருந்து கிளாம்பாக்கம் வரை 27 பஸ்கள், பல்லாவரத்தில் இருந்து தாம்பரம் வழியாக செங்கல்பட்டு வரை 15 பஸ்கள் என மொத்தம் 60 பஸ்கள் கூடுதலாக இயக்கப்படுகிறது. இது தவிர எழும்பூர் ரெயில் நிலையம் வழியாக பஸ்கள் மாற்றிவிடப்பட்டுள்ளது.

தீவுத்திடல், ராயபுரத்தில் இருந்து புறப்படக்கூடிய பஸ்கள் சென்ட்ரல், தலைமை செயலகம், சிந்தாதிரிப்பேட்டை வழியாக எழும்பூர் நிலையம் சென்று அங்கிருந்து அம்பத்தூர், ஆவடி, பூந்தமல்லி, திருநின்றவூர், திருமுல்லைவாயல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்கிறது.

## காணாமல்போன மராட்டிய இளைஞரின் உடல் கரை ஒதுங்கியது

**சென்னை, பிப்.25:**

மராட்டியத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 3பேர் சென்னையில் உள்ள ஐ.டி. நிறுவனம் ஒன்றில் பயிற்சி பெற்று வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலையில் அவர்கள் மூவரும் சென்னையில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கடற்கரை ஒன்றுக்கு சென்றனர். அப்போது எதிர்பாராத விதமாக மூவரும் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இதில் ஒருவர் காயமின்றி தப்பிய நிலையில், மயூரி சவுத்ரி (21 வயது) என்ற இளைஞர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார். மற்றொரு இளைஞர் ஜெய் நரேந்திர படேலை காணவில்லை. அவரை கடலோர காவல்படையினரின் உதவியுடன் 3 முதல் 4 டிரோன்களை பயன்படுத்தி போலீசார் தேடி வந்தனர்.

இந்த நிலையில் காணாமல் போன நரேந்திர படேலின் உடல் சென்னையில் உள்ள தனியார் கடற்கரை ஒன்றில் இன்று கரை ஒதுங்கியுள்ளது. அந்த பகுதியில் ரோந்து சென்ற போலீசார் அவரது உடலை கண்டெடுத்தனர்.

பிரேதபரிசோதனைக்குப்பிறகு, உடல் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதிவுத் திருமணம் செய்ய பெற்றோர் சம்மதம் கட்டாயம்.. காதல் ஜோடிகளுக்கு செக் வைத்த குஜராத் அரசு!

**பாட்னா, பிப்.25:**

குஜராத்தில் பதிவு திருமணம் செய்ய இனி பெற்றோர் சம்மதம் கட்டாயம் என என சட்டம் இயற்ற உள்ளதாக அங்கு ஆளும் பாஜக அரசு அறிவித்துள்ளது.

குஜராத் சட்டசபையில் பட்ஜெட் கூட்டத்தொடரின் போது பேசிய துணை முதலமைச்சர் ஹர்ஷ் சங்கவி, திருமண பதிவு முறையை கடுமையாக்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டு வர இருப்பதாக தெரிவித்தார்.



காதல் திருமணம் என்ற பெயரில் அப்பாவி பெண்கள் ஏமாற்றப்படுவது, மத மாற்றம் செய்வது என கலாசார ஊடுருவல் நடந்து வருவதாக கூறிய அவர், இதனை தடுக்கும் பொருட்டு திருமண பதிவு முறையில் மாற்றம் கொண்டு வர இருப்பதாக தெரிவித்தார்.

பெண்கள் ஏமாற்றப்படுவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை என்றும் அரசு காதல் திருமணங்களுக்கு எதிரானது அல்ல என்றும் அவர் கூறினார்.

இந்தத் திருத்தங்கள் குறித்து 30 நாட்களுக்குள் பொதுமக்களின் கருத்துகள் கேட்கப்பட்டு, ஒரு குழுவின் ஆய்வுக்குப் பிறகே இது இறுதிச் சட்டமாக மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, திருமணம் செய்து கொள்ள விரும்பும் மணமக்கள், தாங்கள் அந்த தகவலை பெற்றோருக்கு தெரிவித்துவிட்டோம் என்பதற்கான உறுதிமொழிப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

உதவிப் பதிவாளர் மணமக்களின் பெற்றோருக்குத் தொலைபேசி வாயிலாகவோ அல்லது நேரடியாகவோ தகவல் தெரிவிப்பார்.

அனைத்தும் சரியாக இருக்கும்பட்சத்தில், திருமணச் சான்றிதழ் வழங்கப்படும்.

பெற்றோரின் அனுமதியின்றி நடக்கும் திருமணங்களை செல்லாததாக அறிவிக்க வேண்டும் என்று படேல், தாக்கூர் மற்றும் சத்திரிய சமூகத்தினர் நீண்டகாலமாகக் கோரி வந்த நிலையில் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

ஆனால் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என்று சட்ட வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

வழக்கறிஞர் மகேஷ் பாரியா கூறுகையில், "இந்திய அரசியலமைப்பின் பிரிவு 21-ன் கீழ் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையான தனிமனித சுதந்திரத்தை இது மீறுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

# க்ரைம் கார்னர்

## ஆசிரியர் மீது போலியாக பாலியல் புகார்: ஆசிரியைகள் உள்ளிட்ட 7 பேருக்கு சிறை!

**ஆண்டிப்பட்டி, பிப்.25:**

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் மயிலாடும்பாறை அருகே நரியூத்து ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கணித பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்தவர் கோகிலபாண்டியன். இதே பள்ளியில் பணியாற்றிய ஆசிரியைகள் சிலர் கோகிலபாண்டியனுக்கு எதிராக பாலியல் புகார் அளித்தனர். இதனடிப்படையில் 2016 செப்.16-ம் தேதி கோகிலபாண்டியன் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

இதை தொடர்ந்து தன்மீது முன்விரோதம் காரணமாக பாலியல் புகார் அளிக்கப்பட்டதாக உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் கோகிலபாண்டியன் வழக்கு தொடர்ந்தார்.

நீதிமன்ற உத்தரவின்படி விசாகா கமிட்டி அமைக்கப்பட்டு தீவிர விசாரணை நடைபெற்றது. இதில் சத்துணவு அமைப்பாளர் நந்தினியின் பெயரில் கோகிலபாண்டியனுக்கு எதிராக போலியான ஆவணம் தயாரித்து, ஆசிரியைகள் வனிதா மற்றும் ராமலட்சுமி ஆகியோர் பொய்புகார் அளித்தது உறுதியானது. இதில் மாவட்டக் கல்வி அலுவலர்கள் உள்ளிட்ட கல்வித்துறை அதிகாரிகள் பலருக்கு தொடர்பு இருந்தது தெரியவந்தது. இதை தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின்பேரில், கோகிலபாண்டியனின் தற்காலிக பணி நீக்கம், பணிக்காலமாக கருதி ஊதியம் வழங்க உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கோகிலபாண்டியன் வழக்கு தொடர்ந்தார்.

விசாரணை முடிந்த நிலையில் நீதித்துறை நடுவர் பாசில்முகமது தீர்ப்பளித்தார். இதில், மாவட்டக் கல்வி அலுவலர் மொக்கத்துரை, ஆசிரியைகள் வனிதா, ராமலட்சுமி ஆகிய 3 பேருக்கும் தலா மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனையும், மற்றொரு மாவட்டக் கல்வி அலுவலர் கணேஷுக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறை தண்டனையும் அளித்து உத்தரவிட்டார். மேலும் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளராக பணிபுரிந்த முனியாண்டி, வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஸ்ரீதேவி மற்றும் ஹெலன் மெட்டில்டா ஆகிய 3 பேருக்கும் தலா ஆறு மாதம் சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். அத்துடன் ரூ.50 ஆயிரம் இழப்பீடு வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கோகிலபாண்டியன், தற்போது ஆண்டிபட்டி ராஜகோபாலன்பட்டி அரசு நடுநிலைப் பள்ளியில் பணிபுரிந்து வருகிறார்.

## கூரியர் மூலம் போதைப்பொருள் வாங்கி கடத்திய இருவர் கைது

**சென்னை, பிப்.25:**

கூரியர் மூலம் தாய்லாந்திலிருந்து போதைப்பொருள் வாங்கி, கடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர். சென்னையில் போதைப்பொருள் கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்களை போலீஸார் கைது செய்து வருகின்றனர். குறிப்பாக போதைப்பொருள் கும்பலை கைது செய்ய சென்னையில் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு போலீஸார் காவல் நிலைய போலீஸாருடன் ஒருங்கிணைந்து கண்காணிக்கின்றனர். இதன் தொடர்ச்சியாக, போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு போலீஸார் வானகரம் போலீஸாருடன் இணைந்து வானகரம் அடையாளம்பட்டு, சர்வீஸ் ரோட்டில் நேற்று கண்காணித்தனர். அப்போது, அந்த வழியாக சந்தேகப்படும்படி வந்த 2 கார்களை மறித்து சோதனை செய்தபோது, மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதை பறிமுதல் செய்த போலீஸார் வியாசர்பாடியைச் சேர்ந்த தினேஷ் என்ற பப்லு (34), கொரட்டூரைச் சேர்ந்த மெக்கலன் ட்ரெவர் (43) ஆகிய இருவரை கைது செய்தனர்.

இதன் தொடர்ச்சியாக, போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு போலீஸார் வானகரம் போலீஸாருடன் இணைந்து வானகரம் அடையாளம்பட்டு, சர்வீஸ் ரோட்டில் நேற்று கண்காணித்தனர். அப்போது, அந்த வழியாக சந்தேகப்படும்படி வந்த 2 கார்களை மறித்து சோதனை செய்தபோது, மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதை பறிமுதல் செய்த போலீஸார் வியாசர்பாடியைச் சேர்ந்த தினேஷ் என்ற பப்லு (34), கொரட்டூரைச் சேர்ந்த மெக்கலன் ட்ரெவர் (43) ஆகிய இருவரை கைது செய்தனர்.

# விளையாட்டு செய்திகள்

## சீனியர் தேசிய கபடி சாம்பியன்ஷிப் தொடக்கம்

**வடோதரா, பிப்.25:**

குஜராத் மாநிலம் வடோதராவில் உள்ள சாமா உள்விளையாட்டு அரங்கில் 72-வது சீனியர் தேசிய ஆடவர் கபடி சாம்பியன்ஷிப் போட்டிகள் (பிப்ரவரி 24) தொடங்கி பிப்ரவரி 27 வரை நடைபெறவுள்ளன. நாடு முழுவதிலும் இருந்து 31 அணிகள் இத்தொடரில் பங்கேற்கின்றன.

சமீபத்தில் முடிவடைந்த புரோ கபடி லீக் (PKL) சீசன் 12-ல் சிறப்பாக விளையாடிய முன்னணி வீரர்கள் பலர் இத்தொடரில் களமிறங்குகிறார்கள். கடந்த முறை சாம்பியன் பட்டம் வென்ற சர்வீசஸ் (SERVICES) அணி, இந்த முறையும் தேவாங்க் தலால், நவீன் குமார், பாரத் ஹூடா போன்ற நட்சத்திர வீரர்களுடன் பட்டத்தைத் தக்கவைக்கப் போராடும். இவர்களுக்கு ரயில்வே, ஹரியானா மற்றும் மகாராஷ்டிரா அணிகள் கடும் சவாலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கிறிஸ் கெயில் சாதனையை முறியடித்த ஹெட்மயர்

**மும்பை, பிப்.25:**

டி20 உலகக்கோப்பை தொடரில் தற்போது சூப்பர் 8 சுற்று போட்டிகள் நடைபெற்று வருகிறன. அதன்படி, இன்று நடைபெற்று வரும் ஆட்டத்தில் ஜிம்பாப்வே - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதி வருகின்றன. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற ஜிம்பாப்வே அணி பந்துவீச்சை தேர்வுசெய்துள்ளது. அதன்படி வெஸ்ட் இண்டீஸ் அணி முதலில் பேட்டிங் செய்தது. வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 254 ரன்கள் எடுத்துள்ளது. வெஸ்ட் இண்டீஸ் அணியின் அதிரடி ஆட்டக்காரரான சிம்ரன் ஹெட்மயர் அதிரடியில் மிரட்டினார். அவர் ஹெட்மயர் 19 பந்தில் அரைசதம் விளாசினார். இதன்மூலம் டி20 உலகக் கோப்பை வரலாற்றில் குறைந்த பந்தில் அரை சதம் விளாசிய வெஸ்ட் இண்டீஸ் வீரரான கிறிஸ் கெயில் சாதனையை ஹெட்மயர் முறியடித்துள்ளார்.

கிறிஸ் கெயில் 20 பந்தில் அரைசதம் அடித்திருந்த நிலையில் இன்று ஜிம்பாப்வே அணிக்கு எதிராக ஹெட்மயர் 19 பந்தில் அரை சதம் அடித்து சாதனை படைத்துள்ளார். குறைந்த பந்தில் அரை சதம் விளாசிய வீரர்களில் ஒட்டுமொத்தமாக 8-வது வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இந்த வரிசையில், 12 பந்துகளில் அரைசதமடித்து யுவராஜ் சிங் முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## டி20 உலகக் கோப்பை வரலாற்றில் மோசமான சாதனை படைத்த இந்திய அணி

**அகமதாபாத், பிப்.25:**

டி20 உலகக் கோப்பை கிரிக்கெட்டின் சூப்பர் 8 சுற்றின் மூன்றாவது போட்டியில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகள் நேற்று மோதின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா அணி பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய தென் ஆப்பிரிக்கா அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 187 ரன்கள் குவித்தது. இதையடுத்து 188 ரன்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா 18.5 ஓவர்களில் 111 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன்மூலம் 76 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா தோல்வியடைந்தது.

இந்நிலையில் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட்டில் அதிக ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா தோல்வியடைந்துள்ளது.

# திருப்பதியில் நெய் தரத்தை பரிசோதிக்க எலக்ட்ரானிக் தொழில் நுட்பம்: ஆந்திர அமைச்சர் தகவல்

**திருப்பதி, பிப்.25:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வழங்கப்படும் பிரசாதமான லட்டில் விலங்கு கொழுப்பு கலக்கப்பட்டதாக முந்தைய முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி அரசு மீது தற்போதைய முதல்வர் சந்திரபாபு நாயுடு கடும் குற்றச்சாட்டை முன் வைத்தார். இது பக்தர்கள் இடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.





இந்த நிலையில் லட்டு தயாரிக்க பயன்படுத்தும் நெய்யின் தரத்தை சரிபார்க்க எலாக்ட்ரினிக் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் என்று ஆந்திர மாநில சுகாதார அமைச்சர் சத்யகுமார் யாதவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் சத்ய குமார் யாதவ் கூறியதாவது:-

அதி நவீன உணவு ஆய்வகம் மூலம் எலக்ட்ரானிக் உபகரணங்கள் (E-Tongue and E-Nose) ஆகியவற்றைக் கொண்டு நெய்யில் சிறிய அளவிலான கலப்படத்தைக் கூட கண்டுபிடிக்க முடியும். இந்த ஆய்வகம் திருமலையில் விரைவில் உருவாக்கப்பட உள்ளது.

இந்த உபகரணங்கள் பிரான்சில் இருந்து கொள்முதல் செய்யப்பட இருக்கிறது. இந்த ஆய்வகம் இந்தியாவில் மிகவும் குறைந்த எண்ணிக்கையில்தான் உள்ளது. ஆந்திராவில் முதன்முறையாக அமைய இருக்கிறது. 25 கோடி ரூபாயில் அமையவிருக்கும் இந்த ஆய்வகத்தின், 90 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. அடுத்த மாதத்தில் இருந்து செயல்படும்.

நெய் மற்றும் உலர் பழங்கள் உள்பட லட்டு தயாரிக்க பயன்படுத்தப்படும் 60 பொருட்கள் தரத்தை சரிபார்க்க இந்த ஆய்வகத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் சத்யகுமார் யாதவ் தெரிவித்தார்.

# மடத்தில் சிறுவர்களுக்கு பாலியல் துன்புறுத்தல்.. சாமியார் மீது போக்சோ வழக்குப்பதிய நீதிமன்றம் உத்தரவு

**புதுடெல்லி, பிப்.25:**

உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த பிரபல சாமியார், சுவாமி அவிமுக்தேஸ்வரானந்த சரஸ்வதி.

சுவாமி அவிமுக்தேஸ்வரானந்த சரஸ்வதி வாரணாசியில் தனது வித்யா மடம் ஆசிரமத்தில் தங்கியிருந்த 'சிறுவர்'களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக புகார்கள் எழுந்தன.



ஸ்ரீ கிருஷ்ண ஜென்மபூமி முக்தி நிர்மான் அறக்கட்டளையின் தலைவர் அசுதோஷ் பிரம்மாச்சாரி மஹாராஜ் மற்றும் சிலர் இணைந்து போலீசில் இதைப்பற்றி புகார் அளித்தனர்.

ஆனால் பிரயாக்ராஜ் காவல்துறையினர் இந்த வழக்கை கப் பதிவு செய்ய மறுத்ததால், அசுதோஷ் நீதிமன்றத்தை நாடினார்.

அவரது புகார் மனுவில், வித்யா மடத்தில் தங்கியிருந்த சிறுவர்கள், அவிமுக்தேஸ்வரானந்த சரஸ்வதியால், அந்த மடத்தின் 5வது மாடியில் வைத்து பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் இதற்கான வீடியோ ஆதாரங்கள் அடங்கிய சி.டியை சமர்ப்பித்து, பாதிக்கப்பட்டவர்களில் இரண்டு சிறுவர்களை நீதிமன்றத்தில் அசுதோஷ் ஆஜர்படுத்தினார்.

மேலும், அவிமுக்தேஸ்வரானந்தர் தனது வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்துள்ளதாகவும், ஆன்மீகப் பணியின் போர்வையில் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனுவை பிரயாக்ராஜ் சிறப்பு போக்சோ நீதிமன்றம் இன்று விசாரித்தது. சமர்ப்பிக்கப்பட்ட வீடியோ ஆதாரங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாக்குமூலங்களை நீதிமன்றம் ஆய்வு செய்தது.

மனுவை விசாரித்த நீதிபதி வினோத் குமார், சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களை ஏற்றுக்கொண்டு, காவல்துறை இந்த விவகாரத்தில் தீவிர விசாரணை நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் மற்றும் குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டமான போக்சோ சட்டத்தின் பிரிவுகள் ஆகியவற்றின் கீழ் அவிமுக்தேஸ்வரானந்த சரஸ்வதி மீது FIR பதிவு செய்ய காவல்துறையினருக்கு அவர் உத்தரவிட்டார்.

# பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள காஷ்மீர் செல்கிறார் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன்

**புதுடெல்லி, பிப்.25:**

காஷ்மீர் பல்கலைக்கழகத்தின் 21-வது பட்டமளிப்பு விழா அடுத்த வாரம் 26-ந்தேதி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வளாகத்தில் நடைபெற உள்ளது.



இந்த பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் கலந்து கொள்கிறார். இதற்காக அவர் வரும் 26-ந்தேதி காஷ்மீர் செல்ல உள்ளார்.

இது தொடர்பாக பல்கலைக்கழக செய்தி தொடர்பாளர் கூறுகையில்,

ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநரும், கென்யா பல்கலைக்கழக வேந்தருமான மனோஜ் சின்ஹா பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை தாங்குகிறார். காஷ்மீர் முதலமைச்சரும், துணை வேந்தருமான உமர் அப்துல்லா பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 59,558 பட்டங்கள் - 44,910 இளங்கலை, 13,545 முதுகலை, 461 எம்.டி/எம்.எஸ், 4 எம்.சி.எச், 18 எம்.ஃபில் மற்றும் 620 பி.எச்.டி பட்டங்கள் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

துணை ஜனாதிபதி வருகையையொட்டி காஷ்மீரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை காவல் அதிகாரி வி.கே.பிர்டி ஆய்வு செய்தார்.

பள்ளத்தாக்கின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தவும், முக்கிய நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் 24 மணி நேரமும் ரோந்துப் பணியை தீவிரப்படுத்தவும், கண்காணிப்பை வலுப்படுத்தவும் அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# வணிகச் செய்திகள்

## தங்கம், வெள்ளி விலை உயர்வு குறித்து நிர்மலா சீதாராமன் கூறுவது?

**புதுடெல்லி, பிப்.25:**

சாமானிய மக்கள் தங்கம் மற்றும் வெள்ளி ஆகியவற்றை வாங்க முடியாத நிலைக்கு, அதன் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. தங்கம் விலை பவுனுக்கு 100 ரூபாய், 200 ரூபாய் என உயர்ந்து வந்த நிலையில் கடந்த தீபாளிக்குப் பிறகு திடீர் திடீரென பவுனுக்கு ஆயிரம் கணக்கில் உயரத் தொடங்கியது. வெள்ளி விலையும் கிலோவுக்கு ஆயிரம் என்ற வகையில் அதிரடியாக உயர்ந்தது. தங்கம் விலை கவலை அளிக்கும் விதமாக உள்ளது. இந்த நிலையில் பட்ஜெட்டிற்குப் பிறகு மத்திய நிதயமைச்சர் நிர்மலா சீதாராமன் ரிசர்வ் வங்கியின் இயக்குனர்களின் மத்திய குழுவை சந்தித்தார். அப்போது அவரிடம் தங்கம் விலை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு நிர்மலா சீதாராமன் "இந்தியாவில் ஏறக்குறைய மார்க்கெட்டிற்கு வரும் அனைத்து தங்கங்களும் இறக்குமதி மூலம் வருகிறது. நாம் இறக்குமதியை சார்ந்திருக்கும் நாடு. நாம் முயற்சிகள் எடுத்து வந்தாலம், நமது தேவைக்கு ஏற்ப அது போதுமானது இல்லை.

வீட்டில் உள்ளவர்கள் முதலீடு செய்வதற்கு உகந்ததாக தங்கம் உள்ளது. சீசன் காரணமாக உள்ளூர் சந்தைகளில் அதிக அளவு தேவைப்படுகிறது. நாங்கள் அதை கவனித்துக் கொண்டிருக்கிறோம். எச்சரிக்கையான சூழ்நிலை என்ற அளவை அது அடையவில்லை.

இவ்வாறு நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

# பிஹாரில் கல்விக்கூடங்கள் அருகே இறைச்சி கடைகள் இயங்க தடை: துணை முதல்வர் அறிவிப்பு

**பாட்னா, பிப்.25:**



பிஹார் மாநிலத்தில் கல்விக்கூடங்கள், வழிபாட்டு ஸ்தலங்கள், மக்கள் கூட்டம் அதிகம் காணப்படும் இடங்களில் இறைச்சி அல்லது மீன் இயக்கத்தை தடை செய்ய அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது. இந்த தகவலை பிஹார் துணை முதல்வர் விஜய் குமார் சின்ஹா தெரிவித்துள்ளார்.

"இது புதிய அரசு முன்னெடுத்துள்ள முன்முயற்சி. பிஹாரில் மாற்றம் கண்ணெதிரே தெளிவாக உள்ளது. நகர்ப்புற வளர்ச்சி துறை சார்பிலான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அதில் முன்வைக்கப்பட்ட முக்கிய பிரச்சினைகளை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம்.

சுகாதாரம் மற்றும் சமூகத்தை கருத்தில் கொண்டும், சிறார்களின் வன்முறை போக்கை தடுக்கும் வகையிலும் கல்விக்கூடங்கள் அருகிலோ, வழிபாட்டு ஸ்தலங்கள், மக்கள் கூட்டம் அதிகம் காணப்படும் இடங்களிலோ இறைச்சி அல்லது மீன் விற்பனைக்கு தடை விதிக்க முடிவு செய்துள்ளோம். இதில் யாருடைய உணர்வும் புண்படுத்த படக்கூடாது, சுற்றுச்சூழல் மாசுபடக்கூடாது என்பதை கவனத்தில் கொண்டுள்ளோம். அதே நேரத்தில் சமூகத்தின் புனிதத்தை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்" என விஜய் குமார் சின்ஹா தெரிவித்தார்.

திறந்தவெளியில் முறையான உரிமம் இன்றி அல்லது உரிமத்தின் நிபந்தனை உறுதி செய்யப்படாமல் இயங்கும் சட்ட விரோத இறைச்சி மற்றும் மீன் விற்பனை அங்காடிகள் பிஹார் நகராட்சி சட்டம் 2007-ன் பிரிவு 345-ன் விதியை மீறுவதாகும் என அவர் தெரிவித்துள்ளார். அப்படி செயல்படும் கடைகளை மூடவும் அவர் அறிவுறுத்தி உள்ளார். இது தொடர்பாக நகராட்சி ஆணையர்களுக்கு அவர் கடிதம் எழுதி உள்ளார். இருப்பினும் அதில் சிறார்களின் வன்முறை போக்கை தடுப்பது குறித்து அதில் அவர் குறிப்பிடவில்லை.

"இது மாதிரியான இறைச்சி கடைகளில் இறைச்சி சுகாதாரமற்ற முறையில், திறந்தவெளியில் விற்பனை செய்யப்படுகிறது. உயிரற்ற விலங்குகள் அங்கு காட்சிக்கு வைக்கப்படுகின்றன. இந்த வகையான கடைகள் கல்விக்கூடங்கள், வழிபாட்டு ஸ்தலங்கள், மக்கள் கூட்டம் அதிகம் காணப்படும் இடங்களில் அமைந்துள்ளது" என அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் பிஹார் சட்டப்பேரவையில் நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்தொடரின்போது நகர பகுதிகளில் திறந்தவெளியில் இறைச்சி மற்றும் மீன் விற்பனை தடை குறித்து விஜய் குமார் சின்ஹா அறிவித்திருந்தார். இது மக்களின் சுகாதார நலன் சார்ந்தது என அப்போது அவர் குறிப்பிட்டார். மேலும், தர்பங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் இது மாதிரியான கடைகள் அமைந்துள்ள இடங்களில் சாலையை கடந்து செல்வது மிகவும் கடினமாக உள்ளதாக மக்கள் தன்னிடம் கூறியதாக அவர் தெரிவித்தார்.

# சத்தீஷ்கார்: கண்ணிவெடி தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் படுகாயம்

**ராய்ப்பூர், பிப்.25:**

சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்தியபிரதேசம், ஆந்திரா, தெலுங்கானா உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் உள்ளது.

நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு போலீஸ் படையுடன், மத்திய பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அடுத்த மாதம் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது.

இதையடுத்து, நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளுக்கு எதிராக என்கவுன்டர் போன்ற அதிரடி நடவடிக்கையை பாதுகாப்புப்படையினர் தீவிரப்படுத்தி வருகின்றனர். இதனால், ஆயுதங்களை கைவிட்டு சரணடைந்து வருகின்றனர். அதேவேளை, பாதுகாப்புப்படையினர், பொதுமக்களை குறிவைத்து நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சத்தீஷ்கார் மாநிலம் பிஜாப்பூர் மாவட்டம் பஸ்டர் பகுதியில் உள்ள வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, பாதுகாப்புப்படையினர் வனப்பகுதியில் தீவிர சோதனை நடத்தினர். அப்போது, வனப்பகுதியில் நக்சலைட்டுகள் மண்ணில் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடி திடீரென வெடித்தது. இந்த கண்ணிவெடி தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் படுகாயமடைந்தார்.

இதையடுத்து, அவரை மீட்ட சக பாதுகாப்புப்படை வீரர்கள் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக பாதுகாப்புப்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோவில் திருவிழாவில் போலீஸ்காரர் மீது சரமாரி தாக்குதல்

**திருவனந்தபுரம், பிப்.25:**

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் ஆலுவா நகரில் பிரபலமான சிவன் கோவில் உள்ளது. இந்த கோவில் திருவிழா நடைபெற்றது. கோவில் திருவிழாவையொட்டி போலீசார் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், திருவிழா பாதுகாப்புப்பணியில் செங்கமனட் போலீஸ் நிலையத்தை சேர்ந்த போலீஸ்காரர் ரஞ்சித் நேற்று இரவு ஆலுவா மணப்புரம் மேம்பாலப்பகுதியில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது, பைக்கில் வந்த இருவர் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளனர். அவர்களை போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தாமல் செல்லும்படி போலீஸ்காரர் ரஞ்சித் கூறியுள்ளார்.

அப்போது, போலீஸ்காரர் ரஞ்சித்திற்கும் பைக்கில் வந்த அந்த இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில் போலீஸ்காரர் ரஞ்சித்தை பைக்கில் வந்த இருவரும் சரமாரியாக தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து அறிந்த சக போலீசார் விரைந்து சென்றுள்ளனர். அதற்குள் ரஞ்சித்தை தாக்கிய இருவரும் அங்கிருந்து பைக்கில் தப்பியோடியுள்ளனர்.

இதையடுத்து, இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், ரஞ்சித் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடிய இருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# முஸ்லிம் பெண்களிடம் கொடுத்த போர்வையைத் திரும்பப் பெற்ற பாஜக தலைவர்

**புதுடெல்லி, பிப்.25:**



ராஜஸ்தானில் பிரதமர் மோடி பிப்.28 அன்று சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்நிலையில் இச்சுற்றுப்பயணத்தில் கலந்துகொள்ளுமாறு பொதுமக்களை அழைக்க ராஜஸ்தானின் டோங்க் மாவட்டத்தில் உள்ள கரேடா என்ற கிராமத்திற்கு சென்றுள்ளார் பாஜக முன்னாள் எம்.பி. சுக்பீர் சிங் ஜானபுரியா.

பிரதமர் மோடியின் வருகை குறித்து மக்களிடம் பரப்புரை செய்து கொண்டிருந்தபோது, அங்குவந்த பெண்களுக்கு போர்வைகள் வழங்கியுள்ளார். அப்போது ஒரு பெண்ணின் பெயரை கேட்டுள்ளார். அவர் தனது பெயரை சொன்னவுடன் அவர் முஸ்லீம் என தெரியவர அவருக்கு கொடுத்தப் போர்வையை திரும்பப் பெற்றுள்ளார். மேலும் அங்கிருந்த முஸ்லீம் பெண்களுக்கு கொடுத்த அனைத்துப் போர்வைகளும் திரும்ப பெறப்பட்டுள்ளது.

அதற்கு "பிரதமர் நரேந்திர மோடியைத் திட்டுபவர்களுக்கு போர்வை வாங்க உரிமையில்லை" என்றும் "நீங்கள் வருத்தப்பட்டாலும் எனக்குக் கவலையில்லை" என்றும் கூறியுள்ளார். இதுதொடர்பான வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. இது ஒரு அரசுத் திட்டம் அல்ல என்றும், தனது சொந்தப் பணத்தில் செய்யப்படும் தனிப்பட்ட உதவி என்பதால் யாருக்கு வழங்க வேண்டும் என்பதைத் தானே தீர்மானிப்பேன் என்றும் கூறியுள்ளார். இதற்கு காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

பல பெண்கள் மணிக்கணக்காக காத்திருந்தும் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஏழை மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு போர்வைகளை வழங்கிய பிறகு அவர்களின் பெயரைக் கேட்டு, பின்னர் அவர்களின் மதத்தின் அடிப்படையில் அவற்றை திரும்பப் பெறுவது மனிதாபிமானமற்ற செயல் என பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்..

# குண்டடிபட்டும் பின்வாங்காத 'டைசன்'.. 3 பயங்கரவாதிகளை சுட்டுக் கொல்ல வீரர்களுக்கு உதவிய ஜீவன்

**ஜம்மு, பிப்.25:**



ஜம்மு காஷ்மீரின் கிஷ்ட்வார் மாவட்டத்தின் சத்ரூ பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில், பாதுகாப்புப் படையினர் நேற்று அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

பயங்கரவாதிகள் மறைந்திருக்கும் துல்லியமான இடத்தை கண்டறிய, ராணுவத்தின் பாரா பிரிவைச் சேர்ந்த ஜெர்மன் ஷெப்பர்ட் இன நாயான 'டைசன்' அழைத்துச் செல்லப்பட்டது.

கரடுமுரடான அந்தப் பகுதிக்குள் டைசன் நுழைந்தபோது, பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் அதன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் டைசனின் காலில் தோட்டா பாய்ந்து பலத்த காயமேற்பட்டது.

காயமடைந்த போதிலும், டைசன் பின்வாங்காமல் தொடர்ந்து முன்னோக்கிச் சென்று பயங்கரவாதிகள் இருக்கும் இடத்தை பாதுகாப்புப் படையினருக்குக் காட்டிக்கொடுத்தது.

டைசன் காட்டிய இடத்தை வைத்து, பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில், ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பைச் சேர்ந்த 3 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தப்பியோடிக் கொண்டிருந்த ஜெய்ஷ் கமாண்டர் சைபுல்லாவும் ஒருவர்.

சம்பவ இடத்திலிருந்து இரண்டு ஏகே-47 துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

காயமடைந்த டைசன் உடனடியாக ஹெலிகாப்டர் மூலம் ராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு அதற்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் உடல்நிலை சீராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காயம்பட்டபோதும் டைசனின் செயல் பாராட்டுகளை குவித்து வருகிறது.

# அஸ்ஸாம் - அருணாசல் இடையே நிறுவப்பட்டது முதல் எல்லைத் தூண்!

**புதுடெல்லி பிப்.25:**



வடகிழக்குமாநிலங்களான அஸ்ஸாம்-அருணாசல பிரதேசம் இடையே முதலாவது எல்லைத் தூண் ஞாயிற்றுக்கிழமை நிறுவப்பட்டது. இது, இரு மாநில எல்லைப்பிரச்னைக்கு தீர்வுகாணும் நம்சாய் பிரகடன அமலாக்கத்தின் குறிப்பிடத்தக்க படிக்கல்லாகும்.

அஸ்ஸாம்-அருணாசல பிரதேசம் இடையே பல்லாண்டுகளாக நிலவும் எல்லைப் பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில் கடந்த 2022-இல் நம்சாய் பிரகடனம் கையொப்பமிடப்பட்டது.

அதன்படி, இரு மாநில அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய பிராந்தியக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கள ஆய்வு, வரலாற்றுரீதியான ஆவணங்கள் ஆய்வு, உள்ளூர் மக்களுடன் கலந்துரையாடல்களின் மூலம் சுமுகமுடிவைஎட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பலனாக, செய்ஜோசா எல்லைப் பகுதியில் இரு மாநிலங்களுக்கும் இடையிலான முதல் எல்லைத் தூண் ஞாயிற்றுக்கிழமை நிறுவப்பட்டது. இரு மாநில அரசு அதிகாரிகள், காவல் துறையினர், சமூகத் தலைவர்கள், கிராமத் தலைவர்கள் முன்னிலையில் இந்தத் தூண் நிறுவப்பட்டது.

இது, எல்லைப் பிரச்னை தீர்வு நடைமுறையில் வரலாற்று மைல்கல் என்று அருணாசலபிரதேச முதல்வர் பெமா காண்டு தெரிவித்தார்.

# ஈரானிய படகில் கடத்தி வந்த ரூ.5 கோடி சிகரெட்டு பறிமுதல்

**புதுடெல்லி, பிப்.25:**

இந்திய கடலோர காவல் படையினர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: குஜராத் அரபிக் கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான வகையில் வந்த ஈரானிய படகு சோதனையிடப்பட்டது.

அதில் முறையான ஆவணங்கள் இன்றி கடத்தி வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள் பிடிபட்டன. அவற்றின் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.5 கோடி. படகில் இருந்த ஊழியர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பொருட்கள் எங்கு கொண்டு செல்லப்படவிருந்தன என்பது குறித்தும் பாதுகாப்புப் படையினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். கடல் வழியாக நடைபெறும் கடத்தல் மற்றும் ஊடுருவல்களைத் தடுக்க இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல் படை தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 21 ஆண்டு என்டிஏ ஆட்சியில் பீகார் ஏழ்மையாகியுள்ளது: தேஜஸ்வி குற்றச்சாட்டு

**பாட்னா, பிப்.25:**

பீகார் மாநில சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவரான தேஜஸ்வி யாதவ் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

மிகக் குறைந்த ஆண்டு வருமானம், அதிகமான வேலைவாய்ப்பின்மை, விளையாட்டு மற்றும் மற்ற துறைகளில் குறை போன்றவற்றால் கடந்த 21 வருட தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் பீகார் ஏழ்மையான மாநிலமாக மாறியுள்ளது. முதலீடு, கல்வி மற்றும் சுகாதாரத்தின் நிலையும் மோசமாக உள்ளது.

மாநிலத்தில் தினமும் கூட்டுபாலியல் வன்கொடுமைகள், கடத்தல்கள் மற்றும் கொலைகள் நடந்து வருகின்றன. அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவையில் கேள்விகள் எழுப்பப்படும்போது அதற்கு பதில்களும் இல்லை. பீகாருக்கு சுயநினைவற்ற முதல்வர் இருப்பது துரதிர்ஷ்டம். இந்த ஊழல்வாதிகள் அரசின் கருவூலத்தையே வீணடித்துவிட்டனர், வரும் நாட்களில், அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க போதுமான பணம் மாநிலத்தில் இருக்காது.

இவ்வாறு தேஜஸ்வி யாதவ் பேசினார்.

# திருப்பதி கோவிலில் தரிசனத்திற்கு வரிசையில் சென்ற பெண் பக்தரை பாம்பு கடித்தது

**திருப்பதி, பிப்.25:**

தெலுங்கானா மாநிலம் பூபால பள்ளியை சேர்ந்தவர் மவுனிகா (வயது 27). இவர் நேற்று முன்தினம் திருப்பதியில் ஏழுமலையானை தரிசிப்பதற்காக வந்தார். ரூ 300 தரிசன டிக்கெட்டில் தரிசனம் செய்வதற்காக வரிசையில் காத்திருந்தார். தரிசனத்திற்கு ஏராளமான பக்தர்கள் வந்ததால் மோனிகா நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியது இருந்தது. அப்போது திடீரென வந்த பாம்பு ஒன்று மவுனிகாவின் காலில் கடித்துவிட்டு சென்றது. பாம்பு கடித்ததால் மவுனிகா அலறி துடித்தார். இதனைக் கண்டு வரிசையில் காத்திருந்த பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர். திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக தேவஸ்தான அதிகாரிகள் ஆம்புலன்ஸ் கொண்டு வந்து மவுனிகாவை மீட்டு சிகிச்சைக்காக அஸ்வினி ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருப்பதியில் உள்ள ரூயா ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர். தற்போது மவுனிகாவின் உடல்நிலை சீராக உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்தனர். தரிசனத்திற்கு வரிசையில் சென்ற பெண் பக்தரை பாம்பு கடித்த சம்பவம் பக்தர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது.

# மீண்டும் விபத்தில் சிக்கிய தேஜஸ் போர் விமானம்.. உயிர்தப்பிய விமானி



**புதுடெல்லி, பிப்.25:**

இந்திய விமானப்படையில் இடம்பெற்றுள்ள உள்நாட்டுத் தயாரிப்பு போர்விமானமான 'தேஜஸ்' மீண்டும் விபத்தில் சிக்கி உள்ளது. இந்த மாத தொடக்கத்தில் நிகழ்ந்த இந்த விபத்தின் விவரங்கள் தற்போது வெளியாகி உள்ளது.

வழக்கமான பயிற்சியை முடித்துவிட்டு விமானதளத்தில் தரையிறங்க முயன்றபோது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து நிகழ்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்தின் போது விமானி சாதுர்யமாகச் செயல்பட்டு பாராசூட் மூலம் குதித்ததால் எவ்வித காயமுமின்றி உயிர் தப்பினார். விமானத்தின் AIRFRAME கட்டமைப்பிற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அந்த விமானத்தை இனி பயன்படுத்த முடியாத அளவிற்கு அது சிதைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சமீப காலங்களில் தேஜஸ் விமானதிற்கு ஏற்பட்ட மூன்றாவது பெரிய விபத்து இதுவாகும் 2024 மார்ச் மாதம், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மர் அருகே முதல் விபத்து நிகழ்ந்தது. இதில் விமானி பத்திரமாக மீட்கப்பட்டார்.

கடந்த நவம்பர் மாதம், துபாய் விமானக் கண்காட்சியின் போது நிகழ்ந்த தேஜஸ் விமான விபத்தில் விங் கமாண்டர் நமான்ஷ் சியால் உயிரிழந்தார்.

தற்போது நிகழ்ந்துள்ள இந்த விபத்து குறித்து விமானப்படை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த விபத்தைத் தொடர்ந்து, தற்போது பயன்பாட்டில் உள்ள அனைத்து தேஜஸ் விமானங்களையும் விரிவான தொழில்நுட்பப் பரிசோதனைக்கு உட்படுத்த விமானப்படை உத்தரவிட்டுள்ளது.

## உக்ரைன் மீது ரஷியா தாக்குதல்; 4 பேர் பலி



**கீவ், பிப்.25:**

உக்ரைன் மீது 2022ம் ஆண்டு பிப்ரவரி 24ம் தேதி ரஷியா போர் தொடுத்தது. இந்த போர் தொடங்கி நாளையுடன் 4 ஆண்டுகள் நிறைவடைய உள்ளது. போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். போர் நிறுத்தம் தொடர்பாக பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில், ஒரு சில நிபந்தனைகளுக்கு இரு நாடுகளும் ஒப்புக்கொள்ளவில்லை.

அதன்படி, நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேரக்கூடாது, உக்ரைன் ராணுவ பலத்தை குறைக்க வேண்டும், உக்ரைனில் ரஷிய மொழி, கலாசாரத்தை பாதுகக்க வேண்டும் போன்றவை ரஷியாவின் நிபந்தனைகள் ஆகும். மேலும், போரில் ரஷியா கைப்பற்றிய உக்ரைனின் 4 மாகாண பகுதிகளில் இருந்து உக்ரைன் படைகள் முழுவதும் விலக வேண்டும் என ரஷியா நிபந்தனை விதித்துள்ளது.

ஆனால், இந்த நிபந்தனையை உக்ரைன் நிராகரித்துவிட்டது. அதேபோல், உக்ரைனின் சில நிபந்தனைகளை ரஷியா ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் இரு நாடுகளுக்கு இடையே போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில், உக்ரைனின் ஒடிசா, செப்ரொசியா மாகாணங்கள் மீது ரஷியா ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர்.202425 நிதியாண்டில், நாட்டில் 7,669 சாலை விபத்துகளும் 190 இறப்புகளும் பதிவாகியுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

## மீண்டும் தொழிலாளர் கட்சியின் பொதுச்செயலாளராக கிம் ஜாங் உன் தேர்வு!



**வடகொரியா, பிப்.25:**

வடக் கொரிய தலைவர் கிம் ஜாங் உன், ஆளும் தொழிலாளர் கட்சியின் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. நேற்று நடைபெற்ற தொழிலாளர் கட்சியின் 9வது மாநாட்டில் கிம் ஜாங் உன் ஒருமனதாக மீண்டும் அக்கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிம் ஜாங் உன்னின் தந்தையான கிம் ஜாங் இல் காலத்தில் இந்த மாநாடு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் 2016-ல் மீண்டும் தொடங்கப்பட்டது. இம்மாநாட்டில் பேசிய கிம் ஜாங், கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு "கடுமையான பொருளாதாரத் தடைகளையும்" தட்டுப்பாடுகளையும் முறியடித்து, பொருளாதார ரீதியாக பெரும் முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரவித்தார். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது மற்றும் பொருளாதாரக் கட்டுமானத்தை விரைவுபடுத்துவது கட்சியின் கடமை எனவும் தெரிவித்தார்.

அடுத்ததாக இவரது மகள் கிம் ஜு ஆய், கிம் ஜாங் உன்னின் அரசியல் வாரிசாக உருவெடுத்து வருவதாக தென்கொரிய உளவுத்துறை தெரிவித்துள்ளது. கடந்த சில நாட்களாகவே அவர் தனது தந்தையுடன் பல முக்கிய பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## "அரசியலமைப்பை பின்பற்றாமல் எனக்கு எதிராக யூனுஸ் சதி செய்தார்" - வங்கதேச அதிபர்

**டாக்கா, பிப்.25:**

வங்கதேச இடைக்கால அரசின் தலைமை ஆலோசகரான முகமது யூனுஸ் நாட்டின் அரசியலமைப்பைப் பின்பற்றவில்லை என்றும், தனக்கு எதிராக சதிச் செயலில் ஈடுபட்டதாகவும் அந்நாட்டின் அதிபர் முகமது ஷஹாபுதின் குற்றம் சாட்டியுள்ளார்.



வங்கதேசத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வங்கதேச தேசியவாத கட்சி வெற்றி பெற்று தாரிக் ரஹ்மான் பிரதமராக பதவியேற்றுள்ள நிலையில், முன்னாள் ஆட்சியாளரான முகமது யூனுஸ் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுக்களை அதிபர் முகமது ஷஹாபுதின் முன்வைத்துள்ளார்.

அதிபர் மாளிகையில், வங்காள நாளிதழான காலர் காந்தோவுக்கு அவர் அளித்த பேட்டியில், "முகமது யூனுஸ் தலைமையிலான அந்த ஒன்றரை ஆண்டுகளில், நான் எந்த விவாதத்திலும் ஈடுபடவில்லை. எனக்கு எதிராக இன்னமும்கூட சதிகள் தீட்டப்படுகின்றன. நாட்டின் அமைதியையும் ஒழுங்கையும் நிரந்தரமாக அழித்து அரசியலமைப்பு வெற்றிடத்தை உருவாக்க பல முயற்சிகள் நடந்தன.

அரசியலமைப்பின் எந்த விதியையும் முகமது யூனுஸ் பின்பற்றவில்லை. அவர் வெளிநாட்டுக்குச் செல்லும்போது எனக்குத் தெரிவிக்க வேண்டும். திரும்பிய பின் அதன் விளைவுகள் குறித்து எழுத்துப்பூர்வமாக எனக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் 14 முதல் 15 முறை வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். ஆனால் ஒருமுறைகூட எனக்குத் தெரிவிக்கவில்லை. அவர் என்னைப் பார்க்க வரவில்லை.

ஒன்றரை ஆண்டுகளாக நான் ஓர் அரண்மனைக் கைதியாக மாற்றப்பட்டேன். கொசோவா மற்றும் கத்தார் நாடுகளுக்கு நான் மேற்கொள்ள இருந்த பயணத்தை யூனுஸ் நிர்வாகம் தடுத்தது. யூனுஸ் அரசாங்கம் 133 அவசரச் சட்டங்களை கொண்டுவந்தது.

இதில், ஒரு சில சட்டங்கள் சூழ்நிலை காரணமாக அவசியமாக இருந்திருக்கலாம். ஆனால், இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்க எந்த நியாயமான காரணங்களும் இல்லை.

ஒரு கட்டத்தில் அரசியலமைப்புக்கு முரணான வழியில் எனது இடத்தில், முன்னாள் தலைமை நீதிபதியை அமர்த்த சதி செய்யப்பட்டது. ஆனால், அரசியலமைப்பு கட்டுப்பாடுகளைக் காரணம் காட்டி ஒரு நீதிபதி அந்த திட்டத்தை தடுத்தார் என தெரிவித்துள்ளார்.

## வளர்ப்பு நாய் நக்கியதால் தொற்று.. கை, கால்களை இழந்த பெண்

**நியூயார்க், பிப்.25:**

இந்திய வம்சாவளியை சேர்ந்த 52 வயதான மன்ஜீத் சங்கா இங்கிலாந்தின் வோல்வர்ஹாம்டனில் தனது கணவருடன் வசித்து வருகிறார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் மன்ஜீத் சங்கா கையில் ஒரு சிறிய வெட்டுக்காயம் ஏற்பட்டது. அதை பொருட்படுத்தாமல் மன்ஜீத் தனது செல்ல நாயுடன் விளையாடிக்கொண்டிருந்தபோது, நாய் அவரது காயத்தை நக்கியுள்ளது.



அடுத்த நாள் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. அதற்கு மறுநாளே அவர் சுயநினைவை இழந்து கோமா நிலைக்குச் சென்றார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவருக்குக் கடுமையான 'Sepsis' தொற்று ஏற்பட்டிருப்பதை உறுதி செய்தனர்.

மன்ஜீத் சுமார் 32 வாரங்கள் மருத்துவமனையில் உயிருக்குப் போராடினார். கோமா நிலையில் இருந்தபோது, அவரது இதயம் 6 முறை துடிப்பதை நிறுத்தியது.

அவரது உயிரைக் காப்பாற்ற வேறு வழியின்றி, மருத்துவர்கள் அவரது இரண்டு கைகளையும், முழங்கால்களுக்கு கீழே, இரண்டு கால்களையும் அறுவை சிகிச்சை மூலம் அகற்றினர்.

கடந்த பிப்ரவரி 18-ஆம் தேதி மன்ஜீத் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார். தற்போது அவர் செயற்கை உறுப்புகள் பொருத்துவதற்காக நிதி திரட்டி வருகிறார்.

செல்லப் பிராணிகளின் உமிழ்நீரில் இருக்கும் பாக்டீரியாக்கள், மனிதர்களின் திறந்த காயங்கள் வழியாக உடலில் நுழையும்போது இத்தகைய உயிருக்கு ஆபத்தான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

## சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பே வந்து விட்டது; ஒருதரப்பு வரிகளை கைவிடுங்கள்: அமெரிக்காவை வலியுறுத்திய சீனா

**பீஜிங், பிப்.25:**

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், 2-வது முறையாக பதவியேற்றது முதல் சீனா, கனடா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு கடுமையான வரிவிதிப்புகளை அமல்படுத்தி வருகிறார். இந்தியாவில் கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் இந்த வரிவிதிப்பு அமல்படுத்தப்பட்டது.

இதன்படி வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாக கூடிய பொருட்களுக்கான வரி விதிப்பு அதிகரிக்கப்பட்டது. இது அந்த நாடுகளுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தியது. இதன்பின்னர் தொடர்புடைய நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி, இணக்கத்துடன் நடந்து கொள்ளும் நாடுகளுக்கான வரியை டிரம்பு அரசு குறைத்தது.

இந்த சூழலில், டிரம்ப்பின் வரிவிதிப்புகளுக்கு அமெரிக்காவிலேயே எதிர்ப்பு கிளம்பியது. அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியாமல் சில வணிக நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதுதொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. அதில், டிரம்ப்பின் வரி விதிப்புகள் செல்லாது என நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பில் தெரிவித்தனர்.

எனினும், இறக்குமதிகளை ஒழுங்குபடுத்த ஜனாதிபதிக்கு அமெரிக்க நாடாளுமன்றம் அளித்து உள்ள அதிகாரத்தின்படி, வர்த்தக சட்டம் 1974, பிரிவு 122-ன் கீழ் 10 சதவீத வரி விதிப்புக்கான உத்தரவை டிரம்ப் அமல்படுத்தினார்.

150 நாட்களுக்கு செல்லத்தக்க இந்த தற்காலிக 10 சதவீத இறக்குமதி வரியானது 24-ந்தேதி அதிகாலை 12.01 மணி முதல் நடைமுறைக்கு வரும் என வெள்ளை மாளிகையும் உறுதிப்படுத்தியது. இந்நிலையில், இந்த வரியை நேற்று முன்தினம் இரவு 15 சதவீதம் என்ற அளவுக்கு உயர்த்தி, டிரம்ப் அறிவிப்பு வெளியிட்டார்.

இதனால், அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக ஆக்கும் நடைமுறை வெற்றி பெறும். இதற்கு முன்பு இல்லாத வகையில் சிறந்த நாடாக அமெரிக்கா இருக்கும் என்றும் தன்னுடைய வரி விதிப்புகளை டிரம்ப் நியாயப்படுத்தி பேசினார்.

இந்நிலையில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பே வந்து விட்ட சூழலில், ஒருதரப்பு வரிகளை கைவிடுங்கள் என அமெரிக்கா அரசை சீனா வலியுறுத்தியுள்ளது.

இதுபற்றி சீனாவின் வர்த்தக அமைச்சக செய்தி தொடர்பாளர் கூறும்போது, அனைத்து வடிவிலான ஒருதரப்பு வரி அதிகரிப்பை தொடர்ந்து சீனா எதிர்த்தே வந்திருக்கிறது. வர்த்தக போரில் ஒருபோதும் வெற்றி பெற்றவர்களே இல்லை. பாதுகாப்புவாதத்திற்கு எப்போதும் இடமே இல்லை.

அமெரிக்காவின் ஒருதரப்பு வரி விதிப்பு நடவடிக்கைகள், சர்வதேச வர்த்தக மற்றும் பொருளாதார விதிகளை மீறுவது மட்டுமின்றி, அமெரிக்காவின் உள்நாட்டு சட்டங்களை மீறுவதும் ஆகும். அது, யாருக்கும் பயன் தராத ஒன்றாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## இந்தியா- வங்கதேசம் இடையே விசா சேவை மீண்டும் தொடக்கம்

**டாக்கா, பிப்.25:**

வங்கதேசத்தில் சமீப காலமாக இந்துக்கள் மீது தாக்குதல் அதிகரித்து வருகிறது. மாணவர் இயக்க தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்து வெடித்த வன்முறையில் இந்துக்களை குறிவைத்து தாக்கினர்.

இதில் இந்து இளைஞர் தீபு சந்திர தாஸ் அடித்துக் கொல்லப்பட்டார். அதன்பின், ராஜ்பாரி பகுதியைச் சேர்ந்த அம்ரித் மண்டல், மைமன்சிங் பகுதியைச் சேர்ந்த பிஜேந்திர பிஸ்வாஸ், கெர்பங்கா பகுதியைச் சேர்ந்த கோகோன் தாஸ் உள்பட 10-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா அணிக்காக ஒப்பந்தமாகி இருந்த வங்கதேச வீரர் முஸ்தபிசுர் ரகுமான் நீக்கப்பட்டார்.

இதனால் அதிருப்தி அடைந்த வங்கதேசம் டி 20 உலகக் கோப்பை போட்டியில் விளையாட இந்தியாவுக்கு வர முடியாது என அறிவித்தது.இதற்கிடையே, வங்கதேசத்தில் இந்து இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் அதற்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற போராட்டங்களால் இரு நாடுகளுக்கும் இடையே தூதரக ரீதியான பதற்றம் அதிகரித்தது.இதனால், டெல்லி, கொல்கத்தா, அகர்தலா ஆகிய தூதரக அலுவலகங்களில் விசா சேவையை நிறுத்தி வைப்பதாக வங்கதேச அரசு அறிவித்தது. பாதுகாப்பு பிரச்சனையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அந்நாட்டின் வெளியுறவுத்துறை ஆலோசகர் தவுஹித் ஹொசைன் கூறினார். இந்நிலையில், இந்தியா வங்கதேசம் இடையே 2 மாதங்களாக முடங்கியிருந்த விசா சேவை மீண்டும் தொடங்கியுள்ளது. புதிய அரசு பொறுப்பேற்றபின் இந்தியாவுடன் சுமூக உறவை கடைபிடிக்க வங்கதேச பிரதமர் தாரிக் ரஹ்மான் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## பாகிஸ்தானில் வறுமையில் வாடும் 7 கோடி மக்கள் - 11 ஆண்டுகளில் புதிய உச்சம்

**இஸ்லாமாபாத், பிப்.25:**

பாகிஸ்தான் திட்டமிடல்&மேம்பாடு அமைச்சகம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையின்படி, அந்நாட்டில் சுமார் 7 கோடி மக்கள் தற்போது வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருகின்றனர் என்று தெரியவந்துள்ளது. அங்கு, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நபருக்கு மாதம் ரூ. 8,484 தேவைப்படுகிறது. இந்த தொகைக்கும் குறைவாக வருமானம் ஈட்டுபவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாகக் கருதப்படுகிறார்கள். அதன்படி அங்கு தேசிய வறுமை விகிதம் 29%-ஐ எட்டியுள்ளது. இது கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத உச்சமாகும். 2018-19 ஆண்டை விட தற்போது வறுமை 32% அதிகரித்துள்ளது. கிராமப்புற வறுமை 28.2%-லிருந்து 36.2% ஆக உயர்ந்துள்ளது. நகர்ப்புற வறுமை 11%-லிருந்து 17.4% ஆக அதிகரித்துள்ளது.

மிக மோசமாக பலூசிஸ்தான் மாகாணத்தில் சுமார் 50%, அதாவது இரண்டு பேரில் ஒருவர் வறுமையில் வாடுகின்றனர்.

தனி நாடும் கோரும் கிளர்ச்சியாளர்களால் பலூசிஸ்தான் பகுதிகளில் நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மக்களின் வாழ்வாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளன. பாகிஸ்தானின் வேலைவாய்ப்பின்மை விகிதம் 7.1% ஆக உயர்ந்துள்ளது. இது கடந்த 21 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச அளவாகும். கடந்த 27 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வருமான இடைவெளி அதிகரித்துள்ளது என திட்டமிடல் &மேம்பாடு அமைச்சர் அஹ்சன் இக்பால் தெரிவித்துள்ளார்.

## மெக்சிகோவில் விமான நிலையத்தில் வன்முறை; இந்தியர்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

**மெக்சிகோ சிட்டி, பிப்.25:**

மெக்சிகோவில் போதை பொருள் கடத்தல் கும்பலின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளது. அவர்கள் பல்வேறு கும்பல்களாக பிரிந்து கடத்தல் தொழிலை பரவலாக செய்து வருகின்றனர். அவர்களுக்குள் அடிக்கடி போட்டி ஏற்பட்டு கும்பல் மோதல்கள், வன்முறையும் நடைபெறுவது உண்டு.

இந்த கும்பல்களை ஒழிக்க முடியாமல் அரசு திணறி வருகிறது. நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும் அரசியல் தலைவர்களையும் இந்த கும்பல் சுட்டு கொலை செய்து விடுகிறது. இந்த சூழலில், அந்நாட்டின் சக்தி வாய்ந்த ஜாலிஸ்கோ நியூ ஜெனரேசன் என்ற போதை பொருள் கடத்தல் கும்பல் ஒன்றின் தலைவனாக நெமசியோ ஓஸ்குவெரா என்பவர் இருந்து வந்துள்ளார். கடத்தல் கும்பல்கள் இடையே எல் மென்சோ என்ற பெயரில் பரவலாக அறியப்படும் இவரை, மெக்சிகோ ராணுவத்துடன் இணைந்து சிறப்பு படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின்போது, ஜாலிஸ்கோ பகுதியில் போர்ட்டோ வல்லார்தா என்ற இடத்தில் வைத்து சுட்டு படுகொலை செய்தனர். இதனால், அந்த கும்பலை சேர்ந்தவர்கள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். உள்ளூர் செய்திகளை தொடர்ந்து கவனியுங்கள். அதிகாரிகளின் உத்தரவை கேட்டு நடந்து கொள்ளுங்கள். அவசரகாலத்தில் 911 என்ற எண்ணை தொடர்பு கொள்ளுங்கள்.

## சூடானுடனான எல்லையை மூடிய சாட் நாடு

**நிஜாமினா, பிப்.25:**

ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு சாட். இந்நாட்டின் அருகே சூடான் அமைந்துள்ளது. சூடானில்ல் கடந்த 2021-ம் ஆண்டு ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் செயல்பட்டு வருகிறார்.

அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத்தலைவராக துணை ராணுவப்படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயல்பட்டு வருகிறார்.



இதனிடையே, ராணுவப்படையின் துணை ராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை ராணுவத்துடன் இணைக்க ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார்.

இதற்கு துணை ராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரல் 15ம் தேதி முதல் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

துணை ராணுவம் கட்டுப்பாட்டில் இருந்த தலைநகர் கார்டுமினை கடந்த மார்ச் மாதம் ராணுவம் கைப்பற்றியது.

அதேவேளை, ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதலில் அப்பாவி பொது மக்களும் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில், சூடானின் டார்புர் மாகாணம் டினா நகரில் ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே கடும் மோதல் நிலவி வருகிறது. டினா நகரம் சூடானின் அண்டை நாடான சாட் நாட்டின் எல்லையில் அமைந்துள்ளது. இதனால், மோதலின்போது துணை ராணுவத்தினர் சாட் நாட்டிற்குள் நுழைந்து வருகின்றனர்.

மேலும், ஆயிரக்கணக்கான மக்களும் சூடானில் இருந்து சாட் நாட்டிற்குள் நுழைய முயன்று வருகின்றனர்.

இதனால், சூடான் உடனான எல்லையை சாட் நாடு மூடியுள்ளது. சூடானில் நடைபெற்று வரும் உள்நாட்டு போரை சாட் நாட்டிலும் பரப்ப முயற்சி நடைபெறுவதாகவும், அதை தடுக்கவே எல்லை மூடப்படுவதாக சாட் அரசு தெரிவித்துள்ளது.





# தேர்தல் ஆணைய குழு இன்று சென்னை வருகை

## புதிய கட்சி தொடங்கினார் சசிகலா



## இனி கேரளா அல்ல ‘கேரளம்’ பெயர் மாற்றத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்!



## டிடி வாழ்க்கையில் விதி விளையாடிவிட்டது

## நல்லகண்ணுவுக்கு அதிதீவிர சிகிச்சை: மருத்துவமனை தகவல்




தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 25.02.2026 புதன்கிழமை இலவச இ-பேப்பர்